323

# செங்குந்த மித்திரன்

மார்கழி 1931

4 12

JL
Y592SG m211, N28
N31.4.12
158894

1571

Registered No. M. 1514 ப்ரமோதூத ஹ்மார்கழி மீ




*The Progressive Printers* *17, Coral Merchant Street, Madras*

# "செங்குந்த மித்திரன்"

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிரப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் "செங்குந்த மித்திர"னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ. பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிக்கா ,, | 2—0—0 | ஒன்றுக்கு 0—2—6 |

# "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது,' 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்போருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூறவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த துலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத்திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் கிலிட் செய்தது. விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்கும் இடம்:—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
சேத்துப்பட்டு, சென்னை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | 418 |
| நன்கொடைகள் | ,, |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 419 |
| சீர் திருத்தப் பகுதி:—ஒற்றுமை மனத்தினுயர்வும் செங்குந்த மணங்களிற் சிலசீர்திருத்தங்களும் | 421 |
| ,, ஓர் எச்சரிக்கை:—விவாகமும் சடங்கும் | 423 |
| இளைஞர் பக்கம் | 425 |
| புது உலகமும் பழைய உலகமும்:—இங்கிலாந்தில் இருநூறு வருஷங்களுக்கு முன் பகிஷ்கார இயக்கம் | 426 |
| சமயப் பகுதி:—சிவாலய தரிசனம் | 427 |
| மாதர் பகுதி:—மாதர் கூந்தல் | 431 |
| குலதிலகர் பகுதி:—ஸ்ரீலஸ்ரீ செங்குந்த திருஞான சிவயோக முருகானந்த சுவாமிகள் ஜீவிய சரித்திரம் | 433 |
| சுகாதாரப் பகுதி:—அம்மை குத்துவதால் நன்மையுண்டா? | 435 |
| நிரூபங்கள்:—வரப்போகிற ஜனக்கணிதம் (சென்ஸெஸ் அல்லது கானிஷ்மாரி கணக்கு) | 437 |
| ,, சட்டசபையில் நமக்கு ஏன் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை? | 439 |
| செங்குந்த யாத்திரைவாசி:—குலாபிமானப் படலம் | 441 |
| நாவல்பகுதி:—மீனாட்சி சுந்தரம் அல்லது விவேகமுள்ள சுந்தரம் | 444 |
| வர்த்தமானம் | 447 |
| தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள் | 450 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 451 |
| மதிப்புரை | 455 |
| செங்குந்த மித்திரன் பஞ்சாங்கம் | 456 |

## கடவுள் வணக்கம்.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தை செய்வாம்.

---

## தலைச்சங்கத்துக்கு நன்கொடை வரவு

1. வளையற்காப்பு நன்கொடை: மாயவரம் தாலூகா மேலப்பாதி திரு. தா. பாவாடை முதலியார் வளையல் காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்துக்கு அளிக்கப்பெற்ற நன்கொடை ரூ. 0-8-0 (கிழையூர் திரு. அ. சொக்கலிங்க முதலியார் மூலம் வரவு.)

2. திரு. ஆ. வே. முத்தையப்ப முதலியார் புதுவை ரூ. 5—0—0.

## திருத்தம்

வட்டாபழ நிழல் திரு. மருதப்பா அவர்கள் திருமணத்தின்போது பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் சேர்ந்து ஆவணிமீ அனுப்பிய தொகை ரூ. 2—4—0.

## கலியாணம்பூண்டி தமிழ்ப்புலவர் திரு. நா. குமரகுரு முதலியார் அவர்கள் மூலம் தலைச்சங்கத்துக்கு வழங்கப்பெற்ற நன்கொடை விபரம்.

1. விழுப்புரம் தாலுக்கா, கலியாணம்பூண்டி திரு. ச. நாராயணசாமி முதலியார் பௌத்திரனும், தமிழ்ப்புலவர் குமரகுரு முதலியார் குமாரனுமான திருவாளர். செல்வன் நமச்சிவாயனுக்கு 11-2-30உ நடந்தேறிய கர்ணபூஷண முகூர்த்த காலத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0 குழந்தைக்கு நல்லோர் ஆசி கூறுக.

2. 4-9-30உ புதுவை முத்தியாலுப் பேட்டை திரு. க. வைத்தியலிங்க முதலியார் குமாரன் திரு. முத்தைய முதலியாருக்கும் ஷை கதிர்காமம் நா. ரா. கோவிந்தராசு முதலியார் குமாரத்தி திருவளர் செல்வி விசாலாட்சிக்கும் நடந்தேறிய திருமண காலத்தில் தமிழ்புலவர் குமரகுரு முதலியார் அவர்களாலியற்றப்பெற்ற வாழ்த்துப் பாக்கள் கூறப்பெற்று நன்கொடையாக வழங்கிய ரூ. 0—8—0. மணமக்கள் நீடூழி வாழ்க.

3. 7-9-30உ சென்னப்ப நாய்க்கன்பாளையம் நடுத்தெரு திரு. சி. நா. சாமி முதலியார் குமாரன் திருவளர்செல்வன் ஆறுமுகத்திற்கும் ஷை காமாட்சிப் பேட்டை தொப்புளான் முதலியார் குமாரத்தி திருவளர்செல்வி அரங்கநாயகிக்கும் நடந்தேறிய திருமணத்தில் நன்கொடையாக ஷையூர் குமார தேவர் வீதி திரு. பு. பா. சிங்காரவேலு முதலியார் அவர்களால் வரவு ரூபா. 0—8—0. மணமக்கள் நீடு வாழ்க.

4. பிரமோதூதஹு ஐப்பசிமீ 20உ ஷை திரு. நா. குமரகுரு முதலியார் மாமனார் புதுவை, கதிர்காமம் வேலாயுத முதலியார் சிவலோகபதவியின் நிமித்தம் நடந்த உத்தரகிரியை காலத்தில் வழங்கிய நன்கொடை ரூபா. 0—8—0.

---

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—௪] பிரமோதூத வருஷம் மார்கழி மாதம் [பகுதி—௧௨

## பத்திராசிரியர் முன்னுரை

### மகாநாடு

நம்மவர் இரண்டாவது மகாநாட்டினைக் காஞ்சிபுரத்தில் அடுத்த மாதமேனும் கூட்டி வைக்க வேண்டிய முயற்சிகளை நமது தலைச் சங்கத்தினர் செய்து வருகின்றனர் என்பதைச் சென்ற மாத மித்திரனில் வெளியிட்டிருந்தோம். இது விஷயமாகத் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் வெகு ஊக்கமாக உழைத்து வருகின்றனர். தலைச்சங்கத்திலிருந்து எழுதியுள்ள நிருபங்களுக்குப் பல கிராமங்களிலிருந்தும் வெகு உற்சாகமான பதில்கள் வந்திருக்கின்றன எனவே மகாநாடு கூட்டும் வேலை வெகு விரைவாக நிறைவேறுமென்றே நம்புகிறோம். திரு. முதலியார் அவர்களுக்கும் அவரோடு இது விஷயமாகக் கிராமங்கள்தோறும் பிரசாரத்திற்கும் வசூலுக்கும் வரும் இதர கனவான்களுக்கும் ஆங்காங்கே உள்ள பிரமுகர்கள் வேண்டிய உதவிகளைச் செய்து எடுத்துக்கொண்ட பெரிய காரியத்தை முடித்துக் கொடுப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

### கிளைச் சங்கங்களுக்கு ஓர் எச்சரிக்கை

நம்மவர் வதியும் கிராமங்களில் நிறுவப் பெற்றிருக்கும் சங்கங்கள் நம்மவருள் ஏற்கனவே உள்ள கட்சிப் பிளவுகளை நீக்கிப் பரஸ்பர அந்நியோந்நிய உணர்ச்சியையும் அதனாலுண்டாகும் ஒற்றுமையையும் நிலைநாட்டுவதற்கே உள்ளனவேயன்றி இருக்கும் கட்சிகளைப் பெருக்கி வித்தியாசங்களை உண்டாக்கி ஒரு தனித்த கூட்டத்தாருக்கோ அபிப்பிராயமுள்ளவருக்கோ தனி நபர்களுக்கோ மனப்புண் தோற்றுவித்து ஏதம் விளைவிப்பதற்கில்லை என்பதை ஷை சங்கங்களின் தலைவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இதர நிருவாகிகளுக்கும் அறிவுறுத்த விரும்புகின்றோம். ஒரு கிராமத்திலுள்ள ஒரு செங்குந்த கனவானை இழிவுபடுத்தும் எண்ணத்துடன் சங்கங்களில் தீர்மானங்களை இயற்றுவதும் அவற்றைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதும் மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். அதைக் கண்டு மற்றவரும் நம்மைப் பரிகசிக்க நேரும். அத்தகைய தீர்மானங்களைச் சங்கக் கூட்டங்களின் முன் பிரேரேபிக்க இச்சங்கங்களின் நிருவாகிகள் அநுமதிக்காதிருக்குமாறு அவர்களை வேண்டிக்கொள்ளுகிறோம். அத்தகைய தீர்மானங்கள் நிறைவேறினும் அவற்றை நம் மித்திரனில் பிரசுரிக்க அனுப்பாதிருக்க வேண்டுகிறோம். அனுப்பின் யாம் அவற்றைப் பிரசுரிக்க மாட்டோம். ஆகவே அத்தகைய தீர்மானங்களைப் பிரசுரிக்காததால் எம்மீது மனஸ்தாபங்கொள்வது வீணேயாம்.

### கல்வி இலாகாவும் நம்மினத்தவரும்

செங்குந்த மாணுக்கர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் அரைச் சம்பளம் அநுமதிக்க

ஒரு சர்க்கார் உத்தரவு இருப்பதை அன்பர்கள் அறிவார்கள். ஆனால் அவ்வுத்தரவில் நம்மவர் பெயர் 'கைக்கோளர்' என்றிருப்பதால் 'செங்குந்தர்' என்பவர்களுக்கு அத்தகைய உதவி சில இடங்களில் மறுக்கப்பட்டு வந்துள்ளது. செங்கல்பட்டில் ஒரு பள்ளிக்கூடத்தில் இதே விதம் நடந்தது எமக்கு அறிவிக்கப்பட்டதினால், செங்கல்பட்டு ஜில்லா கல்வித் தலைவர் அவர்களுக்குச் 'செங்குந்தர்' 'கைக்கோளர்' என்னும் பெயர்கள் ஒரே இனத்தவர்க்கு உரியவை என்பதை எடுத்துக்காட்டி, ஷை ஜில்லாவிலுள்ள பள்ளிக்கூடங்களின் அதிகாரிகளுக்கு இவ்விஷயமாக ஓர் அறிக்கை அனுப்புமாறு வேண்டிக்கொண்டோம். அதற்கிணங்கிச் செங்கல்பட்டு ஜில்லா கல்வித் தலைவர் அவர்கள் அம்மாதிரிமான ஒரு அறிக்கையைச் செங்கல்பட்டு ஜில்லா போர்ட்டாருக்கும் அந்த ஜில்லாவிலுள்ள உயர்தர பாடசாலைத் தலைவர்களுக்கும் அனுப்பி எமக்குந் தெரிவித்துள்ளார் இது விஷயமாக அவருக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இதர ஜில்லா கல்வி அதிகாரிகளையும் இதைக் கவனித்து இவ்விதமான அறிக்கைகளைத் தத் தம் ஜில்லாக்களில் பிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறோம். எங்காவது மேற்காட்டிய வண்ணம் இவ்விஷயமாகத் தொந்தரவு இருக்குமாயின் விவரங்களை எமக்கு உடனே அறிவிக்குமாறு அன்பர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

## பி. எல். பட்டதாரி

கொல்லங்கோடு பெரிய வீட்டைச் சேர்ந்த திரு. K. P. சுப்பிரமணிய முதலியார் பி. ஏ., அவர்களும், போளூரில் உபாத்தியாயராக இருக்கும் திரு A. S. கணபதி சங்கர முதலியார் பி. ஏ, அவர்களும் பி. எல். பரிக்ஷையில் தேறியிருப்பதாகக் கேள்விப்பட்டு மிக மகிழ்ச்சி யடைகிறோம்.

## சந்தா பாக்கி

இம்மாதம் மற்றோரிடத்தில் வெளியாயுள்ள தலைச்சங்கத்து வரவு செலவு விவரங்களிலிருந்து, ஏறக்குறைய பத்தாயிர ரூபாய்கள் வரையில் சந்தா பாக்கி இருக்கலாம் என்பதையும், உபகாரச் சம்பள நிதியாக இருக்க வேண்டிய தொகையே சந்தா வரவு குறைவாக இருக்கும் நிலைமையில் பத்திரிகை செலவுக்காக எடுத்துக்கொள்ளப் பெற்றிருக்கிறதென்பதையும் இவ்வேற்பாடு தற்காலிகமானதே ஒழிய நிலையானதாக இருக்க முடியாதென்பதையும் கூர்ந்து எவரும் உணர்ந்து கொள்ளலாம். சந்தா பாக்கிகளை வசூலித்து வரத் திரு. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் சேலம் ஜில்லாவிலும், திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் வட ஆற்காடு ஜில்லாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். அவர்களிடம் யாதொரு பாக்கியும் நிறுத்திக்கொள்ளாது சந்தா தொகைகளைக் கொடுத்துவிடுமாறு இந்த ஜில்லாக்களிலிருக்கும் அன்பர்களை வேண்டிக்கொள்ளுகிறோம். இதர ஜில்லாக்களிலுள்ள அன்பர்களும் தமது பாக்கிகளை மணியார்டர் மூலம் யாதொரு தாமதமுமின்றி அனுப்பி வைக்க வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர். இது விஷயமாகப் பலர் மிக்க அசிரத்தையாக இருப்பதைக் காண எமக்கு நிரம்பவும் மனவருத்தமுண்டாகின்றது. மாதந் தவறாது வீடு தேடிவரும் நமது மித்திரனை இரண்டு மூன்று வருஷங்களாக வாங்கி வைத்துக்கொண்டு சந்தா அனுப்பாதிருக்கும் மனப்பான்மை நம்மவருக்குள் அதிகமாக இருப்பது நம்மவர்களின் யோக்கியதைக்கும், விவகார ஒழுங்கிற்கும், குலப்பற்றினுக்கும் மிக்க இழிவினை உண்டாக்குகின்றது என்பதை அன்பர்கள் அறிவார்களாக.

## செங்குந்தமித்திரன் போட்டிப் பரீக்ஷை

மித்திரனில் அச்சிட்டால் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலிருக்குமளவு கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி வரும் முதல்தரமான வியாசத்திற்கு ஐந்து ரூபாய்கள் பரிசு அளிக்கப்பெறும். வியாசங்கள் மித்திரன் ஆசிரியருக்கு 1931ஸு ஜெனவரி மாதம் 15-ம் தேதிக்குள் அனுப்பப்பெறல் வேண்டும். பரீக்ஷை முடிவும் பரிசுபெற்ற வியாசமும் மாசி மித்திரனில் வெளியாகும்.

விஷயம்:

நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையும் அவற்றை வளர்க்கும் முறைகளும்.

158894



# சீர்திருத்தப் பகுதி

## ஒற்றுமை மணத்தினுயர்வும் செங்குந்த மணங்களிற் சில சீர்திருத்தங்களும்

(திரு. ஜ. க. பெருமாள்சாமி முதலியார் அவர்கள், செந்தமிழ் மாணவர், பவானி)

நாம் நமது அபிப்பிராயங்களைக் கூறுமுன் நமது குலப் பெருந் தலைவர்கள் கூற்றினைக் காட்டுவாம். அத் தலைவர்களின் கூற்றுக்களைக் கொண்டே எனது முடிவு சிறந்ததெனக் கொள்ளலாமெனக் கருதுகிறேன். அத்தலைவர்களின் கூற்றுக்களாவன:--முதல் மகாநாட்டுத் தலைவர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார், பி. ஏ. பி. எல்., அவர்கள் முடிவுரையில் கூறியதாவது:- "பழைய வழக்கங்கள் யாதொரு ஆதாரமு மற்றனவாக விருந்தால அவைகளை நாம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பது ஞாயமாகுமா பாருங்கள். அன்றியும் புராதன பழக்கங்களெல்லாம் உயிரற்ற பழக்கங்களேயாகும். அப் பழக்கங்களால் முன்னேற்றத்திற்கு இடையூறுக ளுண்டாகின்றனவே யன்றி நன்மை யாதொன்றுங் காணோம். அவைகளை நாம் நன்றாய் யோசித்துப் பார்க்காததினாலேயே அவைகளுடன் நமக்குக் குருட்டு அபிமானம் இருக்கிறதேயன்றி சற்று நிதானித்து நோக்குவோமேயானால் அவைகளெல்லாம் வெறும் வெளித்தோற்றங்களாகவே புலப்படும்... ......... (இன்னும்) பல வழக்கங்கள் நாம் கவனித்துப் பார்க்காததினாலேயே வெறும் ஆதாரமற்ற குருட்டுப் பழக்கங்களாக இருக்கின்றன. முதியவர்களாக இருக்கும் நமக்கு இதுபோன்ற பழக்கங்களின் வேடிக்கையும் விபரீதமும் புலப்படுகிறதில்லை: இளைஞர்களுக்கு நன்றாகத் தெரிந்து விடுகிறது. அவர்கள் ஆக்ஷேபிப்பார்கள். அவர்களுக்குத் தக்க பதில்களாவது சொல்லுகிறோமில்லை. என்ன செய்கிறோம்? மிரட்டி அதட்டி விடுகிறோமே யொழிய ஞாயமான பதில்கள் அளிப்பதில்லை" (விபவஸு பங்குனி மாத மித்திரன் 88, 89 பக்கங்கள்)

"ஆகையால் தான், மேலும் மேலும் யான் சொல்வது: முன்னேற்றத்திற்குரிய சீர்திருத்தங்களை இடர்ப்படுத்தாதீர்கள். உங்களுக்குப் பிரியமில்லா விட்டால் சும்மா இருந்து விடுவதே மேல்; இடர் செய்வது பாதகம்; சேர்ந்துழைப்பது புண்ணியம். நம்மிஷ்டம் எதுவானாலும், நமது பிள்ளைகள் ஒழுக்கம் அடிப்படையாக முன்னுக்கு வர வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள். அப்போது தான் நமது குலம் மேம்படும். அதை விட்டுப் பழைய கதைகளும் ஒழுங்குக்கு விரோதமான கொள்கைகளும் நம் முன்னேயே அழிந்து போகட்டும், நம்மோடே மறைந்து போகட்டும்." (ஷை. ஷை, 91 பக்கம்)

சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர் திரு, வா செ. செங்கோட்டையா முதலியார் அவர்கள் சொற்பெருக்கில் கண்டதாவது:—

"நமது வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? அவ்வக்காலங்களின் நாகரிக வளர்ச்சிக்கேற்ப நம்மைச் சீர்திருத்திக் கொள்ளாத குறை யென்றே கூறுவேன். மற்றவர்களைப் போல் காலத்திற்குத் தக்கபடி நம்மைப் பக்குவப் படுத்திக் கொண்டே வந்திருந்தோமாயின் இத்தகைய நிலைமைக்கு வந்திருக்க மாட்டோம் என்பது திண்ணம். கல்வி, கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் முதலிய எல்லாத் துறைகளிலும் நம்மவர்கள் பழைய கருப்பண்ணன்களாகவே விளங்குகின்றனர். புதிய முறையை ஒரு சிறிதும் கைப்பற்றுவதேயில்லை. ஏதாவது புதுமுறையைப் புகுத்த முயலுவோமாயின் உடனே "பழங்காலைத் தூர்க்காதே" புதுக்காலைத் தோண்டாதே" என்றும், 'இது பரம்பரைப் பழக்கம்' என்றும் கூற முற்படுகின்றனர். இது வரை நாம் அர்த்தமற்றக் குருட்டுப் பழக்கங்களைக் கையாண்டு வந்ததால் வந்த நன்மை போதும் இன்று முதலாகவாவது உலக மாறுதலுக் கேற்றவாறு தொழின் முறைகளையுஞ் சீர்திருத்திக் கொண்டு உலகமாந்தரின் பெரிய போட்டியில் ஆண்மையுடன் முன்னேறிச் செல்வோமாக. நாம் பின் தங்குவோமாயின், பின்னே வருகின்றவர்கள் நம்மை மிதித்துக் கொண்டு முன்னேறிச் செல்ல நாம் அடியோடு அழிந்து பாழ்படுவோம்"(விபவஸு தை, மாசி மாத மித்திரன் 21 பக்கம்)

வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர் திரு. நா. மு. சண்முக சுந்தர முதலியார் அவர்கள் சொற்பெருக்கில் கண்டதாவது:......"முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள எல்லாவற்றையும் களைந்தெறிய முற்படவேண்டும். இவ்வகையிலே வயது வந்தவர்களது மனஸ்தாபம் உண்டாகாமற் போகாது. அதன் பொருட்டுப் பின்னடைதல் அறிவும் ஆண்மையுமுள்ள செங்குந்த வாலிபர்களுக்குச் சிறிதும் அடுக்காது; சமூகம், தேசமிவற்றின் நிலைமையையும், காலத்தின் போக்கையும் தெரிந்து அவற்றிற் கேற்றவாறு நமது கல்வி யறிவையுஞ் செயலையும் பிறவற்றையும் பயன் படுத்தத் துணிதல் வேண்டும். இல்லையேல் நாம் பிற சமூகங்களின் முன் எந்த விதமான பெருமையையும் அடையமாட்டோம். பிற சமூகங்களின் பெரு முயற்சியால் நமது தேசம் தான் விரும்பும் சுயராஜ்யத்தைட்

பெற்ற பொழுது கூட நம் சமூகம் சரியானபடி கவனிக்கப்படமாட்டாதென்பது திண்ணம். பிற்போக்கான பழைய கொள்கைகளையே கைக்கொண்டு பழமை பாராட்டும் வயது வந்தவர்களெல்லாம் "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற புறனடையைக் கொண்டு சாமாதான மடைந்து கொள்ளட்டும்." (விபவ ௵ தை மாசி ௴ மித்திரன் 58-ம்பக்கம்)

......"இடையில் வந்த அர்த்தமில்லாத பழக்க வழக்கங்களெல்லாம் ஒழிந்து போக வேண்டியனவே. காலத்திற்கும் தேசத்திற்கும் அவற்றினிடையே வசிக்கும் ஜனங்களுக்கும் ஏற்பட்ட பழக்க வழக்கங்களும், ஆசாரங்களும் மதக்கொள்கைகளும் கூட அவ்வப்போது ஏற்றவாறு மாறுதலடைந்தே வந்திருக்கின்றன. இதுவே உலகத்தின் போக்குமாகும். அறிவு முதிர்ந்து பக்குவமாகின்ற பொழுது உண்மையைத்தானுணர முற்படும். இதுவே அதனியல்பு. நம் தேசத்தேயுள்ள கொள்கைகளில் தவறானவைகளெல்லாம் வெகு காலந்தொட்டே அப்போதைக்கப்போது அவற்றின் தீமையை யுணர்ந்த உண்மை யறிவாளிகளால் தக்கவாறு கண்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் இது வரை ஒரு சிலர்க்கே தோன்றுவனவாயிருந்தன." (டை டை, 60 பக்கம்)

வாலிபர் மகா நாட்டுத் தலைவர் திரு. மா. வே. பீமராஜா முதலியார் அவர்களின் சொற் பெருக்கில் கண்டதாவது:—

......'-எப்பொருள்......அறிவு' என்ற பெரியோர் வாக்கியத்தைப் பின் பற்றி, நம் முன்னோர்கள் எல்லா மறிந்தவர்கள், நம்மினும் மேம்பட்டவர்கள் என்றும்; முற்காலத்தில் எழுதி வைத்துள்ள யாவும் மறுக்கப்படாத உண்மைகளே யென்றும் நம்பி, நம் அறிவை மழுங்கவிடாது, துர் அபிப்பிராயமின்றி, அதாவது நடு நிலைமையோடு விஷயத்தைச் சுய அறிவோடு கூர்ந்து நோக்கும் உண்மை ஆராய்ச்சித் திறன் நமக்குச் சேரவேண்டும்.........மத விஷயத்தில் சில முரட்டுத்தனமான நம்பிக்கைகளை நாம் விட்டுவிடவேண்டும். நம் முன்னோர்கள் மிகுந்த அறிவாளிகள், அவர்கள் எழுதி வைத்த உயரிய உண்மைகள் நமது புத்திக்கு எட்டாதவை என்று நினைத்து மூடபக்தர்களாயிருத்தலாகாது. பின் வருவோருக்கு உபயோகப்படவேண்டு மென்ற எண்ணத்தோடுதான் நூல்கள் எழுதி வைக்கப்படுகின்றன. நமக்கு விளங்காது என்று சொல்லக் கூடியவை நமக்கு வேண்டாம். நமக்குச் சரியென்று தோன்றாதவற்றை ஒரு போதும் நம்பக் கூடாது. நம்பினும் நிலையா." (டை, டை. 71-ம் பக்கம்)

நமது குலத்தலைவர்களின் சொற் பெருக்கேயன்றி ஓர் தீர்மானத்தையும் ஈண்டுக் குறிப்பிடுவாம்.

"இளைஞர்கள் அறிஞர் கூடிய கூட்டங்களிற் கலந்து விஷயங்களை யறிதல், போட்டி போடுதல் முதலான பலவகையிலும், அறிவு விளக்கமாகும்படி புரிதலும், சுயமரியாதை அல்லது தன் மதிப்புக்குத் தறைவான பழக்க வழக்கங்கள், பண்டை வழக்கங்களேயாயினும் அவைகளையும் தேகவன்மையைக் குறைக்கும் தீய பழக்கங்களையும் தவிர்த்தலும் வேண்டு மென்று இம்மகா நாடு தீர்மானிக்கிறது" (4-வது வாலிபர்க்கான தீர்மானங்களில் 20 வது தீர்மானம். விபவ ௵ பங்குனி ௴ மித்திரன் 83-ம் பக்கம்) இவைகளைக் கவனிக்க.

வாசகர்களே! நமது முன்னோர்கள் இத்தகைய மங்களச் சடங்குகளை ஏற்படுத்தியது நமது நன்மைக்கே யன்றித் தீமைக்கல்ல வெனின், அச்சடங்குகளினால் வரும் நன்மைகள் எவை? அச்சடங்கு நீக்கப் படுவதால் வரும் தீமைகள் எவை? நாமோ சடங்குகளை வைத்துக் கொள்வதால் மணவினைக் காலம் நீடிக்கிற தென்றும், அதனாற் பொருட்செலவு அதிக மேற்படுகின்ற தென்றும், பொருளறியாது சடங்குகளைப் புரிந்து வருகின்றன ரென்றும், பெரும்பான்மையான சடங்குகள் பிற மதத்தினரால் இழிவாகக் கருதப்படுகின்றன வென்றும் கூறியுள்ளோம். மேற் கூறியவைகளெல்லாம் தீமைகளே என நாம் தடையின்றிக் கூறுவோம். மேற்கண்ட பழக்க வழக்கங்கள் இருந்தே நமது குலம் முன்னேற்றமடைய வகையின்றி யிருக்கிறதெனக் கூறுவோம். அது ஒன்றே நமது குலத்திற்குப் பெருந் தீமை யன்றோ? ஆனால் பெரியோர்கள் நமது குலத்திற்குத் தீமை வரவேண்டுமெனக் கருதியா சடங்குகளை யியற்றினார்கள்? எனக் கேள்வி பிறக்கலாம். ஆனால் அவர்கள் இருந்த காலத்தே அச்சடங்குகள் வேண்டப்படுவனவாயிருந்திருக்கலாம். அது கொண்டு அவர்கள் அவைகளை ஏற்படுத்தி யிருக்கலாம். அது கொண்டே நாகரீகம் பரவும் இக்காலத்து - இயற்கை வன்மையையும் வெல்பவர்கள் வாழும் இக்காலத்து-முன்னையதே வேண்டுமெனக் கூறுவதா? ஆனால் ஆதிகாலத்தை எடுத்துக் கொள்வோம். அக்காலத்திருந்த வழக்கப்படியா இப்போது நாம் இருந்து வருகிறோம்? இல்லவே இல்லை. அவ்வப்போது பல மாறுதல்களை யடைந்து வந்திருக்கிறோம். ஆதிகாலத்தில் விவாகங்கள் காதல் மணங்களாகவே நடைபெற்றுவந்தன. மணமகளே மணமகனைத் தேடிக் கொள்வான். பின்னால் பல்லாரறியப் பறைசாற்றி மணம்புரிவர். இவ்வழக்கம் பொருளிலக்கணங் கற்றோர்க்குக் கூறாமலே விளங்கும். ஆகவே அவ்வழக்கப்படியே நாமும் இப்போது நடந்து கொள்ளலாமே. அங்ஙனமின்றி நாம் இப்போது மாமன் மனையில் வாக்குறுதி பெற்று மணமகன் மணமகளைப் பார்த்திராதவனானாலும் மணத்தை முடிக்கின்றோம். இவ்வழக்கத்தையும் நமது முன்னோர்கள் ஏற்படுத்தியதுதான். ஆனால் அவர்களும் ஆதி வழக்கத்தை மாற்றிக் 'காலமறிந்து நடவாதான் கோலமறியாக் குரங்காவான்" என்பதை எண்ணி நூதன (புது) வழக்கத்தைக் கையாண்டனர். புது வழக்கத்தை ஓர் முறையாக வகுத்து



வைத்தனர். இதுபற்றி யன்றோ "பொய்யும் வழுவும் நிறைந்தன பின்னர்-ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற சூத்திரமும், "பழையன கழிதலும் புதியன புகுதலும்-வழுவல கால வகையினானே" என்ற சூத்திரமும் ஏற்பட்டன. எனவே அவ்வழக்கங்களையே நாம் கையாண்டு வரவேண்டுமெனக் கூறுவோமே யானால் எல்லா விதத்திலும் நாம் அப்படியே நடந்து வருகிறோமா? இல்லையே. அப்படி யிருக்க அவைகளை வேண்டுமெனக் கூறுவது எத்தகையவரின் கூற்றாக்கெனை நீங்களே ஆராய்ந்து கொள்ளுங்கள். அங்ஙனமன்று, வேண்டியவற்றை எடுத்துக் கொள்ளலாம். வேண்டாதனவற்றைத் தள்ளி விடலாம். முழுவதும் வேண்டாமெனக் கூறுவது பொருந்தாதே யெனின், உண்மையே, வேண்டுவன எவையோ? அறுகம் பொன் எடுத்தல், வெள்ளியும் பொன்னும் எடுத்தல், ஆயிரப் பெருந்திரி விளக்கு வைத்தல் முதலிய சடங்குகள் இன்றியமையாதனவோ? அச்சடங்குகளால் வரும் நன்மை எவைதாம் என எத்தனை காலம் யோசித்தாலும் ஒன்றும் (ஒரு நன்மையாவது உண்டா என்பது) இல்லை என்ற முடிவே வரும். அச்சடங்குகள் நீங்கப்பெறின் கல்யாணத்திற்கு வரும் இடையூறென்ன? மணமக்கள் சுகங்கெட்டு இல்வாழ்க்கையை நடத்தி வருவார்களா? இச்சடங்குகளை புரியாத மதத்தினரும் நம்மவர்களுக்குள்ளேயே இச்சடங்குகளைப் புரியாதவர்களும் சுகங்கெட்டா வாழுகின்றனர்? இல்லவே யில்லை. ஆகவே அச்சடங்குகள் அவசியம் வேண்டப்படுவனவாம். எனவோ, மற்றெந்த விதமாகவோ கூறலெற்றுக்கு?

இனி, குறிப்பாற் சடங்கைக் கொண்டு உட்கருத்துக்களை விளக்காமல், தமிழ் மொழியிலேயே அக்கருத்துக்களைப் பல்லார் உணரப் பகிரங்கமாய் வெளியிடல் சாலச் சிறந்த தென்பதைப் பற்றிக் கூறுவாம். நமது சமூகம் 6 லட்சம் ஜனத்தொகை கொண்டதாயிருந்தும் 30 பேரே பட்டதாரிகளாயிருப்பதாலும், படித்தவர்கள் மிகச் சிலரே யிருப்பதாலும், பெரும்பான்மையான மக்களுக்குக் கல்வியறிவில்லாமையாலும், படித்தவர்களிற் கூடப் பலர் உட்கருத்துக்களை யறியாதவர்களா யிருப்பராதலாலும், உட்கருத்துக்களைத் தெரிந்த சிலர் பிறருக்குத் தெரியும்படி கூறுவதில்லை யாதலாலும், அச்சடங்குகளைப்பற்றிய உண்மையான வரலாறுகளும் கருத்துக்களும் பரவுவதற்கு மார்க்கமில்லையாய் விட்டது. எனவே கருத்தறியாது சடங்கினையியற்றல் பசியறியாது உணவுண்டலை யொக்குமன்றோ? "என்னமோ வழக்கம்" எனச் செய்கிறார்களே யொழிய வேறொன்றுமில்லை. இதனால் வரும் பயனென்ன? எந்தச் சடங்குகளாயிருப்பினும் அவற்றின் உட்கருத்துக்களைச் செவ்வனே தமிழ் மொழியிற் கூறி வருவோமேயானால் அம்மொழிகளைக் கேட்பதால், குணமாறுபாடுடைய பெண்களும் சதிகள் நடந்து வரும் முறையினை உணர்ந்து குணமுடன் இல்லற வாழ்க்கையை நடத்த இயலுமன்றோ?

அன்றியும் நாம் மேலே எடுத்துக்காட்டிய நமது குலத்தலைவர்களின் சொற்பெருக்கினைச் சிறிது ஆராய்ந்தால் நாம் கூறுவன யாவும் பொருத்தமானவையே என எவரும் கூறுவர். அன்றியும் வாலிபர்க்கு என முதல் மகா நாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றான நாம் மேலே எடுத்துக்காட்டியுள்ள தீர்மானத்தில் "சுயமரியாதை அல்லது தன் மதிப்புக்குக் குறைவான பழக்க வழக்கங்கள் பண்டைய வழக்கங்களே யாயினும் அவைகளையும்............தவிர்த்தலும் வேண்டுமென இம்மகா நாடு தீர்மானிக்கிறது" என்ற விஷயத்தை ஒவ்வொரு இளைஞனும் கருத்திற் பதித்து நடத்தல் கடனன்றோ? ஆனால் அத்தீர்மானத்தைக் கொண்டே சுயமரியாதையாளர் கொள்கையைப் பூரணமும் அனுசரிக்க வேண்டுமென நாம் கூறவந்தோமில்லை. பொருத்தமானவற்றைக் கோடல் வேண்டுமெனவே கூறுகிறோம். ஆகவே, வாசகர்களே! எமது சிற்றறிவால் விளக்கிய சீர்திருத்தத்தை ஆராய்ந்து அடைவன கொள்க.

---

# ஓர் எச்சரிக்கை

## விவாகமும் சடங்கும்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் 'தமிழர'சில் 16-10-30-ல் எழுதியது.

பல ஆண்டுகளாக நமது நாட்டில் ஆரியக் கொள்கை பரவிப் பல துறைகளிலும் வேரூன்றி இருக்கின்றன. ஆரியக் கொள்கையை ஆங்கில அரசாங்கமும் சகலர்க்கும் சட்டமாக்கி அரசு செலுத்தி வருகின்றது. அவற்றுள் ஒன்றாகிய விவாகச் சடங்கைக் கவனிப்போமானால் உண்மை விளங்கும்.

ஆங்கில அரசாங்கத்தார் நமக்கு விதித்துள்ள இந்துலாவில் சதிபதிகளாகிய இருவருக்கும் விவாகக் கட்டுப்பாடானது புரோகிதனைக்கொண்டு மந்திரம் சொல்லித் தாலிகட்டியும், அம்மி மிதித்தும், அருந்ததி காட்டியும், நவக்கிரகசாந்தி முதலியன செய்து முடிக்கும் திருமணமே சட்டப்படி செல்லத் தக்கது. அத்தகைய சடங்கோடு மணந்த மனைவியே இல்லாள், அவளுக்கு உண்டாகும் புத்திர உற்பத்தியே நியாயமானது, சட்டப்படி சொத்துக் குரிமையுடையது என்று சட்டம் கூறப்பட்டிருக்கின்றது.

மேல் சொன்னவை பார்ப்பனரல்லதாருக்கு ஏற்பட்டு விடப் பார்ப்பனர் மேல் சொன்ன விதிப்படி

ஒரு பார்ப்பனரல்லாதாரின் பெண்ணை மணந்தாலும் அத்தகைய மணத்தாலும் சந்ததிக்குச் சொத்துரிமை கிடையாது என்று இந்துலா கூறுகிறது.

பார்ப்பனர் பார்ப்பனரல்லதாரின் பெண்ணை மணந்து கொண்டால் மணந்த சதிபதிகளுக்கு உண்டாகும் புத்திர சந்ததிகளுக்குச் சொத்துரிமை எப்படி கிடைக்க மாட்டாதோ அதுபோல, ஆரியச் சடங்கின்றி நிகழும் திருமணத்தால் உண்டாகும் சந்ததிகளுக்கும் தகப்பனின் சொத்துக்களில் பாத்தியதையில்லை என்று இந்துக்களுக்கு இந்துலா கூறுகின்றது.

ஆரியச் சடங்கின்றி நிகழும் திருமணத்தால் உண்டான சந்ததிகளை வைப்பாட்டிச் சந்ததியாகவே சட்டம் தீர்மானிக்கின்றது. அத்தகைய சந்ததிகளுக்குத் தகப்பன் சொத்தில் ⅙-ல் ஒரு பங்கு உரிமை உண்டென்று சட்டம் விதித்திருப்பதால் ஆரியச் சட்டத்தை மீறச் சாத்தியமின்றி மக்கள் ஒழுகி வருகிறார்கள்.

ஆரியச் சட்டத்தை அனுசரிக்காத சில வகுப்பினர்களைக் கீழானவர்களென மதித்து அத்தகையார்களுக்கு ஒரு சட்டமும் ஏற்படுத்தாமல் சமயத்திற் கேற்றதுபோல் இஷ்டப்படி சட்டத்தைக் காட்டாமல் தீர்மானங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையில் ஜோகிகள், குறவர்கள், வில்லியர்கள், ஆதி திராவிடர்கள், தோட்டிகள் முதலான பல சாதி மக்கள் இருக்கின்றார்கள்.

இந்த வகுப்பார்களுக்கு நாளது வரையில் ஒரு சட்டமும் ஏற்பட்டதாய் இந்துலாவில் காணப்படவில்லை. இதைக் கவனிப்பாரும் கிடையாது.

சட்டமின்றி எத்தனை ஏழை மக்கள் ஆளப்பட்டு வருகின்றனர் என்பதை எந்தச் சட்டசபை அங்கத்தினரும் உணர்ந்து இருப்பதாய்த் தெரியவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிரிமினல் சட்டம் இருக்கின்றது என்றாலும் சிவில் சட்டம் இல்லை என்பதை ஒருவரும் கவனிக்காதது காலத்தின் கொடுமையா? அல்லது ஏழை மக்களின் கல்விக் குறைவா? என்பதை உலகம் உணரவேண்டும்.

இந்த நிலையில் நமக்குச் சட்டம் ஏற்பட்டு இருக்கும் இந்நாளில் நம்மில் பலர் இது நீதியற்றது என்றும், பார்ப்பனர் நம்மை ஏமாற்றி விட்டார்கள் என்றும் சொல்லிக் கொண்டு சீர்திருத்த முறையில் தமிழர்களின் வழியில் ஆரியச் சடங்கின்றிய திருமணமே திருமணம் என்று கூறிச் சீர்திருத்த திருமணத்தை நிகழ்த்தி வருவதைப் பத்திரிகைகளில் காண்கின்றோம்.

இக்காலத்தில் நடக்கும் சீர்திருத்தத் திருமணத்தில் மந்திரமும், அம்மி மிதித்தலும், அருந்ததி காட்டலும் இல்லாததாலும், பார்ப்பனர் புரோகிதம் செய்யாததாலும், அத்தகைய திருமணத்தை இந்துலாபடி செல்லத்தக்கதன்றென்று நமது அய்யங்கார் வழக்கறிஞர்கள் வாதித்துச் சொத்துரிமையைச் சந்ததிகள் அனுபவிக்காதபடி செய்து விடுவதும் தவிரத் தாங்கள் பீஸ் மூலம் பாகம் போட்டுக்கொண்டு சொத்தைக் குலைத்துவிட மாட்டார்களா? இதைக் கவனியாமல் அவசரப்பட்டுச் சட்டத்தைத் திருத்தாத முன்னும் நம்மிஷ்டம் போல் திருமணம் செய்வது ஒழுங்காகுமா?

சீர்திருத்தத் திருமணம் செய்ய விரும்பும் அன்பர்களே, தலைவர்களே, இனியேனும் நமது நிலைமையை நன்கு ஆராய்ந்து, நூறு பேர் சேர்ந்த ஒரு சங்கத்தை அமைத்து அச்சங்கத்தில் சகல சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தி அதன்படி ஒழுகும் அங்கத்தினர்களைச் சேர்த்துப் பதிவு செய்து கொண்டு பதிவு செய்த அங்கத்தினர்களுக்கு நடக்கும் திருமணத்தைப் பதிவு புத்தகத்தில் பதிப்பித்துச் சதிபதிகளைச் சங்க உறுப்பினர்களாக்கிக் கொண்டு திருமணத்தைச் சீர்திருத்த முறையில் நிகழ்த்துவோமானால் அத்தகைய திருமணமே சட்டத்துக்குப் பொருந்தியதாகவும் செல்லத் தக்கதாகவும் இருக்கும்.

ஆரியச் சடங்குகளைச் செய்யும் முறையை மாற்றிச் சுப அசுப காரியங்களை நடத்தும் வகையைப் பல அறிவாளிகளைக் கொண்ட கூட்டம் கூட்டி வாதித்து வரையறுத்துத் தீர்மானத்தை அச்சடித்துப் பலர்க்கும் பயன்படச் செய்தலாகிய அரிய பெரிய காரியத்தைச் செய்வதே முறையாகும்.

ஒன்று இந்துலா திருத்தப்படல் வேண்டும், அல்லது நாம் இந்துமதச் சட்டத்தை நிராகரித்துவிட்டு நமக்கெனச் சிலச் சட்ட திட்டங்களைப் பலர் சேர்த்து வகுத்துக் கொள்ள வேண்டும். இவ்விரண்டிலொன்றைக் கைக்கொள்ளாது நாம் சீர்திருத்தத் திருமணம் செய்வது சொத்துரிமையையும் பெண்களின் ஜீவனாம்சத்தையும் பாதிக்கக் கூடியது என்பதை அனைவரும் உணர்தல்வேண்டும்.

எல்லா விதமான புத்தகங்களுக்கும்
ஸவுத் இந்தியன் புக் டிபோ, 17, பவழக்காரத் தெரு, சென்னை.
என்று எழுதுங்கள்






Lead, kindly light, amid the encircling gloom,
Lead thou me on!
The night is dark, and I am far from home—
Lead thou me on!
Keep thou my feet, I do not ask to see
The distant scene—one step enough for me.

I was not ever thus, nor pray'd that
Shouldst lead me on.
I loved to choose and see my path, but now
Lead thou me on!
I loved the garish day, and, spite of fears,
Pride ruled my will: remember not past years.

So long thy power hath blest me, sure it still
Will lead me on,
O'er moor and fen, o'er crag and torrent, till
The night is gone;
And with the morn those angel faces smile
Which I have loved long since, and lost awhile.

——**Cardinal Newman.**

### மொழி பெயர்ப்பு

நிலைமண்டில வாசிரியப்பா.

இரக்கமுள் ளொளியே, எங்கணும் எனக்கு
இருளாய் இருப்பதால் ஏங்கி நிற்கின்றேன்.
மனஞ் சிறிதிரங்கி வழிகாட்டாயோ?
இரவின் இருளோ இயம்பவொண் ணாது,
வீடோ வின்னும் வெகுதொலை யுளது,
ஆதலிற் கொஞ்சம் அகமிளகாயோ?
உனக்கியை வழியே எனக்கும் சம்மதம்.
தூரத் துள்ள தோற்றந் தன்னைக்
காட்டா யென்று கேட்டே னில்லை;
அடர்ந்த விந்த ஆரிருள் தாண்டி
அடியொன்று பெயரினும் அதுவே போதும்.
இத்தகை நிலைமையில் இருந்திலேன் என்றும்.
என்மனம் போன எவ்வழி யேனும்
நானே பார்த்து நடந்தேனல்லது
ஒப்பிலா வொளியே உன்னை நோக்கி
வழிகாட் டென்று வணங்கியு மறியேன்.
நானெனும் பேய்க்கு நானு ளாகி
நிலையில் பான்மையின் உலகவின் பத்தில்
பயமொன் றின்றி மயங்கிக் கிடந்தேன்
அருளே செறிந்த அற்புத வொளியே,
சென்றதை யெல்லாம் சிந்தையில் வையேல்.
இதுவரை காத்தநீ யிப்பே ரிரவிலும்
காடும் மலையும் கான்யாற் றோடு
அனைத்தையும் தாண்டி அழைத்தே குவையெனும்
எண்ணம் எனக்குத் திண்ணமா யுண்டு.
கங்குல் நீங்கிக் கதிரோன் தோன்றினால்
பன்னாள் விரும்பியும் சின்னா ளாகப்
பாரா திருந்த பனித்தண் முறுவலைத்
தெய்வத் தன்மை திகழும் முகங்களில்
கண்டுகண் டடியேன் களிமிகக் கொள்வேன்.
ஆதலி னாலே அருள் மிகுமொளியே,
எனக்கு வழிகாட்டி இட்டே காயோ?

M. R. பெருமாள் பி. ஏ. ஹானர்ஸ்
வகுப்பு மாணவர் திருச்சி.

### "ஜூஜூ"

நாங்கள் வளர்த்துவந்த ஜூஜூ—அது
நமன்பதி சென்றதையோ நரர்பதி தாண்டி
வெள்ளை நிறமுடைய ஜூஜூ—அதில்
வெளுத்த சிவப்புப்பட்டை சிலவுண்டு பாரே
குட்டியாக வந்ததந்த ஜூஜூ—வெகு
குட்டையல்ல நெட்டையல்ல குலம்நல்ல ஜூஜூ
ஓங்கி வளர்ந்ததைய ஜூஜூ—அதைப்
பாங்காய் வளர்த்தோமைய பாலூட்டி நாங்கள்
எழிலுடன் திகழ்ந்தது ஜூஜூ—ஆனால்
ஏமாற்றிச் சென்றதையோ எங்களையே ஜூஜூ
ஆறு மாதத்திற்குள் ஜூஜூ—ஐயோ
ஆடியோடி மாளிற்றுயர் ஆறிடுமோ ஜூஜூ
எத்தனைக் குணங்களெண்ணி ஜூஜூ—நாங்கள்
ஏங்கித் தயங்கிடுவோம் எங்கள் நல்ல ஜூஜூ
உருவென்ன உணர்வென்ன ஜூஜூ—மிகு
திருவென்ன திறனென்ன திடமென்ன ஜூஜூ
தோட்டத்தைச் சுற்றிவரும் ஜூஜூ—இடை
ஓட்டமு நடையுமாக ஓடிவரும் ஜூஜூ
நாடியெமை நக்கிவிடும் ஜூஜூ—உட
னடிக்களித்துப் பின்ன ரோடிவிடும் ஜூஜூ
தெரிந்தவரைக் காணில் ஜூஜூ—அவர்
தேடியோடிக் கூடியாடும் தீமையற்ற ஜூஜூ




## இங்கிலாந்தில் இருநூறு வருஷங்களுக்குமுன் பகிஷ்கார இயக்கம்

அந்நியநாட்டுப் பொருள்களை மறியல் செய்து அகற்றுவது தப்பிதம் என்று கண்டனம் செய்யும் இந்தியர்கள், ஒரு காலத்தில் ஆங்கிலேயர் இந்தியர்களது பொருள்களை மறியல் செய்ததினால் நம்மவர்களுக்கு உண்டான கஷ்டத்தையும் நஷ்டத்தையும் சரித்திர மூலமாகக் கூர்ந்து பார்ப்பார்களாக. இங்கிலாந்தில் 1675-ஆம் வருஷத்தில் ஆங்கிலேய வர்த்தகர்கள் இந்திய காலிக்கோ துணிகள் தங்களுடைய கம்பளத் துணிகள் வியாபாரத்தைக் கெடுத்துவருகிறதாக எண்ணி இந்திய காலிக்கோ துணிகள் தங்கள் நாட்டில் பிரவேசிக்கக் கூடாத முயற்சிகளைப் பலமாக எடுத்துக் கொண்டார்கள். ஆங்கிலேய வியாபாரிகள் இந்திய காலிக்கோ துணியினால் தங்கள் செல்வவிருத்தி குறைவதாகவும், அதனால் அதை இங்கிலாந்தில் இறக்குமதி செய்யக்கூடாது என்று மொழிந்தார்கள். அத்துடன் நில்லாமல் அக்காலத்தில் மும்முரமா யிருந்த மத சச்சரவை ஆதாரமாகக் கொண்டு அதன் வாயிலாக இந்திய வியாபாரத்தை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். இந்திய வியாபாரம் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு உணவு கொடுப்பதாகவும், கிறிஸ்தவர்கள் பட்டினி கிடக்கச் செய்வதாகவும் ஜனங்களுக்குக் காட்டினார்கள். அதனால் அவர்கள் தங்கள் வியாபாரத்தைப் பலப்படுத்தி இந்திய வியாபாரம் தலையோங்க வொட்டாமல் செய்யப் பல சூழ்ச்சிகள் செய்தார்கள். முதலில் ஏற்றுமதியாகும் காலிக்கோ துணிகளுக்கு அதிக சுங்கவரி போட்டுக் காலிக்கோ துணிகள் அதிகமாக வெளியே இந்தியாவை விட்டு இங்கிலாந்துக்குச் செல்ல வொட்டாமல் தடுத்தார்கள்.

இத்துடன் நில்லாமல் ஆங்கிலேய வியாபாரிகள் மற்றும் சட்ட மூலமாகவும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டார்கள். 1701ஆம் வருஷத்தில் இந்திய காலிக்கோ துணிகளை ஒருவரும் உபயோகப்படுத்தக் கூடாதென்றும், அப்பொழுது கையிலிருந்த மூட்டைகளைக் கிடங்கில் பூட்டி வைக்கவேண்டும் என்றும், சுங்க அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட கமிஷனர்கள் ஆதரவில் இந்த மூட்டைகள் மீண்டும் ஏற்றுமதி ஆகும் வரையில் இருக்கவேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அமுல் செய்து கொண்டார்கள். விலக்கப்பட்ட காலிக்கோ துணிகள் சட்டைகளுக்கேனும் அல்லது சாமான்களுக்கேனும் ஒவ்வொரு ஆங்கிலேயனும் உபயோகப்படுத்த கூடாதென்றும், அப்படி எவனாவது சட்டவிரோதமாக காலிக்கோ துணிகளை விற்றாலாவது அல்லது அணிந்தாலாவது அவன் உடனே 200 பவுன் அபராதத்திற்கு உட்படுவான் என்றும் சட்ட வாயிலாக விளம்பரம் செய்தார்கள்.

ஆனால் இந்திய காலிக்கோ துணிகள் அதிக நாணயமா யிருந்ததால் 1721ஆம் வருஷத்தில் சட்டத்தையும் அபராதத்தையும் கவனியாமல் அதிகமாய் உபயோகப்படுத்தப் பட்டன. ஆகையால் பார்லிமெண்டு சட்டம் ஒன்று கம்பளத் துணிகளைக் காப்பாற்ற ஏற்படுத்தப்பட்டது. இதனால் காலிக்கோ துணிகளையே அணியலாகாது என்று கண்டிப்பாய் கூறப்பட்டது. 1794ஆம் முதல் 1824ஆம் வரையில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு இறக்குமதியான சாமான்களுக்கு அளவிட முடியாத சுங்கவரி போடப்பட்டது.

ஆகையால் 1840ஆம்-த்துக்குப்பிறகு அங்கும் இங்கும் வீடுகளில் கையினால் நூற்கப்பட்ட துணிகள் விற்கப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டும் இருந்ததைத் தவிரவியாபாரம் அறவே ஒழிக்கப்படவே, இந்தியா கைத்தொழிலில் சிறந்து விளங்கிய தேசத்தின் மதிப்பிலிருந்து குறைக்கப்பட்டு விவசாயதேசமாய் மாறிவிட்டது.

ஒரு சரித்திர மாணவர்.

[425-வது பக்கத் தொடர்ச்சி]

வேறு மனிதர் வரக்காணில்—மிகச்
சீறிக் குரைத்திடுமே சிப்பாயென ஜூஜூ
கோபக் குறியறியும் ஜூஜூ—எங்கள்
தாபக் குறியறிந்து தாண்டிவிடும் ஜூஜூ
சந்தோஷக் குறிகண்டு ஜூஜூ—வெகு
சந்தோஷ மாகவிளை யாடிடுமே ஜூஜூ
மணலிற் படுத்துவலை தோண்டும்—வாயிற்
றுணியைப் பிடித்திழுத்துத் துள்ளிவிளையாடும்
பாய்ந்து மடியில் வந்து குதிக்கும்—அங்கே
சாய்ந்து படுத்துறங்கும் சிறுகுட்டி ஜூஜூ
நன்றியினை என்ன சொல்வோம் ஜூஜூ—அதில்
ஒன்றுமே மனிதர்க்கிலை உண்மையெங்கள்ஜூஜூ
பகலிர வெப்பொழுதும் ஜூஜூ—எமை
இகலோர்களேமாற்றித் திருடாது ஜூஜூ
கடிமிகப் புரிந்தது ஜூஜூ—ஆனால்
மிடிபட்டு மடிந்தது மீளமுடி யாதே
பேரின்றிப் பேரெடுத்த ஜூஜூ—அது
நேரின்றி நிலவிற்று நன்றி நிறைவாலே
தோட்டத்தின் ஆயமூலை யொன்றில்—நன்று
துயிலிற் படுத்துளது துயரயர் வின்றி (நாங்கள்)

ஜெ. தங்கவேல், சென்னை இராஜதானிக் கல்லூரி, பி. ஏ. வகுப்பு மாணவர்.



# சமயப் பகுதி

## சிவாலய தரிசனம்

(திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்)

"கண்ணுதலாலய நோக்குங் கண்களே கண்கள்
கறைகண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்"

எய்தற்கரிய மானுடப் பிறவியை யெடுத்த நாம் கடவுள் வணக்கமாகிய சிவாலய தரிசனஞ் செய்தல் அத்தியாவசியமாக மிகவும் வேண்டற்பாலது. சிவாலய தரிசினம் செய்து முற்றிய பிறகே இரவில் போஜனத்துக்குச் செல்ல வேண்டுமென்பது வேத சிவாகமங்களின் றுணிபு. இதனை முக்கியமாகச் சைவ சமயிகளும் சிவ பாம்பரையினரான நஞ் செங்குந்த குலத்தவர்களும் கடைப்பிடித்தொழுக வேண்டியது மிக்க அத்தியாவசியம். இப்பொழுதும் பல சைவ சமயிகள் இந்நியமத்தைக் கை விடாது அனுஷ்டானத்திற் கொண்டொழுகுவதை நாம் நேரில் கண்கூடாகக் காண்கிறோம். நம் செங்குந்த குல மரபினர்களிலும் சிவாலய தரிசனம் செய்து முற்றிய பிறகுதான் போஜனத்துக்குச் செல்ல வேண்டும் என்னுங் கொள்கையை நியமமாகக் கடைப்பிடித் தொழுகும் புண்ணிய சீலர்கள் பலர் இன்றும் இல்லாமலில்லை. எவ்வளவோ பேர் இருக்கின்றார்கள்.

"முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்
அந்திவா னொளியான்ற னணுமலை
சிந்தியா வெழுவார் வினை தீர்த்திடும்
கந்தமா மலர்சூடுங் கருத்தனே."

என்று நமது அப்பர் சுவாமிகள் கூறுகிறார். சிவாலய தரிசனம் செய்வோரடையும் பலனை நம்மால் அளவு படுத்திக் கூறலாந் தன்மைத்தன்று. சிவாலய தரிசனம் பிரதி தினமும் காலை, மாலை, அர்த்தசாமம் என்னு முப்பொழுதினுஞ் செய்வது உத்தமம். இயலாதவர்கள் காலை மாலை யென்னு மிருபொழுதினும் செய்யக்கடவர். அதுவும் இயலாதவர்கள் காலையிலேனும் மாலையிலேனும் செய்யக்கடவர். பிரதி தினமும் ஆலய தரிசனஞ் செய்ய முடியாதவர்கள். சோமவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, சிவராத்திரி, விநாயக சதுர்த்தி, கந்தசஷ்டி, சரஸ்வதி பூஜை முதலிய விசேட நாட்களிலாயினும் சிவாலய தரிசனஞ் செய்யக்கடவர். சிவாலயமென்பது முக்கண் மூர்த்தனாகிய எல்லாம்வல்ல சிவபெருமான் (மங்கலப் பொருளாகிய சிவம்) இலிங்க மூர்த்திச் சொரூபமாய் மூலட்டானத்தில் எழுந்தருளி யிருக்கப் பெற்ற ஆலயமே சிவாலய மெனப்படும். இனி ஆலயமென்பது ஆ + லயம் எனப்பிரித்து, ஆ—பசு, ஆன்மா (பசுவென்றால் பாசத்தால் பந்தப்பட்டிருக்கும் சீவான்மாவைக் குறிக்கும்) என்றும், லயம் என்பது லயித்தல் அதாவது ஒடுங்குதல் அல்லது ஐக்கியப்படுதல் என்றும் பொருள்படும். எனவே பரமான்மாவுடன் சீவான்மாவை ஐக்கியப்படுத்துவிக்கும் மார்க்கத்தில் பொருந்தவைத்தற்குரிய புனிதமான இடமே சிவாலய மெனப்படும் என்பது திரண்ட பொருள். எய்தற்கரிய இம்மானுட பிறவியே கடவுள் வணக்கஞ் செய்தற்குரிய சிறந்த பிறவியாகும். "மானிடப்பிறவி தானும் வகுத்தது மனவாக்காய ஆனிடத்தைந்து மாடுமரன் பணிக்காகவன்றோ" என்று பெரியாரும் பணித்திருக்கின்றனர். நமது ஞான மாதாவாகிய ஔவையாரும் "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்றும், "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் கூறியிருக்கிறார்கள். ஆலயந் தவிர வேறு எந்த இடத்தில் இருந்தபோதிலுங் கூட கடவுளைப்பற்றிய ஞாபகம் நமக்கு வருவதேயில்லை. எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நீக்கமின்றி நிறைந்த பரிபூர்ணமாய் விளங்கும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணம், நமது இருதயத்தில் வேரூன்று மளவும் நமக்கு விக்கிரக வணக்கம் அவசியம் வேண்டற்பாலதே. ஆலயத்துள்ளே சென்று அதனுள் மந்திரசக்தியினாலமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகத்தைக் கண்டதும், அதைச்சாக்ஷாத் எம்பெருமானாகவே பாவித்து அவருக்குரிய சகல வணக்கங்களையும், தோத்திரங்களையும் செய்கிறோம். அவ்விக்கிரகங்களுக்குச் செய்யப்படும் வணக்கமும் தோத்திரமும் உபசாரமும் சர்வேசுரனாகிய கடவுளுக்குச் செய்ததாகவே கருதுகிறோம். உண்மையும் அவ்விதமே. ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்கிரகித்தல் என்னும் பஞ்சகிருத்தியஞ் செய்யும் முழு

முதற் கடவுளாகிய சிவபெருமானும், அவ்வாறே விக்கிரகங்களினின்றும் இருந்து நாம் செய்யும் பூசனையாதி வணக்கம் தோத்திரம் உபசாரம் இவைகளை அன்புடன் ஏற்றருளுவர். அப்படிக்கிருக்க, நாக யுகத்தில் முதிர்ந்து விட்டோமென்று சொல்லிக் கொள்ளும் பலர் விக்கிரக வணக்கம் செய்தல் பாபமென்றும், கல்லினாலும், செம்பினாலும், மரத்தினாலும், மானிட ரூபமாகச் செய்யப்பட்ட விக்கிரகங்களா நம்மைக் காப்பாற்றி ரக்ஷிக்கும் சக்தியுடையன என்றும், இவ்வித வணக்கத்தால் நாம் ஒரு பயனையும் அடைய முடியாது என்றும், கடவுள் சர்வ வியாபிதானே? அவர் தான் நீக்கமின்றியெங்கும் நிறைந்திருக்கிறாரே? அப்படிக்கிருக்க நாம் எங்கிருந்து வேண்டுமானாலும் கடவுளைத் தியானம் செய்யலாமே? மஹான்களெல்லாம் இருந்த இடத்திலிருந்தே கடவுள் தியானஞ் செய்து பலனடைய வில்லையா? இதெல்லாம் சோம்பேறித்தனமுள்ள வீணர்களின் வேலை என்றும் கூறி ஏளனம் செய்து எரிவாய் நரகிற் கிரையாகின்றனம். "கல்லினுஞ் செம்பினுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" என்னும் திடவைராக்கிய சீலர்களான மகான்களின் வாக்கியத்தால் வாய் ஞானம் பேசிக் காலங் கழிக்கின்றனர். என்னே இவர்களின் அறியாமை! இம்மூடர்கள் அம்மகான்களின் நிலையை யடைந்து விட்டார்களா? கடவுளை யறியும் அவ்வளவு திடசித்தமும், ஞான அறிவும், இவர்களிடத்திலுண்டா? இல்லவே யில்லை. வாசவன், அரி, அயன், வானநாட்டுளோர் முதலிய கடவுளர்க்கும், திருஞான சம்பந்தராதி சைவ சமயாசிரியர் நால்வரும், அறுபான் மும்மை நாயன்மார்களும், தாயுமானவர், பட்டினத்தார் முதலிய மகான்களும் விக்கிரக வணக்கம் செய்து முத்தி யடையவில்லையா? சித்திபெற வில்லையா?

"வாழ்த்த வாயும் நினைக்கமட நெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே னெடுங்காலமே?

என்று மகான்களெல்லாம் எழுதியிருக்கின்றார்கள். எனவே சிவாலய தரிசனம் செய்வது எடுத்த பிறவியின் பயன் என்பதும், மானிட மெடுத்தோரின் முக்கிய கடமை யென்பதும், இதனால் நன்கு பெறப்படுகின்றது.

சிவாலய தரிசனம்செய்ய விரும்புவோர், ஆலயத்துக் கருகிலுள்ள சிவதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து, தோய்த் துலர்ந்தனவாகிய சுத்தமான இரண்டு வஸ்திரங்களை அரையிற் றரித்துத் திருநீறணிந்து அக்கமணி பூண்டு, சந்தியாவந்தனாதி ஜெபதப நித்திய கருமானுஷ்டானங்களைச் செய்து முடித்துக்கொண்டு நன்றாய்க் கழுவப்பட்ட தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை கருப்பூரம் முதலியன வைக்கப்பட்ட ஒரு சுத்தமான பாத்திரத்தைக் கையி லேந்திக்கொண்டு, சிவ சிந்தனையோடு பஞ்சாக்கர மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, வாகனாதிகளின்றி நடந்து செல்லுதல் வேண்டும். சிவபெருமானையும் கடவுளர்களையும், சிவாக்கினியையும், குருமார்களையும் சேவிக்கப்போமிடத்து வெறுங்கையுடனே செல்லாமல் தாமாவே கொடுத்தற்கியன்ற பதார்த்தத்தை அவர்களது சந்நிதியிலே வைத்து வணங்குதலே தகுதி. பொருளில்லாதாகப் பத்திர புட்பமேனும் கொடுத்து வணங்குதல் வேண்டும். அதுவுஞ் செய்ய முடியாதவர்கள் சிவாலயத்திலுள்ள செத்தை, புல், பூண்டு முதலியவற்றைப் போக்கியேனும் வணங்குதல் வேண்டும். இவ்வாறு திருக்கோயிலைச் சமீபித்தவுடன் தூல லிங்கமாகிய கோபுரத்தையும் தூபியையும் வணங்கித் துதித்து, ஆங்குள்ள திருக்குளத்தில் கைகால்களைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு, ஆசமனம் பண்ணித் தீர்த்தத்தைச் சிரமீது புரோக்ஷித்துக் கொண்டு மனத்தின் கண் மாறாச் சிவ சிந்தனையோடு உள்ளே செல்லுதல் வேண்டும். ஆலயத்தினுள்ளே புகும்போது வாசற்படியைச் சிரம் பொருந்த வணங்கி, அதனை இரு கைகளாலும் தொட்டு இருகண்களிலு மொற்றிக் கொண்டு. வலது காலை முதலில் தூக்கிப் படியை மிதியாது மெதுவாய் உள்ளே வைத்து, பிறகு இடது காலையும் அவ்விதமே தூக்கி உள்ளே வைத்து, பிறகு இடது காலையும் அவ்விதமே தூக்கி உள்ளே வைத்துச் செல்லவேண்டும். சிவ தரிசனம் செய்து கொண்டு ஆலயத்தினின்றும் வெளியே வரும்போதும் மேற்கூறிய வண்ணமே, சுவாமிகள் சந்நிதியை எதிர் நோக்கி நின்ற நிலையில், புறங் காட்டாது பின் சென்று இடது காலை முதலிலும் வலது காலைப் பிறகுமாக வெளியே வைத்து முன் போலவே படியைச் சிரம் பொருந்த வணங்கி, இரு கைகளாலுந் தொட்டு இரு கண்களிலு மொற்றிக் கொண்டு வீட்டிற்குச் செல்லுதல் வேண்டுவது முறை. நிற்க.

இவ்வண்ணம் திருக் கோயிலுக்குட் சென்றதும் இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக் கொண்டு, உச்சி கூப்பிய கையினராய்ப் பத்திரலிங்கமாகிய பலிபீடத் தருகில் சென்று ஆங்கு பாசமாகிய ஆணவ மலத்தைப் பலி யிட்டு (பலி - நிவேதனம், பீடம் - இடம், எனவே 'பலி பீடம்' என்பதற்கு நமது ஆணவ மலத்தைப் பலியிடும் இடம், அதாவது தஹிக்கும் இடம் என்பது பொருள்). முக்குற்றங்களையு மறவே யொழித்துப் புனிதனாய்க் கொடி மரத்தை (துவஜஸ்தம்பம்) உச்சியிலிருந்து அடி வரையும் நோக்கி, பலிபீடத்தையும் துவஜஸ்தம்பத்தையும் இடபத்தையும் வணங்கிக் கும்பிட்டு, பலி பீடத்துக்கு இப்பால் அடியற்ற மரம்போற் சாய்ந்து, வலக்கையைக் கொடி மரத்தை நோக்கி நீட்டி, பின் இடக்கையை நீட்டி வலக்கையுடன் சேர்த்துக் குவித்து நெற்றித் தரையில் நன்றாய்ப் பொருந்தக் கும்பிட்டு, பிறகு இரு கரங்களையும் அம் முறையிலே திரித்து, இரு புயங்களும் தரையில் நன்றாய்ப் பொருந்தும்படி நீட்டி வலக் காதைப் முன்னும் இடக்காதைப் பின்னுமாகத் தரையிலே பொருந்தச் செய்து நமஸ்கரித் தெழுந்து



கும்பிட வேண்டும். இவ்விதம் நமஸ்கரித்தல் 'சாஷ்டாங்க நமஸ்காரம்' எனப்படும். நமஸ்காரம் மூவகைத்து. அவையாவன:—

(1) அட்டாங்க வணக்கம்:—நெற்றி, இரு காதுகள், மார்பு, இரு புயங்கள், இரு கால்கள் ஆகிய எட்டு உறுப்புக்கள் நிலத்தில் தோயும்படி வணங்குதல்.

(2) பஞ்சாங்க தெண்டன்:—தலை, இரு கைகள், இருகால்கள் ஆகிய ஐந்துறுப்புக்களும் நிலத்தில் தோயும்படி வணங்குதல்.

3) திரியாங்க வந்தனம்:—இரு கைகளையுந் தலைமேற் குவித்து வணங்குதல்.

அபிஷேக சமயம், நிவேதன சமயமில்லாத மற்ற சமயங்களில் ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் பண்ணுதல் வேண்டும். திரியாங்க நமஸ்காரம் இவ்விருபாலார்க்கும் பொது. நமஸ்காரம் மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், எழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும், பண்ணல் வேண்டும். ஒரு தரம் இரண்டு தரம் பண்ணுதல் குற்றம். வடக்கு நோக்கித் தலை சாய்த்து வணங்குதல் உத்தமம். கிழக்கு மத்திமம். ஏனைய திக்குக்களில் தலை சாய்ந்து வணங்குதல் கூடாது. கிழக்கு நோக்கிய சந்நிதியிலே பலி பீடத்துக்கு அக்கினி மூலையினும், தெற்கு நோக்கிய சந்நிதியிலும் மேற்கு நோக்கிய சந்நிதியிலும் பலி பீடத்துக்கு நிருதி மூலையினும், வடக்கு நோக்கிய சந்நிதியிலே பலி பீடத்துக்கு வாயு மூலையிலும் சிரசை வைத்து முற் சொல்லியபடி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். இவ்விதம் நமஸ்காரம் செய்து எழுந்து நின்று இரண்டு கைகளையுங் குவித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டாயினும், தேவார திருவாசகாதி தோத்திரப் பாக்களை ஓதவேண்டும். சிவபெருமானை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், எழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பதினைந்து தரமாயினும், இருபத்தொரு தரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும். இதனை

"எழுமூன் றல்லா லெம்மூன் றொன்பானே யைந்து
வழுவல மூன்றுஞ் செய்வலம்"

என்னுஞ் சைவசமய நெறியானுணர்க. விநாயகரை ஒரு தரமும், சூரியனை இரண்டு தரமும், பார்வதிதேவியாரையும் விட்டுணுவையும் நந்நான்கு தரமும் பிரதக்ஷிணம் பண்ணுதல் வேண்டும். இதனை

"கணபதிக் கேகமாகுங் கதிரவற் கிரண்டேயாகும்
எணிலொரு மூன்றே யீசற் குமைதனக்கே நான்கே
மணிவணனை மாலுக் கீரிரண்டாக மன்னும் [யும்
விணின் மதிசூடிக் கின்னும் பல விதம் விளபபு
வாமே."

எனவரும் அருணகிரி புராணச் செய்யுளானறிக. பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே அபி நிழலேனும், துவஜஸ்தம்ப நிழலேனும் இருப்பின், அந்நிழலில் மூன்று கூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லுதல் வேண்டும். கடவுள் உற்சவங் கொண்டருளுங் காலத்தில் உடன் செல்லும் பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காது செல்லலாம். அப்போது இந்நியதி யில்லை. அபிஷேக காலத்தில் உட் பிராகாரத்தில் பிரதக்ஷிணம், நமஸ்காரம் முதலியவை செய்தலாகாது. பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலுள்ள பலி பீடத்தையும் இடபதேவரையும் சேர்த்துப் பிரதக்ஷிணம் பண்ணுதல் வேண்டும். தாம் பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்திலே பலி பீடமும் இடபமும் இல்லையாயின் அதற்கு வெளிப் பிராகாரத்தில் உள்ள பலி பீடத்தையும் இடபத்தையும் சேர்த்துப் பிரதக்ஷிணம் பண்ணுதல் வேண்டும். சிவலிங்கத்துக்கும் அந்தந்த ஆவரணங்களில் உள்ள பலி பீடத்துக்கும் இடபத்துக்கும் இடையே போகலாகாது. இப்படி காலோத்திராகமங் கூறுகின்றது.

இந்த முறையிலே மேலே கூறிய வண்ணம் பிரதக்ஷிணம் பண்ணிச் சந்நிதானத்திலே நமஸ்காரம் செய்து எழுந்து கும்பிட்டுத் துவார பாலகர்களிருவரையும் வணங்கி வாயிற்படி கடந்து உட்சென்று பின்பு கண நாயகராகிய திருநந்தி தேவரை வணங்கித் தோத்திரஞ் சொல்லித் துதித்து "நந்தி யெம்பெருமானே! தேவரீரது திருவடியை யடைந்த நாயேன் உள்ளே சந்நிதியில் சென்று சிவ பெருமானைத் தரிசித்து வணங்கிப் பயன் பெறும் பொருட்டு அடியேனுக் கனுமதி தந்தருள்வீராக!" என்று விண்ணப்பித்துக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும். உட் சென்று முன்னே விக்கினேசுரருடைய சந்நிதியை யடைந்து இரு கைகளையுங் குவித்து அவரைத் தரிசித்து மனதிலே தியானித்து முட்டியாய்ப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மும்முறை குட்டி வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும், பிடித்துக் கொண்டு மும்முறை தாழ்ந்தெழுந்து தோத்திரஞ் செய்து வழிபடுதல் வேண்டும். ஆலயத்துட் சென்றவுடன் முதலில் நாம் ஏன் கணபதியை வழிபடவேண்டும் என்றாலோ, ஆறாதாரங்களுக்கும் மூலாதாரமே பிரதானமாதலாலும், அம் மூலாதாரக் கடவுள் கணபதியே யாதலாலும், அவருக்கு விக்கின ஈசர் என்ற திருநாமமும் உண்டாதலாலும், நம்முடைய பக்திக்கு யாதொரு விக்கினமும் நேராவண்ணம் அருள்புரியும்படி அவரை முதலில் பிரார்த்திக்க வேண்டுமென்பது நமது முன்னோர்கள் ஏற்படுத்திய முறை. விநாயகரை முதலில் வணங்கிச் செய்யப்படுங் காரியம் யாதொரு இடையூறுமின்றி எளிதில் சித்திபெறு மென்பது வேதங்களின் துணிபு. இன்றும் இவ்வனுபவத்தைக் கைம்மேற் பலனாகக் காணலாம்.

இவ்வாறு கணபதி தரிசனம் செய்து கொண்ட பிறகு இரண்டு கரங்களையும் சிரசிலே குவித்துக் கொண்டு சிவபெருமானுடைய சந்நிதியையடைந்து அவரைப் பெருகிய மெய்யன்போடு தரிசித்து மன

திலே தியானித்துச் சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து, மனங்கசிந்துருக, உரோமஞ் சிலிர்க்க, ஆனந்த அருவி சொரிய, முப்பத்திரண்டு ராகங்களுக்குள்ளே அவ்வக்காலங்களுக்கேற்ற இராகத்துடன் உத்தமோத்தமமாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்று சொல்லக்கூடிய பஞ்ச புராணத் தோத்திரமாகிய அருட்பாக்களை திருத்தமாக இனிமையுடன் ஓதித்துதித்து விதிமுறை வணங்கி வழிபாடு செய்தல் வேண்டும். சிவபெருமானைப் பூசகரைக் கொண்டு (குருக்கள், அர்ச்சகர்) வில்வ பத்திரத்தினாலே, அஷ்டோத்திரம் அல்லது சகஸ்திர நாமங்களினால் அருச்சனை செய்வித்துக் கிரமமாய்ச் சத்தி செய்யப்பட்ட பழம் தேங்காய் கனி வருக்கம் முதலியவற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணி, விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு, பூசகருக்கு இயன்ற தக்ஷிணை கொடுக்க வேண்டும். ஆதிசைவப் பிராமணர்கள் அர்த்த மண்டபத்திலும், க்ஷத்திரியர்கள் மகா மண்டபத்திலும், வைசியர்கள் இடபத்துக்கு முன்னும், சூத்திரர்கள் இடபத்துக்குப் பின்னுமாக இருந்து தரிசித்து வணங்கி இருக்கவேண்டு மென்று அஞ்சுமான் ஆகமம் புகல்கின்றது. இம்முறையிற் சிவ தரிசனம் செய்து கொண்டு, பின்னர் சபா நாயகரையும் (நடராஜர்) தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும், சைவசமயாச்சாரியர்களான நால்வரையும், அறுபான்மும்மை நாயன்மார்களையும் விதிமுறை வணங்கித் துதிக்க வேண்டும். அதன் பின்னர் பார்வதி தேவியாருடைய சந்நிதியை யடைந்து சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலி செய்து அவரைத் தரிசித்து மனசிலே தியானித்து முன் சொன்னவாறே பூசகரைக் கொண்டு குங்குமார்ச்சனஞ் செய்வித்து, பழம் தேங்காய் கனிவர்க்கம் தாம்பூலாதிகளால் நிவேதிப்பித்து, தோத்திரம் சொல்லித் துதித்துக் குங்குமப் பிரசாதம் பெற்றுத் தரித்துக்கொண்டு நவக்கிரக சந்நிதியை யடைந்து, ஒன்பது தரம் வலம் வந்து நவக்கிரகங்களையும் நன்மை பயக்குமாறுவேண்டி வணங்கித் துதித்து மீண்டும் பிரதக்ஷணம் செய்து சண்டேசுரர் சந்நிதியை யடைந்து வணங்கித் தோத்திரஞ்செய்து, தாளத்திரவியம் பண்ணி (தட்டுதல்) சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்திக்க வேண்டும். அதன் பின்னர்க் கடைசியாகத் திருநந்திதேவரை யடைந்து வணங்கித் துதித்துப் பலிபீடத்துக்கு இப்பால் வந்து மும்முறை நமஸ்கரித்து எழுந்து வடக்கு நோக்கி யுட்கார்ந்து சிவபெருமானைத் தியானித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் இயன்ற வுருச் செபித்து எழுந்து வீட்டுக்குப் போகுதல் வேண்டும். தரிசனம் செய்து திரும்பும்பொழுது சிவபெருமானுக்கும் இடப தேவருக்கும் புறங்காட்டாது திரும்புதல் வேண்டும்.

(தொடரும்.)


## மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,

தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்

**40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.**

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா 8 தபாற் செலவு அணா 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,

கீழ்ப்பாக்கம், சென்னை.







## மாதர் கூந்தல்

[திரு. ம. தட்சிணாமூர்த்தி முதலியார், B. A.]

பல நாட்டு ஜாதியார் பல விதமாகக் கூந்தலை வாரி முடித்து அழகு செய்துகொள்ளுகிறார்கள். பெரும்பாலும் மேல் நாட்டிலுள்ள ஸ்திரீகள் மயிரைக் கத்தரித்து விடுவதை ஒரு நாகரிகமாகக் கொண்டு வெட்டி விட்டு வருகிறார்கள். அவர்களைப் பார்த்து நம் மக்களில் சிற்சிலர் அளகத்தை வெட்டி விட்டு விசித்திரமாகப் பின்னிவிட்டுக் கொள்கிறார்கள். கூந்தலின் அழகைக் கண்டறிந்தவர்கள் அவ்வாறு செய்யார்கள். மேலும் நம்நாடு மிகவும் உஷ்ணமான நாடு. ஆகையால் சூரிய வெப்பத்தினால் பெண்கள் மூளை அதிர்ச்சி பெறுவண்ணம் அவர்கள் தலையில் மயிர் அடர்ந்திருப்பது அவர்களுக்கு நன்மை தரும். தலையில் மயிர் இருப்பதனால் பார்வைக்கு அழகாய் ஒருபுறம் தோன்றினாலும், அது மூளைக்குப் பெரிய பாதுகாப்பாயு மிருக்கிறது. மூளை எப்பொழுதும் குளிர்ந்த ஸ்திதியிலேயே யிருக்க வேண்டும். அப்படி மூளை குளிர்ந்திருந்தால் பெண்கள் வெகு பரப்பரப்புடனும் மிக்க புத்திசாலத்தனமாகவும் வேலை செய்வார்கள். மூளை உஷ்ணத்தினால் தாக்கப்பட்டால் மதிகலங்கி யாதொரு காரியமும் செய்ய முடியாது. தலையில் அடர்ந்திருக்கும் மயிர் எப்பொழுதும் சூரியன் வெப்பம் தாக்காதபடி மூளையைக் குளிர்ச்சியாகவே வைத்திருக்கும். ஆகையால் கூந்தலை வளர்ப்பதினால் இந்தப் பெரும் நன்மை யுண்டாகிறது.

பெண்கள் நாகரிகம் முதல் முதலில் அவர்கள் உடையிலும், பின் அவர்கள் கூந்தலை வித விதமாகப் பின்னி முடித்துப் பலவித புஷ்பங்களைச் சூடி அழகு பார்ப்பதுமாகிய இவைகளிலும் தோன்றிற்று. ஆகையால் ஆதி முதற்கொண்டு பாவையர்கள் மயிரை வளர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார்கள். இப்பொழுது இப் பழக்கத்தை ஒரு சிலர் அனுசரிக்கிறார்கள். இந்த மயிரைச் செவ்வையாய்ப் பாதுகாக்காவிட்டால் சிக்கல் உண்டாகி, சடை பிடித்து, அதனால் பேன் தோன்றி, மிகவும் தொந்தரவைக் கொடுக்கும். இந்தக் கூந்தலை எப்பொழுதும் சுத்தம் செய்து பேன் பிடிக்காமல் வைத்திருந்து சிறிய தொட்டிகள் போன்ற இந்த மயிர் வளரும் கண்ணறைகளுக்குச் செம்மையாய் எருவிட்டு வளர்த்து வந்தால், மயிர் அடர்ந்து நீண்டு, கருமை நிறம் கொண்டு, சுருண்டு, மடிந்து, படிந்து வளரும்.

தலையில் பல மயிர் வளரும் தொட்டி போன்ற கண்ணறைகள் இருக்கின்றன. இவை கெடாமல் இருந்தால் மயிர் தானாகவே அதிகமாக வளரும். இவைகள் கெடுவதற்குச் சுண்டும் பேன்களும் காரணம். தலையில் சுண்டு இருந்தால், அதைத் தக்ஷணமே அகற்ற வேண்டும். அது கண்ணறைகளிலுள்ள சத்தை உறிஞ்சி எடுத்துவிடுகிறது. கண்ணறைகளிலுள்ள சத்துக் குறைந்தால் மயிர் அதிகமாக வளராது. உடனே மயிர் உதிர்ந்துவிடும். ஆகையால் மொட்டையாய் விடும். மீண்டும் வளராது. ஆதியிலிருந்து மொட்டையாய் வழுக்காய் இருப்பவர்கள் தலையிலுள்ள கண்ணறைகளைப் பரிசோதித்துப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

கண்ணறைகளை எப்படிக் கெடாமல் வைத்திருப்பது? நமது நாட்டில் எண்ணெய் ஸ்நானம் செய்வது வழக்கமாக இருக்கிறது. இதனால் மயிர் அதிகமாய் வளர ஒரு சாதனம் ஏற்பட்டுள்ளது. எண்ணெய் ஸ்நானம் நமது நாட்டிற்கு அத்தியாவசியமானது நமது நாடோ மிகவும் உஷ்ணமான நாடு. இதன் சீதோஷ்ண ஸ்திதியினால் ஜனங்கள் மூளை கொதிப்படைகிறது. இதைத் தணிக்க எண்ணெய் ஸ்நானத்தைப் பெரும்பாலோர் செய்து வருகிறார்கள். இதனால் மூளை குளிர்ச்சியடைகிறது. தென்னாட்டில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், எண்ணெய் தேய்த்து உருவுதல், கால் பிடித்தல் கை பிடித்தல் ஆகிய இச் செய்கைகள் தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதாக எண்ணி அதன்படி செய்கிறார்கள். மேலும் பெண்கள் தலையிலுள்ள தொட்டி போன்ற கண்ணறைக்கு எண்ணெய் உள் செல்லும்படி தேய்த்துக் கூந்தல் முழுவதும் எண்ணெய் பூசிக் கூந்தலைக் கோதிச் சுத்தி செய்கிறார்கள். ஆகையால் கூந்தலில் அதிக அழுக்கு படிந்திருக்குமானால் எண்ணெய் அதை யெல்லாம் போக்குகிறது. உடனே எண்ணெய் வெந்

நீர் பட்டதும் உருகிக் கூந்தலிலுள்ள அழுக்கை எடுத்துச் செல்கிறது. சீயக்காய் கொண்டு தேய்த்ததும் கொஞ்சம் தங்கியிருந்த எண்ணெயும் செல்கிறது. உடனே சூரியன் வெப்பத்தினால் கூந்தல் ஆற்றப்பட்டதும் சுத்தியாகி ஒரு பளபளப்பை அடைகிறது.

தலையில் சுண்டும் பேனும் ஏன் பிடிக்கின்றன? அழுக்குச் சேர்ந்தால் இரண்டும் தாமாக வந்து சேர்கின்றன. தலையில் அழுக்குச் சேர்வதற்கு என்ன காரணம்? மாதர்கள் தலையில் அழுக்குச் சேர்வது சகசம். தூசி சாதாரணமாக உடலில் எங்குப் பட்டாலும் குளித்தால்தான் போகும். ஆனால் தலையில் படிந்தாலோ அது தலை முழுகினால் தான் போகும். அப்படியிருக்க, மாதர்கள் தலையில் சதா எண்ணெய் ஊறிக்கொண்டே யிருக்கும். எண்ணெய் பூசிய மயிரில் தூசி படிந்தால் அது அப்படியே ஒட்டிக்கொண்டு நாளடைவில் அழுக்காகி வருகிறது. தலையில் அழுக்குச் சேர்ந்தால் உடனே பேன்பிடித்து விடுகிறது. பேனை அகற்றுவது மிகவும் கஷ்டம் பேன் பிடித்தால் மயிர் வளர்வதில்லை.

தலையில் ஏன் சுண்டுகள் தோன்றுகின்றன? கூந்தலில் போதுமான எண்ணெய் இல்லாவிட்டால் இது தோன்றும். மேலும் தொட்டிகள் போன்ற கண்ணறைகளில் போதுமான எண்ணெய் இல்லாவிட்டால் இது தோன்றும். தலையில் அதிக உஷ்ணத்தினால் தோல் உரிந்து அதன் மூலமாகச் சுண்டு உண்டாகிறது. இதை அகற்றாவிட்டால் மயிர் வளராது. தலையில் சுண்டு தோன்றினால் உடனே அதை எலுமிச்சம் பழச் சாரத்தைத் தேய்த்தாவது அல்லது மிளகு சாரத்தைத் தேய்த்தாவது அகற்ற வேண்டும். இவை இரண்டும் சுண்டை நீக்கி மயிரை வளரச் செய்கின்றன.

சுண்டை அகற்றுவது மிகவும் சுலபம். ஆனால் பேனை அகற்றுவது கடினம். பேனை அடியோடு ஒழித்தாலொழிய மயிர் அடர்த்தியாய் வளராது. பேனை எவ்வாறு ஒழிப்பது? பேன் பிடித்த கூந்தலை (Paraffin Oil) பாரபின் எண்ணெய் தேய்த்து ஊறவைத்து வெந்நீரினால் சோப்பைக் கொண்டு கசக்கிச் சுத்தி செய்து சூரிய வெப்பத்தில் மயிரை உலர்த்திப் பரிமளமுள்ள புகை வாசனைகளை ஊட்டிச் சிக்குச் சேர வொட்டாமல் செய்ய வேண்டும். எப்பொழுதும் எண்ணெய் அதிகமாகயுள்ள சோப்பையே உபயோகப்படுத்த வேண்டும். அதனால் மயிர் அதிகமாக வளருகிறது. மேல் நாட்டார் நம்மைப் போல் எண்ணெய் தேய்த்துக் கொள்ளாமல் இருந்தாலும் எண்ணெய் அதிக முள்ள சோப்புகள் தேய்க்கப்படுவதால் அவர்கள் தலையில் எண்ணெய் அதிகமாகக் கண்ணறைக்குள் செல்கிறது. உடம்பிலும் எண்ணெய் தேய்க்கப்படுகிறது. ஆகையால் எண்ணெயுள்ள சோப்பை உபயோகப்படுத்த வேண்டும்.

தலை வாரிக்கொள்ளும்போது ஏன் கூந்தலில் எண்ணெய் தடவி வாரிக்கொள்ள வேண்டும்? சில மாதர்கள் தலையில் மயிர் பளபளப்பாக இருப்பதற்காக எண்ணெய் பூசிக்கொள்கிறார்கள். இவர்கள் எவ்வளவு எண்ணெய் தலையில் தடவினாலும் இவர்கள் கூந்தல் வளருவதில்லை. சில மாதர்கள் ஒவ்வொரு நாளும் தலையிலுள்ள கண்ணறைக்குள் எண்ணெய் செல்லும்படி தேய்த்து வாரிக்கொள்கிறார்கள். இதனால் தலையிலுள்ள கண்ணறைகள் புது ஆகாரம் உட்கொண்டது போல் சக்தி பெற்றுக் கூந்தலை அடர்த்தியாக வளரச் செய்கின்றன. தலைவாரிக் கொள்ளும்போது தேங்காய் எண்ணெயை உபயோகித்தால் மயிர் அதிகமாக வளரும். இந்தப் பழக்கத்தைக் கைவிடக்கூடாது. மலையாளப் பெண்கள் கூந்தலைச் சரியாகப் பாதுகாப்பதாலும் அவர்கள் தேங்காய் எண்ணெயை உபயோகப் படுத்துவதாலும் அவர்கள் தலையில் கூந்தல் அதிக அடர்த்தியாய் வளருகிறது. இக்காலத்தில் கூந்தல் வளர்க்கும் தைலங்களை உபயோகிக்கிறார்கள். இவைகள் அதிக பரிமள முள்ளவையாய் இருந்தாலும் கூந்தலை அதிகமாய் வளர்ப்பதில்லை. ஏன் என்றால் இத்தைலங்கள் கண்ணறைக்கு அதிகமாகச் சக்தியைக் கொடுக்காததினால் அவைகள் செயலற்றுப் பயனைத் தருவதில்லை. மேலும் இயற்கையாய் மயிர் வளர்வதைக் காட்டிலும் செய்கையால் மயிர் அதிகமாய் வளராது. இயற்கையால் மயிர் வளர வேண்டுமானால் எப்பொழுதும் கண்ணறைகளில் எண்ணெய் இருந்தபடியே யிருக்க வேண்டும்.


# கண்கட்டு வித்தைகள்

## நான்கு பாகங்கள் ரூ. 2

கண்கட்டு வித்தையால் கற்பம், வசியம், கொள்ளை, சொக்குத்தூள், குறிசொல்லு மூலிகை, புருஷவசியமுதல் ஸ்திரீ வசியமும், வரிசை வழங்குதல், வாத்தியஜாலம், மூலிகை ஜாலம், மோகனஜாலம், தீவர்த்திஜாலம், மகேந்திரஜாலம், மாம்பழஜாலம், சமுத்திரஜாலம், சங்கிலிஜாலம், அமேத்தியஜாலம், அக்கினிஜாலம், வாத்தியஜாலம், மாடன் மந்திரம், எக் காளைஜாலம், எலுமிச்சைவித்தை, கோகர்ணஜாலம், நவில் ஜலஸ்தம்பனம், பத்திரகாளி வசியம், செப்பிடுவித்தை, பாதாள அஞ்சனம், பார்வைமை, குறிசொல் இத்தனை ஜால வித்தைகள் கற்கலாம.

தி லவுத் இந்தியன் புக் டிபோ, நெ. 17, பவழக்காரத் தெருவு, சென்னை




## குல்திலகர் பகுதி

## ஸ்ரீலஸ்ரீ செங்குந்த திருஞான சிவயோக முருகானந்த சுவாமிகள் ஜீவிய சரித்திரம்

இம்மூர்த்திகள் விழுப்புரம் தாலுக்கா கல்லாலம் பூண்டி கிராமம் ம-ா-ள-ஸ்ரீ வீரசைவ சிதம்பர பொன்னுசாமி முதலியார் என்னும் ஒரு செங்குந்த பிரமுகரின் தவப் புதல்வராவர். இவரது இயற்பெயர் முருகானந்த முதலியார். இவர் இளவயதில் கல்வி பயின்று பண்டைத்தமிழ் நூலாராய்ச்சியில் தேர்ச்சி யடைந்து தக்க வயதில் மணமுடித்து இல்லற நடாத்தி வந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநக்ஷத்திரத்தன்று சாது சங்கமர்களுக்கும் ஏனையோருக்கும் அறுசுவை யுண்டி அளித்துக் குருபூஜையை மிக்க அன்போடும் சிரத்தையோடும் இவர் வருஷா வருஷம் நடத்தி வருவது வழக்கம் 'மாதா பிதா தெய்வம்' என்ற வாக்கியத்தையே மகா வாக்கியமாகக் கொண்டு தமது பெற்றோரைப் பிரதக்ஷணம் செய்து பாதபூஜை முதலான உபசாரங்கள் செய்த பிறகே தமது தொழிலைச் செய்யத் தொடங்குவர். சில வாண்டுகளுக்குப் பின்னர் இவரது அன்னையார் சிவபத மடைந்தார். நமது சுவாமிகள் நிறைந்த சிவபக்தி யுடையவராகையால் தவறாது சிவபூசை செய்து வந்தார். ஒரு தினம் தியானத்திலிருக்கும்போது சிவபெருமான் சடைமுடி தாரியாய் விபூதி ருத்திராக்ஷம் தரித்த கோலத்தோடு பக்கலில் எழுந்தருளி யிருக்கக்கண்டு திடீரென நிஷ்டையிலிருந்து கலைந்து விழித்துப் பார்த்து அழுதகண்ணும் தொழுத கையுமாய்ச் சிவபெருமான் திருவருட் பிரசாதத்தை வேண்டி நிற்க, எம்பெருமான் திருவுள மிரங்கி, 'உமக்குப் போதிக்க வேண்டியவர் பொதிய மலையின்கண்ணுள்ள அகஸ்திய முனிவரே யாவர்' எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர்.

இவர் சில நாட்கழித்துத் தெற்கே சிவஸ்தல யாத்திரை செய்யக்கருதி, மதுரை, இராமேஸ்வரம், திருநெல்வேலி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, தென்காசி, குற்றாலம் முதலிய தலங்களுக்குச் சென்று தரிசனஞ் செய்துகொண்டு பொதிய மலைக்குச் சென்று பேராவலோடு அகஸ்திய முனிவரைத் தேடலுற்றார். பல நாட்கள் தேடியும் முனிவரைக் காணாது போகவே, அங்கிருந்து அவநாசி, மேலைச் சிதம்பரம் முதலிய தலங்களையும் சாந்தலிங்க ஸ்வாமிகளையும் தரிசித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தனர்.

இச்சமயம் தாலுக்கா போர்டு ஜில்லா போர்டு மெம்பரும், தேவஸ்தான கமிட்டி வைஸ் பிரசிடெண்டுமாகிய உயர் சைவத் திருவாளர் கல்லாலம்பூண்டி பொ. மு. வெ. முனிசாமி முதலியார் அவர்கள் ஷை முருகானந்த முதலியாரைத் தமது அரிசி மில்லுக்கு மானேஜராக இருக்கும்படிக் கேட்டுக் கொண்டதன் பேரில், முதலியார் அவர்கள் இஷ்டப்படி வேலை பார்த்துக் கொண்டு வந்தனர். இவ்வாறிருந்து வருநாளில் சுக்கில வருஷம் ஆடிமீ ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரு நக்ஷத்திரத்தன்று ஸ்ரீலஸ்ரீ தோபா சுவாமிகளுடைய பரம்பரை சின்மயானந்த ராகவ சுந்தரானந்த சுவாமிகளால் ஞானோபதேசஞ் செய்யப் பெற்றார். அது முதல் அறு சுவை நீக்கித் தினம் ஒருவேளை அமுது செய்து கொண்டு ரைஸ் மில் வேலையைப் பார்த்து வந்தார். தைமீ 17உ சிவலிங்க பூஜை முதலியவற்றை முடித்து மில்லில் வடக்கு முகமாய் நாற்காலியின் மேல் உட்கார்ந்து நிஷ்டையிலிருந்த போது சத்குருநாதர் தோன்றி, 'இனி இவ்வேலையை விட்டு நீங்கிப் பக்கத்திலுள்ள திருக்கோண மலையின்கண் குகையொன்று நிருவிக் கற்ப சமாதி கூடி யிருப்பாயாக' எனப் பணித்தருளினார். சுவாமிகள் உடனே அப்பணியைத் தலைமேற்றாங்கி குகையை யடைந்து நிஷ்டையிலிருந்தார்.

ஊருக்கும் மலைக்கும் சுமார் ஒரு மைல் தூரமிருக்கும். இதை யறிந்த இவரது எஜமானராகிய முதலியார் அவர்கள் சுவாமிகளுக்குத் தினந்தோறும் ஒரு சேர் பால் அனுப்பிக் கொண்டு இருந்தார்கள். அரை மண்டலமானதும் ஒருவேளை பாலையும் வேண்டாமென நீக்கி விட்டு அருள் ஞானப் பாலை யுண்டு சமாதியிலிருந்தனர். குகைக்குள் நரி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் சில சமயங்களில் அடைவதைக் கண்டு ஊரார் வேண்டிய பாது காப்புச் செய்து வைத்தனர். 49-ம் நாள் உள்ளூர் ஜனங்களும் வெளியூர் ஜனங்களும் திரு. முதலியார் அவர்களும் திரளாகச் சென்று சுவாமிகளைக் குகையிலிருந்து பஜனை வாத்தியங்களுடன் வெளியே கொண்டு வந்து விசேஷ அபிஷேகம் ஆராதனை செய்து சுமார் 1000 ஜனங்களுக்கு அறுசுவை உண்டி அளிக்கப்பட்டது. பிறகு ஷை முதலியார் அவர்களும் திரளான ஜனங்களும் பஜனை வாத்தியங்களுடன் சுவாமிகளை ஊர்வலமாகக் கொணர்ந்து முதலியார் அவர்கள் மாளிகையில் எழுந்தருளச் செய்து இரண்டு மணி நேரம் பஜனை நடந்தது.

இது நிற்க, சுவாமிகள் குகையில் நிஷ்டையிலிருந்தபோது சிவ பெருமான் அநேக சோதனை செய்து ஊரில் ஒரு அன்னமடாலயம் ஏற்படுத்தி

அதிதிகளுக்கு அன்ன மளித்து வரவேண்டுமென்று கட்டளை யிட்டு மறைந்தருளினாராம். ஆகையால் சுவாமிகள் மடாலயம் கட்டி அதிதிகளுக்கு அன்ன மளித்த பிறகே ஆகாரம் அருந்துவதெனத் தீர்மானித்துத் தற்போது பாலுடன் இருந்து வருகிறார். இவருடைய குருமூர்த்திகள் இவரைத் தம் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் செல்லவும் சுவாமிகள் இப்போது அங்கிருந்துவருகிறார். அவ்வாசிரமம் அரண்சிவாலயபுரம் மலையடிவாரத்திலுள்ளது ஊருக்கும் இவ்வாச்சிரமத்திற்கும் சுமார் இரண்டு மைல் இருக்கும். திரு முதலியார் அவர்கள் தற்போது அங்கொரு மடம் கட்டுவதாக உத்தேசித்திருக்கிறார்.

நமது சுவாமிகள் செங்குந்த மரபிற்றேன்றி இல்லறம் இனிது நடாத்தித் துறவறம் பூண்டு சிவபெருமான் திருவருள் பெற்று இப்போதும் அரன் சிவாலய புரத்தில் உண்ணாவிரதம் பூண்டு பாலுட்கொண்டு நிஷ்டையிலிருந்து வருகிறார் என்பதை யாவரு முணர்க.

தமாதரு முதலியார், தமிழ்ப் புலவர்,
A. S. V. நாராயணசாமி முதலியார்
Teacher, Board School,
கல்லாலம் பூண்டி.

ஓம் தத் ஸத் பரப்பிரஹ்மண நம:
வாலாம்பிகை துணை முருகக்கடவுள் துணை

## திருவருள் கண்டன மனு விண்ணப்பம்

கார்த்திகைமீ 6உ

ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீ செங்குந்தமித்திரன் ஆபீஸ் தலைவர்கள் திரு சமுகத்திற்குக் கல்லாலம்பூண்டி திரு. முனிசாமி முதலியார் தலைமையின் கீழுள்ள தமிழ்ப் புலவர் குமரகுரு முதலியார் இன்னும் மற்றுமுள்ள சந்தாதாரர் அனைவரும் ஒருமிக்கச் சேர்ந்தெழுதும் விண்ணப்பமாவது : நாங்கள் எங்களூர் 970-வது சந்தா நெம்பர் திருஞான சிவயோக முருகானந்த சாமிகள் நிறுவி கல்பசமாதி நிஷ்டை அடைந்த சங்கதியைப் பத்திரிகையில் வெளியிடும்படியாக யெழுதி ஆனிமீ முதலிலேயே அனுப்பினேம். ஷை அநேக கடிதங்களும் யெழுதினேம். நீங்கள் நாளது வரையிலும் யெழுதப்படாததற்கு காரணம் யாது. நீங்கள் இப்படி செய்வது ரொம்பவும் சத்தியத்திற்கு விரோதமான சங்கதி. ஆதலால் நாங்கள் யெழுதியது தப்பிதமா நீங்கள் எழுதாதது தப்பிதமா என்ற சந்தேகம். சொற்ப சந்தா ஊர் விஷயங்களெல்லாம் தவறாமல்படி யெழுதுகிறீர். எங்களூரில் 80 சந்தாவாயிருந்தும் நமது செங்குந்த குலத்தில் இப்படி தவம் செய்வது அரிது. அப்படி தவம் செய்தாலும் அருளைப் பெறுவது அரிது. அருளைப் பெற்றதால் நாங்கள் யெழுதி அனுப்பினேம். ஏன் யெழுதி அனுப்பினேமென்றால் நமது செங்குந்த மக்கள் அனைவரும் பார்த்துப் பேரானந்தங்கொண்டு அஞ்ஞானங்களை நீக்கி மெஞ்ஞான வழிகளை அடையும் பொருட்டு யெழுதினேம். அடுத்த மார்கழிமீ சஞ்சிகையில் ஷை சுவாமிகளுடைய சரித்திரத்தை வெளியிடாவிட்டால் கல்லாலம் பூண்டி சந்தா பூராவும் நிறுத்தபடும் என்பது நிச்சயம். இப்போது அந்த சுவாமிகளுக்காக ஆனந்த ஒட்டக்கூத்தர் திருநாமத்தால் ஒரு அன்ன மடாலயம் அமைக்கும் பொருட்டும் ஸ்வாமிகள் இன்னும் நிஷ்டைகூடும் பொருட்டும், அவர்கள் அர்ப்பிசிமீ 20உ திருமடாலயம் தர்ம கைங்கரியப் பத்திரிகையைப் போட்டுக்கொண்டு செங்குந்தர் இருக்கு மிடங்களுக்கெல்லாம் பிக்ஷைக்குப் போயிருக்கிறார். இது விஷயமும் அறியவும்.

சுவாமி சரித்திரம் யெழுதுவதுடன் செங்குந்தர்களனைவர்களும் சுவாமிகளை வரவேற்பு செய்து தங்களாலியன்ற பொருளுதவி செய்ய வேண்டி நாங்கள் அனைவர்களும் மிகவும் தாழ்மையுடன் எழுதுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

முருகப்பெருமான் திருவருளால் மடாலயம் கட்டப்பெற்று அதனால் வரும் புண்யத்தை அனைவர்களும் அடைய வேண்டுமாக.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள கல்லாலம்பூண்டி திரு. முதலியார் மற்ற சந்தாதாரர் அனைவர்களும் சொற்படி யெழுதிய பொது விண்ணப்பம்.

| | |
|---|---|
| நா. தமாதரு அடிமை<br>தமிழ்புலவர்<br>கல்லாலம்பூண்டி. | ஷை யூர் சே. ச பொன்னு<br>முதலியார் |

குறிப்பு:—மேல் அச்சிட்டுள்ள ஜீவிய சரித்திரம் எழுத்துப் தழைகளுடனும் வாக்கிய முடிவு களின்றியும் மிக்க ஒழுங்கீனமான ரீதியில சில மாதங்களுக்கு முன்னரே எமக்கு வந்தது உண்மையே. எனினும் அது 'தொடரும்' என்னும் முடிவோடு இருந்ததால் மீண்டும் உண்மையை ஆராய்ந்து திருத்தி ஒரே சஞ்சிகையில் வெளியிட உத்தேசித்திருந்தோம். இருந்தும் அதன் தொடர்ச்சியாக யாதொரு வியாசமேனும் நிருபமேனும் வராததால் இவ்விஷயத்தைப் பற்றி மீண்டும் ஆராய ஏது வில்லாமற் போய் விட்டது. ஆனால் கல்லாலம்பூண்டி அன்பர்கள் கார்த்திகை 6உ எழுதியுள்ள நிருபத்தைக் கண்டவுடன் அவர்கள் இது விஷயமாக மிக்க சீற்றமும் ஆத்திரமும் பரபரப்பும் கொண்டுள்ளார் என்பது புலனான படியால் அவர்கள் மனத்திருப்தியடையும் வண்ணம் ஷை சரித்திர வியாசத்தைச் செப்பனிட்டு வெளியிட்டுள்ளோம். சிவஞானம் பெற்ற துறவி அவர்களைப் பற்றி எமக்கு யாதொரு விவரமும் தெரியாததாலும் அவரை நேரில்காண எமக்குச் சந்தர்ப்பங்கள் இன்மையாலும், அவரது அன்பர்களும் அபிமானிகளும் அவர் விஷயத்தில் கொண்டுள்ள ஆர்வம் எமக்கில்லாதிருந்தது இயற்கையே யாகும் என்பதை யுணர்ந்து அன்பர்கள் எம்மீது சீற்றமுறா திருப்பார்களென நம்புகின்றேம்.

[ப. ர்.]






## அம்மை குத்துவதால் நன்மை யுண்டா?

ஸ்ரீ பெர்னார்ட்ஷா கருத்து (20-11-30-ல் 'தமிழ் நாட்'டில் கண்டது)

வைசூரி வாராமல் தடுப்பதற்காகக் கட்டாயம் ஒவ்வொருவரும் அம்மைகுத்திக்கொள்ள வேண்டுமென்று சட்டஞ் செய்யப்பட்டிருக்கின்றது. அம்மைப் பால் எப்படி எடுக்கப்படுகிறது என்பதை முதலில் கவனிப்போம். முதலில் அம்மை கொப்புளங்களிலிருந்து நீரை எடுத்து அதைக் கன்று குட்டிகளின் அடி வயிற்றில் ஊசி மூலம் பிரயோகிக்கிறார்கள். பின்னால் அந்த இடத்தில் கிளம்புகிற கொப்புளங்களிலிருந்து நீரை எடுத்துப் புட்டிகளில் அடைத்து வைக்கப்படுகின்றது. அந்தப் பாலைத்தான் மனிதர் உடம்பில் ஊசியால் செலுத்துகிறார்கள். விஷத்தை விஷத்தால் எதிர்ப்பது என்ற முறைப்படி அம்மைப் பாலால் அம்மையை வர விடாமல் தடுப்பது ; அல்லது உடம்பிலுள்ள ரத்தத்தில் அம்மைப் பால் சேர்ந்துபோய் விட்டால் புதிதாக அம்மை தோன்றும்படி ரத்தம் இடங்கொடுக்காது என்ற கொள்கையை அநுசரித்துத்தான் அம்மை குத்தப்படுகிறது. அம்மை குத்த வேண்டுமென்று சர்க்கார் சட்டஞ் செய்திருந்த போதிலும் உலகத்திலுள்ள பிரபல அறிவாளிகளும் வைத்தியர்களும் அம்மை குத்துவது வீண் என்றும், கன்று குட்டிகளை இம்சை செய்வதும், விஷத்தை நமது உடம்பில் இறக்குவதும் கொடுமை யென்றும், அம்மை குத்துவதால் அம்மை போடுவது நின்றுவிடவில்லை யென்றும் வாதிக்கிறார்கள். இதற்காக அம்மை குத்தக் கூடாதென்று பலத்த பிரசாரமுஞ் செய்து வருகிறார்கள். இரு கட்சிக்காரரும் தங்கள் தங்களுக்குள்ள ஆதாரங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். ஜார்ஜ் பெர்னார்ட்ஷா என்பவர் உலகமெங்கும் புகழ்பெற்ற நாடக நூலாசிரியர்; சிறந்த அறிவாளி. அவர் அம்மை குத்தக்கூடாது என்ற கட்சியைச் சேர்ந்தவர். அவருடைய அபிப்பிராயத்தைக் கவனிப்போம்

ஒரு நிருபர் ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவைப் பேட்டி கண்டு பேசியபோது அவர் சொன்னதாவது:— "கட்டாயமாக அம்மைகுத்த வேண்டுமென்று சொல்லுவது பெரிய குற்றமாகும். ஒன்று மறியாத ஒரு கன்று குட்டியின் உடம்பில் அம்மையை உண்டு பண்ணி, பின்பு அதிலிருந்து எடுக்கப்படும் அசுத்தத்தை ஒரு பாவமு மறியாத குழந்தைகளின் உடம்பில் பிரயோகிப்பதைவிட அநாகரிகமோ அக்கிரமமோ வேறு என்ன இருக்கிறது?"

ஸ்ரீ ஷாவுக்கு 70 வயதான போதிலும் இப்போதும் மிகுந்த பலசாலியாகவே காணப்படுகிறார். கடைசியாக அவர் எழுதிக்கொண்டிருக்கிற நாடகத்தை அவரே தன் கையால் எழுதிக்கொண்டிருக்கிறார். "இங்கிலாந்தில் கட்டாயமாக அம்மை குத்த வேண்டுமென்ற சட்டத்தை ஒழிக்கச் சுமார் 50 வருஷங்களுக்கு மேல் போராட்டம் நடந்து. 1881-ம் வருஷத்தில் எனக்கே அம்மை போட்டது. அதனால்தான் இவ்விஷயத்தில் எனக்கு அக்கரை உண்டாயிற்று" என்று சொன்னார்.

"உங்களுக்கு வந்து எப்படிக் குணமாயிற்று?"
"நானே குணப்படுத்திக் கொண்டேன்."
"என்ன செய்தீர்கள்?"

"ஒன்றுமில்லை. ஒரு வேலையும் செய்யாமல் நன்றாய் ஓய்வு எடுத்துக் கொண்டேன்; ஜாக்கிரதையாக உடம்பைக் கவனித்து வந்தேன். என்னுடைய உடம்பை முன்னால் அம்மை குத்திப் பாழாக்காமல் வைத்திருந்தபடியால் சீக்கிரம் குணமாகி விட்டது. மிருகங்களை வியாதிக்குட்படுத்தி அந்த வியாதியின் விஷத்தை எடுத்து மனிதர்களுக்கு உபயோகிப்பதைவிட மருந்து சாலைகளில் செய்யப்படும் மருந்துகளை உடம்பிற்குள் இறக்குவது சிலாக்கியந்தான். இருந்தாலும், விஷத்தை உடம்பிற்குள் செலுத்துவது பெரிய அபாயமாகும். சரீரத்தையே அது கெடுத்துவிடுகிறது. அம்மையை விட அம்மை குத்துவது அதிக பேரைக்கொன்று விடுகிறது. அம்மை குத்தும்போது தவறுதலாக டாக்டர் நடந்து விட்டால் அதனால் எற்படும் (ஜெனரல் வாக்ஸாமியா) வியாதி மிகப்பயங்கரமாக இருக்கிறது. ஆதியில் இவ்வியாதி கர்ம வியாதி என்று ஜனங்களை டாக்டர்கள் ஏமாற்றி வந்தார்கள். கடைசியாகப் பலர் சேர்ந்து டாக்டர்கள் மீது வழக்குத் தொடர்ந்தபின்தான் இப்படிச் சொல்லுவது நின்றது. அந்த வழக்கில் பேர்பெற்ற

டாக்டராகிய ஜோனத்தன் ஹச்சின்சன் என்பவர் "ஜெனரல் வாக்ஸாமியா என்ற வியாதி கர்ம வியாதியல்ல" வென்று ஒப்புக் கொண்டார். அதன் பின்புதான் கட்டாயமாக அம்மை குத்தும் வழக்கம் இங்கிலாந்தில் ஒழிந்தது. அம்மை குத்தும் கமிட்டியின் அறிக்கையை எடுத்துப் பார்த்தால் நான் சொல்லுபவைகளுக்கெல்லாம் ஆதாரங்கள் இருப்பதைக் காணலாம்.

"அம்மை குத்துவதால் யாதொரு பயனும் விளையவில்லை யென்பதையும், அம்மை போடுவதை அதனால் நிறுத்த முடியவில்லையென்பதையும் நாம் அநுபவத்தில் அறிந்திருக்கிறோம். 19-வது நூற்றாண்டின் மத்தியில் அம்மை கட்டாயம் குத்த வேண்டுமென்று ஆர்ப்பாட்டஞ் செய்யப்பட்டு வந்தது. அச்சமயத்தில் தான் அடிக்கடி அம்மை நோய் பரவி மனிதரின் உயிரைக் கொள்ளை கொண்டு போயிற்று. ஒரு குடும்பத்திலிருக்கிற பல குழந்தைகளில் அம்மை குத்தப்பட்டவைக ளெல்லாம் இறந்து போயும், பாக்கியுள்ள குழந்தைகளை அம்மை குத்தும்படி கட்டாயப்படுத்திக் கொடுமை செய்தார்கள். பின்னால் பிளேக் அம்மை குத்தியும் 1850 ல் பிளேக் நோய் பரவி ஆயிரக் கணக்கான பேரைக் கொன்றுவிடவே, அம்மை குத்துவதில் ஜனங்களுக்கு அவ நம்பிக்கை தோன்றிற்று. கடைசியாக லீசெஸ்டர் என்ற பட்டணம் அம்மை குத்தும் வழக்கத்தை முதலில் ஒழித்தது. அந்தப் பட்டணத்திலுள்ளவர்களெல்லாம் அம்மையால் அடித்துக் கொண்டு போகப்படுவார்கள் என்று பலர் எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படி யொன்றும் நடக்கவே இல்லை. அம்மையே அங்குத் தலை காட்டவில்லை. இந்த உண்மையை வைத்திய அயோக்கியத்தனம் மறைத்துவிட முடியாது. பின்னால் ஜனங்கள் அம்மை குத்துவதை அடியுடன் தள்ளினார்கள்."

நிருபர்:—வியாதியை எதிர்க்கவாவது அம்மை குத்துவது உபயோகப்படுகிற தல்லவா?

ஷா:—அதுதான் கெடுதல். வியாதியை எதிர்க்க உபயோகப்படுகிற தென்பது உண்மை. ஆனால் வியாதியை வர விடாமல் செய்ய முடியாது. அம்மை குத்தாதவர்களைவிட அம்மை குத்திய குழந்தைகளுக்கு வியாதி வேகமாய் தாக்குகிறது. ஏனெனில் அவைகளின் உடம்பு முன்னமே அம்மை குத்திய விஷத்தால் கெட்டுப் போயிருக்கிறது. இந்த உண்மையைப் பல டாக்டர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

நிருபர்:—அம்மை வியாதி அநேகமாய் மறைந்து போனதற்கு என்ன காரணஞ் சொல்லுகிறீர்கள்?

ஷா:—சூரிய வெளிச்சமும், பொது அறிவும், சுத்தமும், சாப்பாட்டு நியமமும், தேகாப்பியாசமும் பிளேக்கை விரட்டின. அவைகளே அம்மையையும் விரட்டிவிட்டன. அம்மை குத்துவது விரட்டவில்லை.

நிருபர்:—வைத்தியர்களின் உதவியின்றி எப்படி உங்களால் காலங் கழிக்க முடிகிறது?

ஷா:—கொஞ்சம் புத்தியை உபயோகித்தால் வைத்தியர்கள் அவசியமேயில்லை. சமைத்த உணவை விட சமைக்காத உணவே தேகத்திற்கு நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால், முற்றிலுஞ் சமைக்காத உணவையே நான் எடுத்துக்கொள்ளுவதில்லை. பழங்களை ஏராளமாகச் சாப்பிட்டு வருகிறேன்.


திருக்குறள்

மூலமும் பொழிப்புரையும்.

பொருளீட்டும் கருத்தின்றி தமிழ் நாகரீகத்தின் புகழ்நாட்டும் கருத்தோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் பாக்கட் அளவில் அச்சிடப்பட்டுள்ளது.

300 பக்கங்கள் உள்ள பெரிய புத்தகம்

விலை அணா எட்டு.

இதுவரை இத்தகைய உரை வெளிவந்ததில்லை.

சமத்துவம் சகோதரத்துவம் பெண்ணுரிமை முதலிய தமிழ் நெறிபற்றி எழுதப்பட்ட புத்துரை

தமிழர் அனைவரும் ஓதி ஒழுகவேண்டிய முக்கியமான நூல்.

"நவசக்தி" ஆசிரியர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்றது.

சொற்ப காப்பிகளே உள்ளன! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!!

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால் செலவு சேர்த்துப் பத்தணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். 2 அல்லது 3 புத்தகங்கட்கு வி. பி. உள்பட தபால் செலவு அணா 7. ஆறு புத்தகங்கட்கு அணா 10.

செங்குந்த மித்திரன் புத்தகசாலை

17 பவழக்காரத் தெரு, சென்னை.




# நிருபங்கள்

## வரப்போகிற ஜனக்கணிதம் (சென்ஸெஸ் அல்லது கானிஷ்மாரி கணக்கு)

[ திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமாகிய ஆங்கில அரசாட்சியின் கீழ் நமது இந்தியாவில் பத்து வருஷத்துக் கொருதரம் ஜனக்கணிதை செய்து வருவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இதனைச் சென்ஸெஸ் அல்லது கானிஷ்மாரி கணக்கு என்று கூறுவார்கள். இது வரையில் நம் இந்து தேசத்தில் ஆறு தடவை ஜனக்கணிதம் செய்யப்பட்டிருக்கிறது. இனி ஏழாவது தடவை ஜனக்கணிதம் செய்யப்படப்போகிறது. முந்திய ஜனக்கணிதம் 1921-ம்வரு மார்ச்சுமீ 18௳ இரவில் நடந்தது. இப்பொழுது 1931-ம்வரு பிப்பிரவரி அல்லது மார்ச்சு மாதத்தில் ஜனக்கணிதம் செய்யும்படி நமது கவர்மெண்டார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

பத்து வருஷத்திற் கொருமுறை இந்தியாவிலுள்ள ஜனங்களைக் கணக்கிடுவது அவசியம் என்று இந்தியா கவர்மெண்டார் நினைத்து, அப்போது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு நபரின் வயது, ஜாதி, மதம், பேசும் பாஷை, செய்யுந் தொழில் அல்லது வர்த்தகம் முதலியவைகளை ஆண் பெண் வாரியாய்ப் பகுத்துக் கணக்கெடுப்பார்கள். இவ்விதம் செய்வதால் ஒவ்வொரு சமூகத்திலுள்ள ஜனத்தொகை, கைத்தொழில், வர்த்தகம், கல்வி முன்னேற்றம், வழங்கப்படும் பாஷை, முதலிய குறிப்புக்களையும், இவ்வளவு சமூகங்கள் இந்தியாவில் நிலவுகின்றன வென்பதைப்பற்றியும், அவர்களின் குணாதிசயங்களையும் மதாசார பழக்க வழக்கங்களையும் கவர்மெண்டாரும் பொது ஜனங்களும் நன்கு அறிய அனுகூலப்படுகின்றது. நாகரீக முள்ள எல்லாத் தேசங்களிலும் இந்த மாதிரி ஜனக்கணிதை செய்வது வழக்கந்தான். பத்து வருஷத்துக் கொரு தடவை ஜனக்கணிதை செய்வதினாலே ஜனங்களின் முற்கால நிலையைவிடத் தற்கால நிலைமை முன்னேற்றம் எவ்விதம் இருக்கின்றன வென்பதைச் சர்க்காராரும் பொது ஜனங்களும் நன்கு அறியக்கூடும். மேலும் பத்து வருஷங்களுக்குள் ஜனங்களுடைய நாகரீகம், குணகுணம், அறிவு வளர்ச்சி, கல்வி யபிவிருத்தி, தொழின்முறை, வர்த்தக விருத்தி முதலியவைகள் எவ்விதம் மாறுபட்டிருக்கின்றன வென்பதையும் தெரிந்து கொள்ளலாம். ஜனங்களுக்குச் சௌக்கியம் அதிகரித்து வருகின்றதா? அல்லது அசௌக்கியம் மிகுந்து வருகின்றதா? என்பதையுங் கவனித்து அதற்கு அனுகூலமாகக் கவர்மெண்டார் ஜனங்களுக்குப் பொதுஜன நன்மையை உத்தேசித்து எந்தெந்த விதத்தில் எவ்வெவைகளை யபிவிருத்தி செய்ய வேண்டுமோ, அவைகளை ஒழுங்குடன் நடைபெறச் செய்யும்படி கவனிதற்கு ஹேது உண்டாகும். இதனால் ஜனங்களுக்கு அளவற்ற நன்மையும் வேண்டிய சௌகரியங்களும் கிடைக்கின்றன,

இதற்கு முன் செய்யப்பட்ட ஜனக்கணிதைகளாலே ஜனங்களுடைய மதாச்சாரங்கள், கொள்கைகள், பழக்கங்கள், பாரம்பரியமாய் ஏற்பட்டு வரும் நடவடிக்கைகள் ஆகிய அநேக முக்கியாம்சங்களைப் பற்றிய சமாச்சாரங்களை யெல்லாம் சேகரித்து ஜனங்களுக்குத் தெரியும்படியாய் அவைகளைச் சர்க்காரார் விளம்பரம் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் இப்போது செய்யப்போகும் ஜனக்கணிதையில் ஜனங்களுடைய ஜீவனோபாயம் யாவை யென்பதையும், அவர்களுக்கு என்னென்ன வியாபாரம் கைத்தொழில் தெரிந்திருக்கின்றன வென்பதைப்பற்றியும் உள்ள சமாச்சாரங்களைக் கூடுமான வரையில் நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்று சர்க்காரார் வெகு ஆவலாயிருக்கின்றனர். தவிர நமது தேசத்தில் விவசாயிகள் எந்த முறையிலே பயிர் செய்து தங்கள் ஜீவனோபாயத்தை நடத்துகிறார்க ளென்பதையும், கைத்தொழிலாளர்களும் வியாபாரிகளும் எந்தெந்த விதமான வியாபாரத் துறைகளிலிறங்கி எவ்வித ஆதியம் பெற்று எப்படி ஜீவிக்கிறார்கள் என்பதையும், இன்னும் மற்றேனைய ஜனங்கள் எப்படி தங்கள் ஜீவனத்தை நடத்துகிறார்க ளென்பதைப் பற்றியும், எத்தனைபேர் பிச்சையெடுத்துண்ணுகிறார்களென்பது பற்றியும், இன்னும் இதுபோன்ற பற்பல விஷயங்களைப்பற்றியும் உள்ள விஷயங்களை யெல்லாம் இந்த ஜனக்கணிதையாலே சேகரித்துப் பொது ஜனங்களுக்குத் தெரிவிப்பது வெகு உபயோகமான காரியமல்லவா? இத்தியாதி விஷயங்களை யெல்லாம் சர்க்கார் தெரிந்து கொள்வதினால், ஜனங்களுக்கு அதிகப்படித் தாமான வரிகளைப் போடவாவது, நிலத்தீர்வையை யுயர்த்தவாவது, வருமான வரியைப் பெருக்கவாவது உத்தேசித்தே இப்படி செய்கிறார்களென்று நாம் எண்ணக்கூடாது. ஜனக்கணிதை மூலமாய் ஏற்படும் சமாச்சாரங்கள் யாவும் சர்க்கார் வருமானத்தைப் பெருக்குவதற்கல்ல; பொது ஜனங்களின் நன்மையைப் பெருக்கவும், முன் நிலைமையைவிட தற்கால நிலைமையை அறியவுமே பிரயோஜனப்படுகின்றன வென்பதைப் பொது ஜனங்கள் நன்கு அறிய வேண்டும்.

ஜனக்கணிதையை ஒழுங்காய்ச் செய்து முடிப்பதற்கு அனுகூலமான அநேக காரியங்களைச் செய்ய இந்திய கவர்மெண்டார் ஒரு ஆக்ட் பிறப்பித்திருக்கின்றார்கள். இதற்கு 1929-ம் வருஷத்

திய இந்திய சென்ஸெஸ் ஆக்ட் என்று பேர். அந்த ஆக்டுப்படிக்குத்தான் ஜனக் கணிதை சம்மந்தமான எல்லாக் காரியங்களும் செய்யப்படவேண்டும். இந்த ஆக்டனுலே ஜனக்கணிதை செய்வதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. ஜனங்களை எண்ணிக் கணக்கிடுவதற்கு யெனுமரேட்டர்கள் (Enumerators) என்று சொல்லப்பட்ட சில உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுவார்கள். நகரம், கஸ்பா, டவுன், முனிசிபாலிட்டி, கிராமம், இவைகளிலுள்ள பொது ஜனங்களினின்றும், உத்தியோகஸ்தர்களினின்றும் படித்தறிந்த செல்வாக்குள்ள அறிவாளர்களையே யெனுமரேட்டர்களாக கவர்மெண்டார் நியமிக்கிறார்கள். இந்த யெனுமரேட்டர்கள் தங்களுக்கிடப்பட்டிருக்கும் வேலையை ஊக்கத்துடன் சரியாய்ச் செய்து முடிககவேண்டும். இவர்களை மேற் பார்வை பார்க்கவும், அவரவர்களுக்கு நியமனஞ் செய்யப்பட்ட சாஜிகளிலும் பிளாக்குகளிலும் உள்ள வீடுகள் வரிசையாக விடாமல் சரியாக ஜனக்கணிதம் நமூனுக்களில் பதியப்பட்டிருக்கிறதா யென்று சோதனை செய்யவும், இவர்களுக்கு வேண்டிய சமாச்சாரங்களைச் சந்தேக நிவர்த்தியுடன் அறிவிக்கவும் சூபர்வைஸர்கள் என்ற அதிகாரிகளும் நியமிக்கப்படுகிறார்கள். ஜனக் கணிதை விஷயத்தில் பொது மகா ஜனங்களும் அவ்வுத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய வுதவியைச் செய்தல் வேண்டும். படகுகள், சத்திரங்கள், ஆலயங்கள், மடங்கள், பள்ளிக் கூடங்கள், கைத் தொழிற் சாலைகள், நாடக மேடைகள் ஆகிய ஸ்தலங்களுக்கு அதிகாரியாயிருக்கும் எல்லா நபர்களும், ஜமீன், மிட்டா, சுரோர்த்திரியம், பாளையப்பட்டு முதலிய கிராமங்களில் உள்ள கிராம உத்தியோகஸ்தர்களும் பொது ஜனங்களும் கூட யெனுமரேட்டர்களாய்த் தாங்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும் அப்படி நியமிக்கப்படாமலிருந்தாலும் வரப்போகும் ஜனக்கணிதையில் ஜனக்கணிதஞ் செய்ய வேண்டுவதற்குரிய உதவிகளத்தனையும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்குச் செய்தல் வேண்டும்.

ஜனக்கணிதை செய்வதற்கு யெனுமரேட்டர்களிடம் சில நமூனுக்கள் சர்க்கார் கொடுப்பார்கள். அந்த நமூனுக்களில் கண்டிருக்கும் விஷயங்களை நன்கு தெரிந்து பதிவு செய்து கொள்ள யெனுமரேட்டர்களுக்கும், அவர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகளாகிய சூபர்வைஸர்களுக்கும் ஜனங்களை அவசியமாயுள்ள கேள்விகளைக் கேட்பதற்கு அதிகாரம் உண்டு. அப்படி அவசியமாயுள்ள எல்லாக் கேள்விகளையும் இந்த உத்தியோகஸ்தர்கள் ஜனங்களைக் கேட்கும்போது எல்லா ஜனங்களும் அந்தக் கேள்விகளுக்கு வாஸ்தவமான பதில் சொல்லவேண்டும் ஜனக்கணிதை செய்வதற்குச் சர்க்காரால் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் வீடுகளுக்கு நெம்பர் போடுவார்கள். அந்த நம்பர்கள் அழியாமலிருக்கும்படி வர்ணமையினுல் போடுவார்கள். அந்த நம்பரை ஒருவரும் அழிக்கக் கூடாது. அப்படி அழிப்பதானுல் நம் இந்து தேச சென்ஸெஸ் ஆக்ட்டுப்படி கவர்மெண்டாரின் தண்டனைக் குள்ளாவார்கள். யெனுமரேட்டர்கள் எழுதிக் கொள்ளும் நமூனுக்களைப் பரிசோதனை செய்து என்ன எழுதியிருக்கிறார்கள் என்று பார்க்க ஒருவருக்கும் அதிகாரமில்லை. ஜனக்கணிதை கணக்கெல்லாம் எடுத்து முடித்துக் கணக்குப் பூர்த்தியாய்ப் பட்டுவாடாவானதும், அந்த நமூனுக்கள் யாவும் கொளுத்தப்பட்டுப்போகும். நியாயஸ்தலங்களில் மேல் கண்ட நமூனுக்களில் கண்ட விஷயங்களைச் சாக்ஷிகரமாய்க் கொண்டுபோகக் கூடாது. ஒருவருக்குள்ள சொத்தின் ஸ்வதந்திரங்களாவது பாத்தியா பாத்தியங்களாவது இந்த நமூனுக்களில் கண்டிருக்கும் விஷயங்களாலே ஒருவித மாறுதலையும் அடைவதில்லை.

இதற்கு முந்தி செய்யப்பட்ட ஜனக்கணிதைகளில் ஜனங்களும், உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தரல்லாத இதர மனுஷியர்களும் ஜனங்களைக் கணக்கிடுவதில் சர்க்காருக்கு வெகு சிலாக்கியமான உதவிகளைப் புரிந்திருக்கின்றனர். அவ்வுதவியைச சர்க்காராரும் மிக்க நன்றியுடன் ஆங்கீகாரஞ் செய்திருக்கின்றனர். இனி 1931-ம் வருஷம் நடக்கப் போகும் ஜனக்கணிதையிலும் சர்க்காருக்கு ஜனங்கள் 1901, 1911, 1921, வருஷ ஜனக் கணிதைகளில் செய்திருக்கும் உதவிகள் போலவே இப்பொழுதும் உதவி புரிந்து, 1931 ஹு த்திய ஜனக்கணிதையை ஒழுங்காய் ஜனங்கள் நடத்தி முடித்து வைப்பார்கள் என்று கவர்மெண்டார் ஜனங்களை எதிர்பார்க்கிறார்கள்.

ஆகையால் இவ்விஷயத்தில் கவர்மெண்டாருக்கு உதவி புரியும்படி பொது மஹா ஜனங்களையும் நமது செங்குந்த குலச் சீரியர்களையும் மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில், பூருவந் தொட்டு நமது செங்குந்த குல சமூகமொன்று மட்டில் நாளுக்கு நாள் க்ஷீண திசையையே யடைந்து வந்திருக்கின்றது. கல்வி யறிவிலும் மிக்க தாழ்ந்த நிலையை யடைந்து வந்திருக்கின்றது. இக் குறையை நீக்கச் சில வருஷங்களாக நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் மிக்க அரும்பாடு பட்டு வருகின்றனர். இதன் பயனுகப் பல விடங்களில் நம்மவர்கள் சங்கங்களை ஏற்படுத்தி நமது சமூக முன்னேற்றத்துக்கும் கல்வி யபிவிருத்திக்கும் தொழிலபிவிருத்திக்கும் மற்றேனைய சமூகங்களைப் போலவே கவர்மெண்டாருடன் வாதாடுகிறார்கள். ஜில்லா போர்டு, தாலுக்கா போர்டு, நகர சபை முதலியவைகளில் அங்கத்தினர்களாக வருவதற்கும், கவர்மெண்டாரின் நன் மதிப்பைப் பெறுவதற்கும் மிக்க ஊக்கத்துடன் தளரா முயற்சி செய்கிறார்கள் தற்போது நமது சமூகம் ஒரு புத்துயிர் பெற்றிருக்கின்றதென்றே சொல்லலாம். இவ்விதம் நீண்ட உறக்கத்தினின்று தற்போது தான் விழித்துக்கொண்ட நம்மவர்களின் முற்கால நிலைமையையும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் ஏற்பட்டு நிலவியதற்குப் பிந்தியுள்ள தற்கால நிலைமையையும், இந்த ஜனக்கணிதத்தின் உதவியால், சென்ற பத்து வருடங்களுக்கு முன் இருந்த செங்குந்த மகா ஜனங்களின் ஜனத்தொகை, கல்வி யபிவிருத்தி, தொழின் முயற்சி, ஜீவனுேபாயம், பழக்க வழக்கம் முதலியவற்றையும் தற்போதைய ஜனப் பெருக்கு, கல்வி யபிவிருத்தி, நூதன கைத் தொழின் முறை, வியாபார யுக்தி, ஜீவனுேபாயம், பழக்க வழக்க மாறுபாடுகள் முதலியவற்றையும், நாகரீக முன்னேற்ற முயற்சியும், தற்போதுள்ள செல்வாக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் நன்கு அறிந்து கொள்ளலாம். இவைகளைப்பற்றிய குறிப்பெல்லாம் ஜனக்கணித விளம்பரத்தால் நன்கு அறியலாம். ஆகையால் செங்குந்த குல சீரியர்களே ! வரப் போகும் ஜனக் கணிதை விஷயத்தில் நமது மரபினர்களின் சார்பாகக் கவர்மெண்டாருக்கு அவசியமான எல்லா உதவிகளையும் புரிந்து ஒத்துழைக்குமாறு நான் உங்களை மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். முருகன் திருவருள் பெருகுவதாக. சுபம்.



---

## சட்டசபையில் நமக்கு ஏன் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை ?

சென்னை மாகாணத்தில் ஒரு பெருந்தொகையினராகவுள்ள நமக்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம்வேண்டுமென்று நமது தலைச் சங்கமும், கிளைச் சங்கங்களும், பல பிரபல கனவான்களும், தபால் மூலமாகவும் தந்தி மூலமாகவும் அரசாங்கத்தாருக்கு மனு செய்து கொண்டும், மற்றும் வேறு சில வழிகளில் முயன்றும், ஒன்றும் கிடைக்கவில்லை என்பதும், நமக்கெல்லாருக்கும் அரசாங்கத்தாரிடத்து அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது என்பதும் உண்மைதான். பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்குக் காரணம் அரசாங்கத்தாரது ஒழுங்கற்ற முறையும் மனம் போன போக்குந்தான் என்று நமது மித்திரன் பத்திராதிபர் சென்ற மாத மித்திரனில் எழுதியிருப்பதை நாமெல்லாரும் அறிவோம். அவ்வாறு கூறுவதற்குக் காரணங்களையும் காட்டியுள்ளார். அதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். என்றாலும், பத்திராதிபர் காட்டியுள்ளது மாத்திரம் நமது தோல்விக்கும் ஏமாற்றத்திற்கும் முழு காரணமென்று எண்ணக்கூடாது.

நமது மித்திரன் பத்திராதிபர் படத்தின் ஒரு பக்கத்தை மாத்திரமே காட்டியுள்ளார். இப்போது நாம் மற்றொரு பக்கத்தையும் கவனித்துப் பார்ப்போம். நாம் இப்போது கவனிக்கவேண்டியிருக்கிற பாகந்தான் முக்கியமானதெனக் கருதுகிறேன். நாம் பெருந் தொகையினராக இருக்கிறோம் மனுக்கள் அனுப்பினோம். இதுவரையில் நம்மவர்கள் தேர்தல் மூலமாகவும், நியமன மூலமாகவும் சட்டசபையில் இடம் பெற்றாரில்லை. இப்போது நமக்கு ஒரு ஸ்தானமாவது கொடுத்திருக்க வேண்டியது அவசியந்தான். ஆனால் ஏன் கொடுக்கவில்லை என்பதைக் கவனித்துப் பாருங்கள். குடிகளது குறைபாடுகளைத் தீர்ப்பது அரசாங்கத்தின் முக்கியமான கடமையாகும். நமது ஆங்கில அரசாங்கமோ பல ஜாதியாரையும் பல மதத்தாரையும் வித்தியாசமின்றி நடு நிலைமையிலிருந்து ஒரே கண்ணுல் பார்க்கும் தன்மையுடையது. இப்படிப்பட்ட அரசாங்கத்தில் நமக்கு ஏன் ஏமாற்றமுண்டாயிற்று? அரசாங்கத்தார் நம்மை மதிக்கவில்லை. அதாவது, சட்டசபையில் பிரதிநிதித்துவம் பெற வேண்டிய ஒரு ஜாதியாரென நம்மை மதிக்கவில்லை. நம்மிலும் குறைந்த தொகையினரும், முன்னரே இரண்டொரு தடவைகளில் நியமனம் பெற்றுள்ள இனத்தவரும் கனவான்களும் ஸ்தானம் பெற்றிருக்கிறார்களே என்றால், அவர்களிடத்தில் அரசாங்கத்தாருக்கு மதிப்பிருக்கிறது. இதனுல் அதிகாரிகளது நன்மதிப்பை நாம் பெறவில்லை எனத் தெரியவில்லையா ? நாம் எண்ணிக்கையில் மிகுந்திருக்கிறோமே என எண்ணலாம். பயனென்ன? ஒற்றுமை இன்மையும், அபிமானமின்மையும், பொறாமையும் நம்மிடத்தே குடிகொண்டிருக்கும்போது, (அரசாங்கமொருபுற மிருக்கட்டும்; நம்மை நம்மவர்கள் வசிக்கும் கிராமங்களில் வதியும் பிற இனத்தவர்கள் மதிக்கிறார்களா ? இல்லவே இல்லை.) பிறகு அரசாங்கத்தாரைப் பழிப் பழிப்பானேன். பாழும் கக்ஷிதான் நம்மைக் கெடுக்கிறது. அந்தக் கொடிய பிசாசு நம்மை விட்டு எக்காலத்தில் ஒழியுமோ அக்காலத்தில்தான் நாம் க்ஷேமமடைவோம்.

ஆகையால் நமக்குச் சட்ட சபையில் தற்போது பெரு முயற்சி செய்தும் பிரதிநிதித்துவம் கிடைக்காததற்கு முக்கியகாரணம் நம்மிடத்துள்ள பலவீனமென்று தான் நான் சொல்லுவேன். நேற்றுவரையில் தங்களைச் செங்குந்தர்கள் என்று பகிரங்கமாகச் சொல்லிக்கொள்ள விருப்பமில்லாதிருந்தவர்களும், நமது சங்கத்தின் மூலமாகவும் மித்திரன் மூலமாகவும் நடைபெற்றுவரும் நமது இயக்கத்தில் ஈடுபடாமலும் அதைப் பொருட்படுத்தாமலும் இருந்தவர்களும், இப்போது சட்டசபை என்றும், செங்குந்த சங்கத்தலைவர்களென்றும் சொல்லிக்கொண்டு நியமனம் பெறத்தனித் தனியே முயற்சிசெய்ய ஆரம்பித்தார்கள்.

நமது சமூக முன்னேற்றத்திலும், நமது இயக்கத்திலும் அசிரத்தை கொண்டிருந்ததோடு, தங்களால் இயன்ற வரையில் நமது முன்னேற்றத்திற்குப் பிரதிகூலமானவற்றையே இதுவரையில் செய்துகொண்டு வந்தவர்களில் சிலர், மூலையில் உட்கார்ந்தபடியே இவருக்கு என்ன தெரியும்? அவருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? நான் பெரிய மனிதனல்லவா ? என்னையேன் சட்டசபைக்கு அனுப்பக்கூடாது ? என்று சொல்லிக்கொண்டு நமது சங்கங்களின் முயற்சிக்குத் தங்களால் கூடிய அளவு முட்டுக்கட்டை போடவும் செய்தார்கள்.

ஒரே சமூகத்தைச் சேர்ந்த பலர்—அதாவது, நிரம்பிய செல்வாக்குள்ள ஒருவரும், மேலதிகாரிக

ளின் சிபார்சு பெற்ற ஒருவரும், பல சங்கங்களின் சிபார்சு பெற்ற ஒருவரும், எந்த ஆதரவு மில்லாத ஒருவருமாக—அதே சமூகத்தின் பிரதிநிதிகளாகச் சட்டசபையில் இடம் பெற விரும்பி நிற்பார்களானால், அரசாங்கத்தார் யாருக்குத் தான் கொடுப்பார்கள் ?

சட்ட சபை மூலம் குலத்தொண்டாற்றப் பிரியமுள்ள அறிஞர்கள் பலர் இருக்கலாம். அத்தனை பேர்க்கும் நியமனம் கிடைப்பது கூடாத காரியமாகும். ஆகையால் அத்தகைய அறிஞர்கள் பலரும் கலந்து தமக்குள் வேற்றுமையின்றி ஒரே முகமாய் நின்று ஒரே ஒரு தக்க சகோதரரை அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்து முயன்றிருந்தால், அவசியம் நாம் ஒரு ஸ்தானத்தைச் சட்டசபையில் பெற்றிருப்போம்.

இது சம்பந்தமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, நமது தலைச் சங்கக் காரியதரிசியும் மித்திரன் பத்திராதிபருமாகிய திரு. ம. சண்முக சுந்தர முதலியார் M. A. L. T. அவர்களைப் பல நண்பர்கள் வற்புறுத்தத் தூண்டுதல் செய்தும், நம்மினத்துப் பிரதிநிதியாகச் சட்டசபைநியமனத்தை அபேக்ஷிக்காது அட்வொகேட் நண்பர் திரு. V. இரத்தின முதலியார் B.A., B.L., அவர்களுக்காக விலகி நின்றதுமன்றி, அட்வொகேட் அவர்களுடனிருந்து தம்மால் கூடிய வரையில் முயற்சி செய்தார் என்பதைக் கேட்டயார் தான் அவரது தியாக புத்தியைப்பற்றி வியப்படையாதிருப்பார்கள்? இத்தனை வருஷங்களாக அரிய குலத் தொண்டாற்றிவரும் முதலியார் அவர்கள் நம்குலப் பிரதிநிதியாகச் சட்டசபையில் இருக்கத்தக்கவரல்லரென்று யாராவது சொல்ல முடியுமா? முடியவே முடியாது. பிறகு என் அவர் முன் வரவில்லை? அவர் அவ்வாறு செய்தது, அற்பகாரியங்களை முன்னிட்டும் கக்ஷிப் பிளவுகளை யுண்டாக்கித் தியாக புத்தி என்பதில்லாது நாளுக்கு நாள் பிற்போக்கை யடைந்து வரும் நமக்கு, இப்படித் தான் ஒற்றுமையையும், பெருந்தன்மையையும் உண்டாக்கிச் சுய நலங் கருதாது தியாகம் செய்து முன்னேற்ற மடைய வேண்டும் என்பதைக் காட்டுதற் பொருட்டே என யான் கருதுகிறேன். இது வல்லவோ பெருந்தன்மை! இதுவல்லவோ தியாகம்! இத்தகையோ ரல்லவோ நமக்கு வழிகாட்டக் கூடிய இயற்கைத் தலைவர்களாவார்கள்! இதைக் கண்டு இனிமேலாவது நம்மவர்கள் ஒற்றுமையோடிருந்து வாழக்கற்றுக்கொள்ள மாட்டார்களா? எவனொருவன் தான் கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு எனக் கருதி, இன்னும் கற்க வேண்டும் என்று சதா முயலுகின்றானோ அவனே கூடிய சீக்கிரத்தில் பேரறிஞனாவான். அதுபோலவே 'நான் பெரியவன் அல்லன்' என்று எண்ணி என்றும் தாழ்வோடு பணிசெய்பவனே உலகம் மதிக்கத்தக்க பெரியவனாவான். தாழ்ந்து தொண்டாற்றுதலே யாவற்றிலும் பெரிதாகலின் 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்றார் பெரியாரும்.

திருக்கைலாய பரம்பரையினர் என்று பெருமை பேசிக்கொள்ளும் நாம்தான் இன்று சிறுமை யடைகிறோம். ஒற்றுமையுடையவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நாம்தான் இன்று ஒற்றுமை இன்றிச் சீர்குலைந்திருக்கிறோம். புளியங்காய் என்று நினைத்திருக்கிற நாம்தான் புளிப்பில்லாமல் இருக்கிறோம். ஆகையால் ஒன்றுக்குமுதவாத வீணான பழம் பெருமை எண்ணங்களை அடியோடு விட்டொழித்து ஒற்றுமையோடு நின்று வாழக் கற்றுக் கொள்வோமாக. ஐயா, கக்ஷியில்லாத செங்குந்த கிராமமுண்டோ? இதனால் நமக்குண்டாவது பெருமையா சிறுமையா? பலமா பலவீனமா? கௌரவமா அகௌரவமா? சிறிது யோசித்துப் பாருங்கள். சந்தோபசுந்தர் கதையைக் கேட்டதில்லையா? நம்மை நாமே தூற்றிக் கொண்டு பிறரிடத்தில் மதிப்பை இழந்து வருகிறோம். நம்மேல் நாமே வழக்குத் தொடுத்துப் பொருளை இறைத்து ஏழைகளாகிப் பலவீன மடைகிறோம். மதுபானாதிகளைச் செய்து சிறுமை யடைகிறோம். ஒற்றுமையற்று, அபிமானமற்று, பொருளற்று, பலமற்று, ஆசாரமற்று இருக்கிற நாம் பிற இனத்தவரிடத்திலும் அரசாங்கத்தாரிடத்திலும் மதிப்பற்று இருக்கிறோமென்பது ஆச்சரியமாகுமா? பெருமையும் சிறுமையும் தான் தர வந்தமையுமேயொழிய ஒருகாலும் பிறர் தர வாராது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பிறர் மதிக்காத வாழ்வு என்ன வாழ்வு ?

ஆகையால், முன்னேற்றமடைந்து உலகத்தில் மனிதரைப்போல் மதிப்போடு வாழ விரும்பும் எனது சகோதரர்களே! முதலாவதாக ஒவ்வொரு ஊரிலுமுள்ள கக்ஷி விலங்குகளை உடைத்தெறியுங்கள்; அறியாமையைக் கல்லும் கல்வியைக் கல்லுங்கள்; அபிமானத்தை ஆபரணமாகக் கொள்ளுங்கள்; சுயநலத்தைப் பொடியாக்கிப் போடுங்கள்; வீண் வழக்குகளை விட்டொழியுங்கள்; முயற்சி என்னும் வாள் கொண்டு மிடி என்னும் பகையை வெட்டி எறியுங்கள்; ஆசாரத்தைக் கைவிடாது அரிய ஒற்றுமையைக் கைக்கொள்ளுங்கள். பிறர் கட்டிக் கொடுத்த கட்டுச் சோறும், சொல்லிக் கொடுத்த சொல்லும் எத்தனை நாளைக்குத் தாங்கும்? பிறர் தோளைப் பிடித்து நிற்காது சொந்த பலத்தால் உங்கள் காலைக்கொண்டு நில்லுங்கள். எல்லாச் சீரும் சிறப்பும் தாமே உங்களைத் தேடிவந்தடையும்.

உண்மை விளம்பி.



600 003

# செங்குந்த யாத்திரைவாசி

## குலாபிமானப் படலம்

(404-வது பக்கத் தொடர்ச்சி)

வீர:—தருமராஜனே! சரி, குலத்துரோகத்திற்கு மடாதிபதிகள் உதாரணம் ஒன்றுதானா ?

தரு:—ஐயனே! அளவிறந்த உதாரணங்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் கூறுவதென்றால் மாதங்களல்ல, வருஷங்களானாலும் சொல்லி முடியாது. ஆயினும் ஒன்றோடு நிறுத்தாது இன்னும் இரண்டொன்று கூறுவேன்.

ஒரு நகர பரிபாலன சபைக்கு அங்கத்தினராகச் சில கனவான்களை அந்நகரத்தின் பல பகுதிகளிலுமிருந்து தேர்ந்தெடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. ஒரு பகுதியில்பெரும்பாலோர் செங்குந்தர்களிருந்தார்கள். அப்பகுதியில் தவிர வேறெந்தப் பகுதியிலும் செங்குந்தர்கள் தேர்தல் மூலம் எக்காலத்திலும் வர இயலாது. முன்னர் கூறிய வல்லரக்கரோடு இவர்கள் செய்துள்ள உடன்படிக்கைப்படி செல்வாக்குள்ள வேறெந்த இனத்தவரோடும் கூடிப்பழகும் தைரிய மின்மையாலும், கண்ணாகிய கல்வி யின்மையாலும், இவர்களுக்கு நியமன மூலமாகவும் (Nomination) ஷை சபையில் ஸ்தானம் பெற முடியவில்லை. இப்பகுதியின் பிரதிநிதியாகத் தேர்தலில் வெற்றி பெற்ற பிற இனத்து அங்கத்தினரும் இவர்களைச் சட்டை செய்வதில்லை. ஏனெனில், செங்குந்த ஓட்டர்களுள் சிலர் தாக்ஷண்யத்திற்கும், சிலர் பயந்தும், மற்றுஞ் சிலர் சொற்பமும் அன்றைக்குதவுவதுமான பலாபலத்தை நாடியும் தங்கள் வாக்குரிமையைக் கொடுப்பது வழக்கம். ஆகவே இவர்கள் வசிக்கும் பகுதியை ஷை சபையார் கவனிப்பதே இல்லை. தெருக்கள் அதிகேவலமான நிலையிலிருந்தன. சுகாதார மென்பதை இவர்கள் கனவிலும் அறியார்கள். அந்நகரில் கொள்ளை நோய் வருவதென்றால் முதன் முதல் இப்பகுதியில்தான் பிரவேசிக்கும். இங்கிருந்துதான் கடைசியாகவும் ஊரைவிட்டுப் போகும். கொள்ளை நோய்க்குப் பரிகாரம் செய்யக் கருதிக் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டாற்போல, குடம் நிறுத்திக் கூத்தாடிக் கண் விழித்து உற்சவங்கள் செய்து, அந்தோ பாபம்! குற்றமற்ற வாயில்லாச் சீலன்களைப் பெருங் கொள்ளையிடுவார்கள். ஊரில் இதுவே கேவலமான பகுதி. பரிபாலன சபையார் கவனிப்பதே இல்லை. இந்நிலையில் வெளி விவகாரங்களில் கொஞ்சம் அடிபட்ட செங்குந்தர்கள் இரண்டொருவர்களிருந்தார்கள். அவர்களோ சுயகாரியப் புலிகள். குலப்பற்றென்பது எவ்வளவு மில்லாதவர்கள். நெஞ்சில் ஈரமில்லாதவர்கள். இவர்களுக்கு ஷை பரிபாலன சபையில் தேர்தல் மூலமும் நியமன மூலமும் ஸ்தானம் பெற முடியவுமில்லை. தங்கள் இனத்துக் கனவான்களைத் தேர்தலில் நிக்கவாவது, ஒரு சமயம் தைரியமாய் நின்றாலும், வெற்றி பெறவாவது விடமாட்டார்கள். ஊரை இரண்டு மூன்றாக்கிக் கலைத்துப் கொடுப்பார்கள்.

இதை யறிந்த சில செங்குந்த கனவான்கள் ஒன்றுகூடி நியமன மூலமாவது தம்மில் யாராவது நகர பரிபாலன சபையில் இடம் பெற்றுத் தங்கள் குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று முயற்சிசெய்தால், அதிலும் தங்கள் முழு பலத்தையும் செல்வாக்கையும் செலுத்தித் தங்குலத்தவர்க்கு ஆகாதபடியும் வேறினத்தவருக்கு ஆகும்படியும் பிரயத்தனம் செய்வார்கள்.

வேலூர் ஊரில் பல்லாண்டுகளுக்கு முன்னர் செங்குந்தர்களால் கட்டிப் பரிபாலிக்கப் பெற்று வந்த ஒரு சிவாலயத்தை இவர்கள் பிளவால் பலவீன மடைந்திருந்ததைக் கண்டு இதுவே சமயமென வேலூர் இனத்தவர் தங்களுடையதென்று சாதிக்க முயன்றார்கள். ஒரு கக்ஷிக்காரர் அவர்களுக்கு உதவியாயிருந்தார்கள். எதிரிக்கு உதவி செய்த கக்ஷிக்காரர்கள் செங்குந்தர்களுக்கு அநுகூலம் செய்யக் கூடிய தஸ்தாவேஜுகள் அனைத்தையும் மறைத்து விட்டு, எதிரிகளுக்கு வேண்டிய உளவுகளும் சொல்லிக் கொடுத்துத் தம்மினத்தவருக்குக் கோயிலில் யாதொரு உரிமையும் இல்லையென மன்றோரஞ் சொல்லிப் பல்லூர்ச் செங்குந்தர்கள் சாபனையுமேற்று, எதிரிகளுக்கு ஜெயமுண்டாகும்படிச் செய்தார்கள். இதுமட்டுமா! பகிரங்கமான வழக்கு மன்றத்தில், தம்மினத்துக்கு இழிவையும், ஏனையோருக்கு மேன்மையையும் எவ்வளவு உண்டாக்கலாமோ அவ்வளவும் உண்டாக்கவும் செய்தார்கள். இவர்களுள் பேர்போன சில நாட்டுத் தலைவர்களும் உண்டு.

அந்தோ பரிதாபம்! இன்னும் கேளுங்கள். தங்களுக்குள் ஒருவர் முன்னுக்கு வரவும் மேன்மையடையவும் கண்டால் மனம் பொறார்கள். பிறரை மேன்மைப் படுத்தி எதிரில் கை கட்டி நிற்பார்கள். குற்றமற்ற தம்மினத்துப் பெரியார்மேல் இல்லாததும் பொல்லாததுமாகக் கூறித் தூற்றுவார்கள். அவருக்குச் செய்ய வேண்டிய தீங்குகள் அனைத்தையும் செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். இதனால் தங்களுக்கும் தங்கள் இனத்திற்கும் தாழ்வுண்டாகிறதைச் சிறிதும் கவனியார்கள். 'அறை

பறையன்னர்...'என்ற நாயனர் குறளைப் பொன் னேபோல் போற்றுவார்கள்.

முன் பின் அறியாத ஒருவன் ஒரு செங்குந்த கிராமத்தின் குளக் கரையில் 5 நிமிஷம் நின்ருல் போதும் அவ்வூர்ச் சம்பந்தமான விஷயங்களை யெல்லாம் சம்பூர்ணமாகத் தெரிந்து கொள்ளலாம். இவ்வளவும் தகங்ள் இனத்தவரைக் குறித்த விஷ யங்களாகத்தானிருக்கும். இத்தகையோர்க்குப் பிறர் மதித்தல் எவ்வாறு சித்திக்கும்? இதனுல் தக்க பெரியோர்கள் இவர்களுக்குள் இல்லை யென்று நான் சொல்ல வரவில்லை. பல அறிஞர்களும், பெரு நோக்க முடையவர்களும், ஆசாரமுடையவர் களும், உண்மைப் பக்தர்களு மிருக்கிருர்கள். ஈண் டுரைத்தது பெரும்பான்மையோரைக் குறித்தே யாகும்.

இனி, மதுபானத்தைக் குறித்துக்கவனிப்போம். இதைப்பற்றிச் சொல்ல என் மனம் கூசுகிறது. அநேக மதுக் கடைகள் இவர்களுக்கெனவே இவர் கள் கிராமங்களுக்கருகே வைக்கப்பட்டிருக்கின்றன என்ருல் மேலும் என் கூறவேண்டும்? பூர்வகாலத் தில் இருந்த அந்தஸ்தென்ன! ஆசார மென்ன!! அந்தோ! இப்போதிருக்கும் பிறர் எள்ளி நகை யாடும் நிலை யென்ன! அதற்கும் இதற்கும் ஏணி வைத்துப் பார்க்க வேண்டு மென்பதும் பொருந் தாது. அன்று பிரம தேவனும் மகா விஷ்ணுவும் தேடியுங் காணுத சிவபரம் பொருளினது முடியை யும் அடியையுந்தான் ஒப்பிட்டுச் சொல்லலாம், பொருளாதாரத்திலும் பிறவற்றிலும் இவர்கள் பின்னடைந்திருப்பதற்கு முக்கிய காரணங்களுள் இது முதன்மை பெற்று நிற்கும். பஞ்சமா பாதகங் களுள் நடுநாயகமாய் விளங்கிக் குடி கெடுக்கும் இக் குடியில் குடிகொண்டிருக்கிருர்கள். இவர்கள் சொந்தமாகக் குடிபுக வேண்டிய இடம் ரவுரவாதி நரகங்களா? கைலாசமா? நீங்களே கூறுங்கள். எனக்கு வேலை இவர்களால் அதிகமாய் விட்ட தென்று நான் சொல்லவில்லை. இவையாவும் உண்மையே.

நாரதர்:—(தாழ்ந்த குரலில்) சித்திரகுப்தனை இன்னும் காணுமே!

தரு:—அவ்வளவு கணக்கையும் இவ்வளவு சீக்கி ரம் கொண்டுவர, சித்திர குப்தன் என்னதான் சுரு சுருப்பானவனுயிருந்தாலும் முடியுமா?

இச்சமயத்தில் பிரமதேவர் அவ்விடம் வந்தணைந்தார்.

## பிரம தேவர் விசாரணைப் படலம்

நார:—வாரும்! வாரும்!! தங்களைத் தான் நினைத்துக்கொண்டே இருந்தேன்.

ஆறுமுகப்பெருமான்:—பிரமதேவரே, வாரும்! உமக்கு ஆள் அனுப்ப எண்ணியிருந்தோம். நல்ல சமயத்தில் வந்து விட்டீர். விஷயம் தெரிந்து வந் தீரா? தெரியாமல் வந்தீரா?

பிரம:—ஸ்வாமி! தெரிந்தே வந்தேன். விசா ரணை விஷயம் எல்லாலோகங்களுக்கும் எட்டி விட்டது. தேவர்கள் முதலியோர் ஆங்காங்கு கூட் டங் கூட்டமாகக் கூடி யான்வரும் வழியில் பேசிக் கொண்டிருக்கிருர்கள். 'எமதருமராஜன் தன்னு டைய குறைகளையெல்லாம் சந்நிதானத்தில் கொ ட்டி ஆற்றிக் கொள்ளுகிருர். ஏதோ 'விமோசனம் உண்டாகு'மென்று சொல்லிக் கொள்ளுகிருர்கள். என்னையும் விசாரிக்க வேண்டியிருக்கு மாகையால் சொல்லி யனுப்புகிறவரையில் இருப்பது தகுதி யல்லவென்று கருதி உடனே புறப்பட்டு வந்தேன்.

வீர:—பிரம தேவரே! யாம் தமிழகத்தின் கண்ணே செங்குந்தர்களுக்கென ஏற்படுத்திய 72 குரு பீடங்களுள் இப்போது எத்தனை இருக்கின் றன.

பிர:—சுவாமி! எல்லா மிருக்கின்றன. குரு பீடங்களும் இருக்கின்றன; சீடர்களும் அப்படியே இருக்கிருர்கள். ஆனுல் குருமார்கள் மாத்திரம் தங்கள் குலப்பெயரை மாற்றிக்கொண்டு வேறினத் தவருடன் கலந்து விட்டனர். இப்போது செங் குந்தர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மடாதி பதிகள் மூன்றே பேர் இருக்கின்றனர். அம்மூவ ருள்ளும் ஒருவர் மேற் கூறியவாறு வேறினத்தவ ரோடு கலந்து கொள்ள முயன்று வருகிருர். வேருெருவர் குடும்பம் கூடிய சீக்கிரம் சந்ததியின் றிப் போய் விடும். கடைசியாக ஒன்றே நிற்கும் போலிருக்கிறது.

வீர:—இப்போது மூன்றுதானு இருக்கின்றன?

பிர:—தாங்கள் ஸ்தாபித்தவற்றுள் மூன்றுதா னிருக்கின்றன. ஆனுல் மத்திய காலத்திலிருந்த சில செங்குந்த பெரியோர்கள் இனக்குரு இல்லா மையாலுண்டான தீமைகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கருதிச் சில நாடுகளில் புதிதாய்க் குரு பீடங்கள் நிறுவினுர்கள்.

நார:—(எழுந்து பிரமதேவரை வணங்கி) குரு மார்கள் குலப்பெயரை மாற்றிக் கொண்டதனுல் செங்குந்தர்களுக் குண்டாகும் இழுக்கென்னையோ? அவர் செய்கிற உபதேசங்களைச் செய்கிருர்கள்; இவர்கள் கொடுக்க வேண்டிய காணிக்கைகளைக் கொடுத்து விடுகிருர்கள். அவ்வளவு தானே நமக்கு வேண்டியது.

பிர:—நாரதர் சொல்வது பொருந்தவே பொருந் தாதது. சீடர்களைத் தன் நிலைக்குக்கொண்டு வரு வது தானே குருவின் கடமை. 'குருவும் சீடனும் கூடிக் கலந்து' என்றல்லவோ ஆன்ருேர் கூறி யுள்ளார். குலப்பெயரை மாற்றிக்கொண்டவர் கள் சீடனைச் சமமாகப் பாவிப்பார்களா? தாம் உயர்ந்தவனென்றும் சீடன் தாழ்ந்தவனென்றுந் தானே கருதுவார்கள். இத்தகையோர் சுய நலத்தை மாத்திரம் விரும்புவாரே யன்றிச் சீடனது நன்மையை ஒருபோதும் கவனியார். பிரகஸ் பதியை நீக்கி ஓர் அரக்கனைக் குருவாக வைத்துக் கொண்டு தேவேந்திரன் பட்டபாடு உலக மறிந்தது தானே. ஒரு சமயம் மறந்திருந்தாலும் ஞாபக



மூட்டத் திருவிளையாடற் புராண மில்லையா? சீடன் தன்னைப் பார்க்கிலும் தாழ்ந்தவன் என்று நினைத்து வித்தியாசமாக நடப்பவன் குருவாக இருக்க யோக்கியதை யற்றவனுகிருன். இது தெரியாமலா பானுகோபனைத் தடிந்த பரம தயாளுவாகிய இம்மூர்த்திகள் (வீரவாகு தேவ ரைச் சுட்டிக்காட்டி) செங்குந்த குலத்தவரையே ஒவ்வொரு நாட்டிலும் குருமார்களாக ஏற்படுத்தி ஞர்கள். இப்போது இச்செங்குந்தர்கள் இக் கேவல ஸ்திதிக்கு வந்ததன் காரணமும் இது தானே. வேறினத்துக் குருமார்களுக்குச் செங் குந்தர்கள் அடைந்துள்ள ஆசாரக்குறைவால் உண்டாகும் இழுக்கென்னை?

நார:—(ஒரு புறமாகத் திரும்பிக்கொண்டு) ஆமா மாம், என்னை வீணுய்......

வீர:—பிரம தேவரே! செங்குந்தர் சிவா பராதம் உயிர்க் கொலை முதலிய பல காரியங் களைச் செய்து அநேகமாய் நரகத்திற்குப் போகி ருர்களாமே? அதைப்பற்றி உமக்கு ஏதாவது தெரி யுமா?

பிர:—வீரசிகாமணியே! மன்னிக்க வேண்டுகி றேன். வேதம் ஓதும் அடியேன் வாயால் அவர் கள் துர்க்கிருத்தியங்களைக் கூறி, அதிலும் இப்பரம் பொருளின் மகா சந்நிதானத்தில் கூறிப் பாபத் தைத் தேடிக் கொள்வதை விடத் தங்கள் கட்டளை யை மீறுவதற்காகச் சாப மிடுவீராயின் அதை மிகுந்த சம்மதத்தோடு ஏற்றுக் கொள்வேன்.

இக்கைகளால் யான் வருந்திச் சிருட்டிக்கும் உயிர்கள்—ஒருவருக்கும் தீங்கிழைக்காத உயிர்கள், இவர்கள் உயிரைப்போல் தங்கள் உயிரையும் இனிமையாகக் கருதும் உயிர்கள், இப்பரம் பொருளினது வாயற்ற குழந்தைகளாகிய திக் கற்ற உயிர்கள் — சில தேவதைகள் பெய ராலும் பண்டிகைகள் பெயராலும், அந்தோ பாபம்! பதைக்கப் பதைக்கச் சொல்லப்படுகின்றன வே. தாம் வளர்த்த நச்சு மரமாயினும் கொ ல்ல மனம் வருமோ. இக்கொடிய செயல்களை யான் எவ்வாறு சகித்துக் கொண்டிருப்பேன்? என் குறைகளை ஒருவாறு கொட்டி ஆற்றலா மென்றே இப்போது ஓடி வந்தேன். எனக்கும் தருமராஜ னுக்குந் தான் இதனுல் அதிக கஷ்டம். அந்தோ பரிதாபம்! சித்திர குப்தனை வழியில் கண்டேன். அலைய குலைய ஓடி வருகிருன். அவன் பின்னுல் மலைகளைப் போல் கணக்குச் சுவடிகள் அடுக்கிய வண்டிகள் கண்ணுக் கெட்டிய தூரம் வந்து கொண்டிருக்கின்றன.

நார:—(அருகிலிருந்த ஒரு முனிவரைப் பார்த்து நவவீரர் காதில் படும்படி) பாருங்கள்! ஆயிரத்தில் ஒரு கூறுகூட வெளியாக்காத என்னைக் கோபித் துக் கொண்டார்களே! இது என்ன விபரீதம்!

(நவவீரர்கள் அப்போது காலாக்கினிருத்திரர் களைப்போல் விளங்கினுர்கள்.)


# மகம்மேரு தைலம்.



கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளுக்கெல்லாம் இந்தத்தைலமானது மிகவும் கைகண்டது. சிரசைப்பற்றிய வாதநீர்சாலேநீர் மேகநீர் பித்தசுரத்தைக் கண்டித்துநேத்திரத்தில் பித்தநீராவது, மேகநீராவது, கபாலத்தைப்பற்றியிருக்குமாகில் தலைமுழுதும்நமைச்சல், ஊரல், எரிச்சல், தலைமயிர் உதிரல், தலையில் சுண்டுகள், தலையில் ரணங்கள் இப்பேர்க்கொத்த கபால ரோகங்களை கைக்கு மெய்யாய் கண்டிப்பதினுல் மகம்மேரு தைலமென்று பேர் வைக்கப்பட்டது. மேலும் மேக வெட்டையினுலாவது பித்தச் சூட்டினுலாவது உதிரம் கெட்டுப்போய் திரேகமுழுதும் ஊரல், நமைச்சல், சொரி, சிரங்கு, அழுக்குத்தேமல், தேகவரட்சி, தேகவெளுப்பு கண்களில் முகத்தில் இரத்தமில்லாமல் வெளுத்துப்போதல் இப்பேர்க்கொத்த வரட்சிகளெல்லாம் தணித்து நல்ல இரத்த ஓட்டமுண்டாக்கும்.

இந்த தைலத்தை காலுநாளைக்கொரு முறை அதிகாலையில் தலைமுழுகவேண்டியது. அன்றையதினம் பகல் நித்திரையும் தயிர் மோர் குளுமையான பதார்த்தம் இதுகள் மட்டும் ஆகாது. மற்றபடி வேறே யாதொரு பத்தியமும் கிடையாது.

ஆழாக்கு தைலம் புட்டி ரூ. 1 8 0

# விஷ ஹரி,

தேள், பாம்பு, இதர விஷ ஜந்துக்களின்
கடியின் விஷ வேதனையை
உடனே நீக்கும்.

ஆயிரக்கணக்கான ஜனங்களின் உயிர்களைப் பல கிராமாந்திரங்களிலும் வயல்களிலும் காப்பாற்றிப் பிரசித்தியடைந்து இருக்கிறது. ஒரு புட்டி உம்மிடமிருந்தால் சமயத்தில் ஒருயிரைக் காப்பாற்றலாமென்று உண்மையாய் நம்புங்கள்.

விலை புட்டி 1-க்கு ரூ. 1 0 0
புட்டி 3-க்கு ரூ. 2 8 0

ஆனந்தா வைத்திய சாலை,
தபாற் பெட்டி நெ. 288,
சென்னை.

# நாவல் பகுதி

## மீனாட்சி சுந்தரம் (அல்லது) விவேகமுள்ள சுந்தரம்

[திருவாளர் ம. தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்கள், பி. ஏ.]

(408-வது பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் புருஷருக்கு அடிமையல்லவென்றும், அவர்களுக்கும் சுயேச்சை சுதந்தரம் உண்டு என்றும், அவர்கள் முன்னேற்றமடைந்தால் தான், புருஷருக்குச் சுகம் உண்டென்றும், மற்றும் நாடு சீர்திருத்தமடைய அவர்கள் நலனை நாடவேண்டும் என்றும் கூறி, தன் தங்கைகள் தன்னைப் போல் வருந்துகிறார்களே, அவர்களை என்று அடிமைத் தனத்திலிருந்து நீக்குவது என்று உன்னி அல்லும் பகலும் அல்லலுற்று எண்ணாத எண்ணம் எண்ணி நெஞ்சம் புண்ணாகிக் காலத்தைக் கழித்துவந்தாள். அவள் எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது நல்ல புத்தகத்தை வாசித்துக் கொண்டிருப்பாள்.

கருணாகரருக்குச் சண்பகம் வாசிப்பது பிடிக்கவில்லை. பெண்கள் வாசித்தால், தலைமீறி விடுவார்கள்; ஒருவருக்கும் அடங்கமாட்டார்கள்; வீட்டு வேலையில் பழகப்பட மாட்டார்கள் என்னும் கெட்ட எண்ணங்கள் அவர் மனதில் குடிகொண்டிருந்தன. ஆகையால் சண்பகத்தை அடிக்கடி கண்டித்தும் அவள் மனம் நோகும்படி வார்த்தைகள் சொல்லியும் இம்சித்து வந்தார். மேலும் சண்பகத்திற்குச் சங்கீதத்தில் பிரியம் அதிகம். அவளுக்கு ஆர்மோனியம், பிடீல், வீணை முதலிய கருவிகளைக் கொண்டு வாசிக்கக் கற்றுக்கொள்ள ஆர்வம் அதிகம். இது அவளால் முடியாத செயல். என் என்றால் இவள் தந்தைக்கு இயற்கையாகவே சங்கீதத்தின்மீது வெறுப்பு அதிகம். மேலும் அவர் கொண்டுள்ள பழக்க வழக்க அனுபோகத்திற்குச் சங்கீதம் தள்ளப்பட்டது. கருணைபொங்கித் ததும்பிப் பூரணமாய் ஓடும் ஒருவரிடத்தில் சங்கீதம் அவரை அறியாமலே உண்டாகும். ஆனால் கொடூரமே உருவாக அமைந்த கருணாகரர் முன்னிலையில் சங்கீதம் பறந்து ஓடும். சண்பகம் உற்சாகத்தில் பாடும்போதும் அல்லது அவள் சிநேகி இராஜாமணி தன் சங்கீதக் கருவியைக் கொண்டுவந்து சண்பகத்திற்குக் காட்டும்போதும் அவள் பாடினால் கருணாகரர் வந்துவிட்டால் பயந்து பாட்டை நிறுத்திவிட்டுத் தன் வேலையைச் செய்வாள்.

ஒரு நாள் சண்பகம் பாடும்போது கருணாகரர் நாகரத்தினத்தைப் பார்த்து,

கருணா:—இவள் இப்படியிருந்தால், வீட்டு வேலையை யார் செய்வார்கள்? இங்குதான் நீ செல்லம் கொடுத்துக் கொஞ்சுகிறாய். எங்கேயாவது கட்டிக்கொண்டுசென்றால் இவள் மாமியார் இவளை வேலை செய்யக் கட்டளையிடாமல் சும்மா விட்டு விடுவாளா?

நாக:—என்ன எப்பொழுது பார்த்தாலும் இவ்விதம் கடுகடுத்துப் பேசியிருந்தால் குழந்தை என்றைக்குத்தான் உற்சாகம் பெற்று இருப்பது?—ஏதோ இராஜாமணி தன் மாமன் வாங்கிக்கொடுத்த வீணையைக் காட்ட இங்கு வந்தாள். அவளை வாசிக்க இவள் கூறியபோது, "நீ பாடினால் வாசிக்கிறேன்" என்றாள். இவள் பாடினால் என்ன? எப்பொழுதுமா வாசித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கப் போகிறார்கள். நீங்கள் தான் வாங்கிக் கொடுக்க மறுத்தாலும் பிறர் வைத்திருந்ததைக் கொண்டு கற்றுக் கொள்கிறாள்.

கருணா:—இதுவரைக்கும் யார் நம் குடும்பத்தில் இதையெல்லாம் வைத்துக்கொண்டு கற்று வந்தார்கள்? இப்பொழுதுதான் புதியதாயிருக்கிறது. சண்பகம் ஏதோ படித்துவிட்டுக் கர்வம்கொண்டு திரிகிறாள். இராஜாமணி அந்தஸ்து என்ன? இவள் அந்தஸ்து என்ன? அவள் உழைக்காமலே சாப்பிடுவாள். அவள் பாட்டும் பாடுவாள்; வீணையும் வாசிப்பாள். அவளுக்கு வேறு வேலை என்ன இருக்கிறது? அவளைப் பார்த்து இவள் நடந்தால் முடியுமா?

இதையெல்லாம் உற்றுக்கேட்டிருந்த சண்பகம் பாட்டை நிறுத்தி மனம் நொந்தாள். சம்பாஷணையை ஒன்றுவிடாமல் கேட்டிருந்த இராஜாமணி, "நாம் இனி இங்கிருப்பது மரியாதையல்ல" என்று நினைத்துச் சண்பகத்தினிடம் விடை பெற்றுக் கொள்ள வீணையை எடுத்துக்கொண்டு எழுந்தாள்.

இராஜாமணி:—அக்கா! அப்பா கோபித்துக் கொண்டார். நான் வருகிறேன்.

சண்:—அடி இராஜாமணி! தங்காய்! நான் என் செய்வேன். என் தந்தை அப்படித்தான் வார்த்தையாடுவார். கோபம் வேண்டாம்.

இரா—அக்கா, கோபம் இல்லை. நான் இனி வரவில்லை. நான் வருவது உன் தந்தைக்குப் பிடிக்கவில்லை.

சண்:—தங்காய்! ஆம். நீ சுகமாய் சீமாட்டியைப் போல் உன் மாளிகையில் இருப்பதை விட்டு இந்த வீட்டில் என்னைப் பார்க்க வந்ததினாலே வசைமொழி கேட்க நேர்ந்தது. என்னை மறக்க வேண்டாம் அடி!

இரா:—சண்பகம், உன்னைப் பிரிந்தியிருக்கும் நேரமெல்லாம் நரகவேதனையாயிருக்கிறது. ஆ அக்கா! என் உயிர் உள்ளவரையில் ஒருநாளும் உன்னை மறவேன்.

இராஜாமணி சண்பகத்தைக் கட்டி முத்தமிட்டு விடை பெற்றுக் கொண்டு தான் கொண்டு



வந்த சங்கீதக் கருவியை எடுத்துக் கொண்டு சரேலென்று கதவை திறந்து வெளி வந்தாள். ஒரு புறம் நாகரத்தினம் வருந்தி நிற்பதைக் கண்டு, அவள் முன்னிலையில் போய் நின்று வணங்கி, பேச வாய் எடுக்கும் போது,

நாக:—இராஜாமணி! இவ்வளவு சீக்கிரமாய் வாசித்து விட்டு வந்து விட்டாயா? அவள் உன்னை இவ்வளவு சீக்கிரமாய் அனுப்பிவிட மாட்டாளே? ஏதாவது சண்டை போட்டுக் கொண்டீர்களா? அவள் ஒன்றும் அறியாதவள். ஏதோ விளையாடியிருப்பாள். இதற்கெல்லாம் கோபித்து வந்து விடலாமா? முகத்தைச் சுளித்துக் கொள்ளலாமா? வா, சமையல்வேலை எனக்கும் முடிந்தாய் விட்டது. ஏதோ கொஞ்சம் ஒழிவு இருக்கிறது. நீ சண்பகத்தினிடம் இருப்பாய், நானும் அங்கு வரலாம் என்று நினைத்துக் கதவைத் திறக்க கை வைத்தேன், நீயும் வந்தாய். உன் சங்கீதத்தைக் கேட்க எனக்கு அதிக நாளாக ஆவல். இன்று சரியாய் அமைந்தது. இது வரையில் சங்கீதக் கருவியில்லை என்று சாக்குப் போட்டு வந்தாய். இப்பொழுது அதுவும் உன் கையிலிருக்கிறது. சரியான சமயத்தில் அகப்பட்டாய். இன்று நீ பாடுகிற வரையில் உன்னை விடப்போகிறதில்லை.

என்று கூறிக் கொண்டு, இராஜாமணி கையைப் பிடித்து, அறைக்கு அழைத்துச் செல்ல முயன்றாள்.

இராஜா:—அம்மா! நான் ஏதோ அவளுக்குக் கற்றுக்கொடுத்து விடுகிறேன் என்று கருணாகரர் எண்ணியிருக்கிறார். நான் வருவதால்தானே இந்தச் சந்தேகம். இனி வரவில்லை அம்மா! பேசிக் குலாவினால்தான் சிநேகிதமோ அல்லது அன்போ. அம்மா! எனக்கும் தமக்கை சண்பகத்திற்கும் தெரிந்த வரையில் உள் அன்பே மேலான அன்பு. அம்மா! அக்காள் சுகமாக இருந்தால் அதுவே போதுமானது. நான் வருகிறேன்

என்று கூறி நாகரத்தினத்தை வணங்கிச் சென்றாள்.

போகும்போது நாற்காலியிற் சாய்ந்து வாசித்துக்கொண்டிருந்த கருணாகரரைப் பார்த்து ஒரு வித குறும்பு சிரிப்போடு,

இராஜா:—தாதா, நான் வரட்டுமா?

கருணா:—ஏது இவ்வளவு சீக்கிரம் புறப்பட்டது! மழை பெய்யும்போலிருக்கிறதே!

இராஜா:—(புன்முறுவலோடு) மழை பெய்து அடங்கிவிட்டது. தாதா! இனி நான் இங்கு வரப் போகிறதில்லை.

கருணா:—ஏன் அம்மா அப்படி?

இராஜா:—ஒன்றுமில்லை தாதா, அவர் அவர் கெடுவது அவர் அவர்களுக்கு தெரியவில்லை; வீணாகப் பழித்து என்ன பயன்? நான் வருகிறேன்.

என்று கூறிக் கோபப் பார்வையோடு கருணாகரர் தன்னை மீண்டும் அழைப்பதற்கு முன் சடசடவென்று சென்றாள்



தற் செயலாக மீனாட்சி சுந்தரத்தின் கதவு திறந்திருந்தது. இராஜாமணி சிறிது நாணிக் கதவின் ஓரமாகச் சென்றாள். மீனாட்சி சுந்தரம் பார்த்து,

மீனாட்சி சு:—இராஜாமணி! நீயா? ஏது இவ்வளவு அவசரம்? ஏது இன்றைக்குச் சண்பகத்தை விட்டு அவசரமாகப் புறப்பட்டது.?

இராஜாமணி திரும்பிவந்து அழுத வண்ணம் நின்றாள். உடனே மீனாட்சி சுந்தரம்,

மீனாட்சி சு:—இராஜாமணி! அழாதே. என்ன சங்கதி?

இரா:—நான் அக்காளைக் கெடுத்து விடுவதாகத் தாதா கூறுகிறார். நான் ஏன் வரவேண்டும்? வருவதால் தானே இந்தச் சொல்—

மீனாட்சி சு:—இராஜாமணி நன்றாய்க் கூறினை! தந்தை உன் மீது ஏன் சந்தேகம் கொள்ள வேண்டும்? நீ என்ன செய்தாய்? பழி ஓரிடம் பாவம் ஓரிடமா?

இராஜாமணி 'நான் வருகிறேன்' என்று கூறிப் படபடப்பாக வேகமாய் நடந்து தன் பங்களாவிற்குச் சென்றாள். அவள் வளர்த்து வந்த நாய் அவள் சேலையைப் பற்றிக் கொண்டு அவள் பின்னால் வாலையாட்டிக் கொண்டு சென்றது. இராஜா மணி தன் அருமை நாய் தொடர்ந்ததையும் கவனிக்காமல் தன் அறைக்குட் சென்று சங்கீதக் கருவியை வைத்து விட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டு தன் ஆருயிர் சண்பகத்தை மீண்டும் என்றைக்குப் பார்ப்போம் என்று ஏங்கினாள்.

அவள் சென்றதும் நாகரத்தினம்மாள் மனதில் எண்ணினாள்: "நாம் இராஜாமணியை நமது மகன் மீனாட்சிசுந்தரத்திற்குக் கேட்க எண்ணியிருந்தோம். ஆ! இப்பொழுது அவளை வரவேண்டாம் என்று கூறிய பிறகு அவள் தாய் தந்தையர் என்ன உரைப்பார்களோ? அவர்கள் மறுப்பதில் அணுவளவேனும் சந்தேகமில்லை."

உடனே சண்பகத்தைப் பார்க்க அறைக்குட் செல்லக் கால் எடுத்து வைக்கும்போது கருணாகரர் பார்த்து,

கருணா:—அந்த சிறுக்கிப் போன வேகத்தைப் பார்த்தால் மறுபடியும் திரும்பிப்பார்க்க மாட்டாள் போலிருக்கிறது. இதுவும் நல்ல காலத்திற்குத் தான். அந்தக் கலகக்காரி ஒழிந்ததும் நல்லதே.

நாக:—பாவம்? அவள் எவ்வளவு வருந்தினாளோ யாருக்குத் தெரியும்? மகள் போல் வந்துகொண்டும் போய்க் கொண்டும் பேசிக்கொண்டுமிருந்தாள்: ஏதோ விளையாட்டாக அவளும் இவளும் பேசி விநோதமாகக் காலத்தைக் கழித்து வந்தால் அவளைக் கலகக்காரி என்று கூறி என் பழிக்கு ஆளாக்குகின்றீர்கள்.

கருணா:—உனக் கொன்றும் தெரியாது. இங்கிருக்கும் விஷயத்தை அங்கு சொல்கிறாள். இதனால் வீண் விவாதம் ஏற்படுகிறது.

நாக:—அவள் நல்லவள். உமக்குப் பிடிக்கவில்லை. சரி, நான் வருகிறேன்.

என்று கூறி அறையினுட் சென்றாள்.

---

மூன்றாவது அத்தியாயம்

ஒருநாள் மீனாட்சிசுந்தரம் சற்று ஏதோ அவசரமாக வெளியே சென்றிருந்தான். அப்பொழுது அவன் நண்பன் சந்திரசேகரன் அவனைக் காண அவன் வீட்டிற்கு வந்தான். சிநேகிதன் அறை பூட்டப்பட்டிருந்தது. உடனே சந்திரசேகரனுக்கு மனதில் பல சந்தேகங்கள் உண்டாயின. ஏன் என்றால் வழக்கம்போல் மீனாட்சி சுந்தரத்தின் அறை திறந்து இல்லாததால், ஊருக்குச்சென்றிருப்பானோ என்று எண்ணி, சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளச் சற்றுத் தயங்கினான். கேட்டு அறியலாம் என்றாலோ அங்கு ஒருவரையும் காணோம். வீடோ ஒருவரும் குடியில்லாத வீடுபோல் நிசப்தமாயிருந்தது. வழக்கம்போல் இப்படியும் அப்படியும் உலாவி யிருப்பவள், சந்திரசேகரனைக் கண்டதும் க்ஷேமத்தை விசாரியாமல் தாமதிக்காதவள் ஆகிய சண்பகத்தையும் காணோம். தன் அன்னை யொத்த நாகரத்தினத்தின் குரலும் கேட்கவில்லை. எப்பொழுதும் இடியைப்போல் ஓசை யிட்டுக்கொண்டு நிற்கும் கருணாகரரின் உரத்த வார்த்தையின் சத்தமும் அவன் காதில் படவில்லை.

காலை முதல் தன் அறையைவிட்டு வெளி வராத சண்பகம் வெளி வந்தாள். இராஜாமணி தன்னை விட்டுப் பிரிந்த நாள் முதல் சண்பகத்திற்கு உற்சாகமே கிடையாது. தன் அறையில் சாய்ந்த வண்ணம் புத்தகத்தை வாசிப்பதும் உறங்குவதுமாகக் காலத்தைக் கழித்து வந்தாள். சந்திரசேகரன் வந்தபோது, சண்பகம் அறையில் வாசித்துக்கொண்டிருந்தாள். அறையை விட்டுக் கூடத்திற்கு வந்தபோது மீனாட்சி சுந்தரத்தின் அறையண்டை யாரோ நிற்பதாகக் கவனித்தாள். சந்திரசேகரனைக் கண்டதும், தலை குனிந்து நாணி,

சண்:—நீங்களா! நான் யாரோ என்று பார்த்தேன்?

சந்:—அண்ணா, இருக்கிறார்களா?

சண்:—இல்லை இருங்கள். அம்மாவை அனுப்புகிறேன் (என்று கூறிப்பரப்புடன் உள் சென்றாள்.)

தன் மகள் வருவதைக் கண்டு சந்தோஷப்பட்டு,

நாக:—கண்ணே! உனக்கு என்ன உடம்பு? வைத்தியரிடம் காட்டி மருந்து வாங்கிச் சாப்பிடுவது தானே?

சண்:—அம்மா! எனக்கு உடம்பு ஒன்றும் அசௌக்கிய மில்லை. அம்மா! அண்ணா எங்கு சென்றார்?

நாக:—அவன் எங்கு சென்றானோ இன்னும் வரவில்லை.

சண்:—அப்படியானால் சந்திரசேகர அண்ணா வந்திருக்கிறார். நீங்கள் போய் சரியான விடை கொடுத்து அனுப்பிவிட்டு வாரும்.

நாக:—சந்திரசேகரனா?

சண்:—ஆமாம், அவர் வந்து எவ்வளவு நேரம் காத்திருக்கிறாரோ தெரியவில்லை. சீக்கிரம் போய் ஏதாவது கூறும்.

நாக:—இதோ போகிறேன் (என்று கூறிச் சென்ற நாகரத்தினம் கூடத்தில் நுழைந்ததும், சந்திரசேகரனைப் பார்த்து)

நாக:—இங்கு உள்ளே வா, அப்பா. ஏன் அங்கு நிற்கிறாய்? தம்பி வீட்டில் இல்லை. வெளியே போயிருக்கின்றான். நாற்காலியில் உட்கார். எல்லோரும் க்ஷேமந்தானா? கற்பகத்திற்கு உடம்பு சௌக்கியமா? உன் தாயாருக்குத் தலை நோய் நின்று விட்டதா?

சந்:—எல்லோரும் சுகந்தான். கற்பகத்திற்கு உடம்பு கொஞ்சம் தேறி யிருக்கிறது. என் தாயாருக்குத் தலை நோய் அவ்வளவு அதிகம் இல்லை.

நாக:—அப்பா! உன் தாயார் உழைப்பதற்குப் பின் வாங்க மாட்டாள். பகலில் கொஞ்சம் படுத்து உறங்கமாட்டாள். சாப்பாடு நேரமாகிச் சாப்பிட்டால்தான் என்ன? ஐயோ! கற்பகத்திற்கு (Typhoid)ச் சுரம் வந்தாலும் வந்தது; போதும், இராப் பகல் தூக்கமில்லாமல் வருந்தினாள். ஏதோ இவ்வளவு சிரமத்திற்கும் தயைக்கூர்ந்து கடவுள் கற்பகத்தைக் காப்பாற்றினாரே, அதுவே போதும். பாவம், அந்தப் பால் தானே கற்பகத்திற்கு ஆகாரம். அதுவும் ஒரு வேளை சாப்பிடுவாள், மற்றொரு வேளை உமிழ்வாள். ஐயோ! அவளைப் பயப்படுத்தி யல்லவோ, உன் தாயும் நானும் வாயில் பால் ஊற்றினோம். அந்தமட்டும் உங்கள் எல்லோரையும் ஏமாற்றி வந்தவள், என்னைக் கண்டதும் பயந்தவளாய்க் கொடுத்த எதையும் சாப்பிட்டு வந்தாள். அவள் தேறினது ஆச்சரியம்!

சந்:—ஆமாம், நீங்கள் வந்து பயமுறுத்தி, மருந்து ஆகாரம் கொடுத்தில்லாமல் போயிருந்தால், அவள் இந்நேரம் எமன் உலகில் வசித்திருப்பாள். அவள் இருந்த நிலையில் யாருக்குப் பயப்பட்டாள்? நான் அருகில் சென்றால் என்னைக் கடிக்க வருவாள். அன்னை அருகில் செல்ல வொட்டாமல் உதைத்து வந்தாள். அப்பாவைக் கண்டால் ஒரே கூச்சலிட்டு அழுவாள். ஆ! அவள் அருகில் யாரால் போக முடிந்தது? அந்தமட்டும் அவளிடம் தங்கள் பெயரைச் சொல்லி, "நாகரத்தினம்மாள் வருகிறார்கள்" என்றதும், உடனே 'ஆ! நான் மருந்தைச் சாப்பிடுகிறேன்; பாலைச் சாப்பிடுகிறேன்' என்று கூறிப் பயந்து சாப்பிடுவாள். நீங்கள் என்ன செய்தீர்களோ அவள் உங்கள் பெயரைக் கேட்டு நடுங்க? நீங்கள் அடிக்கவும் இல்லை. அப்படியிருக்க அவளை மயக்க நீங்கள் என்ன சூழ்ச்சி செய்தீர்களோ தெரியவில்லை?

(தொடரும்)






## லண்டன் வட்டமேஜை மகாநாடு

### ஆரம்பக் கூட்டத்தின் போது விவாதத்தின்போது நிகழ்ந்த முக்கிய உபந்நியாசங்கள்

#### சர். சாப்ரு

இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியுள்ள சரித்திரத்தில் கூடுமானால் சிறந்ததோர் அத்தியாயத்தை ஏற்படுத்துவதற்காகவே நாம் இங்கு கூடியிருக்கிறோம். தற்சமயம் அமைதி யென்பதே அற்றிருக்கும் இந்தியா நம்மை அதிக ஆவலுடன் பார்த்துக்கொண்டே யிருக்கிறது. உலக மக்கள் முழுமையும் இம்மகாநாட்டைக் கவனித்த வண்ணமே யிருக்கிறார்கள். இந்தியர்களுக்கு மாத்திரமல்ல, பிரிட்டிஷ் ராஜதந்திரத்திற்கே இப்பொழுது பெரிய சோதனைக்காலம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் தேச மக்களின் அவமதிப்பிற் கெல்லாம் ஆளாகி, பலவித துவேஷங்களுக்கெல்லாம் உள்பட்டுக் கடல் கடந்து நாங்கள் இங்கு வந்து சேர்ந்திருக்கிறோம். தேச மக்கள் எங்களைத் தேசத் துரோகிகள் எனக் கூறிவிட்டனர். எனினும் இங்கு விஷயங்களைப் பகிரங்கமாகவும் தாராளமாகவும் விவாதிக்கலாமென்ற உறுதியின் பேரிலேயே வந்திருக்கிறோம் எங்கள் முயற்சியெல்லாம் வீணாகவே முடியுமென்று இப்பொழுது கூறியவர்களுடைய ஜோசிய மெல்லாம் பொய்யாகிவிடும்படிச் செய்யவேண்டு மென்ற நம்பிக்கையுடனும் வந்திருக்கிறோம்.

சென்ற 10 வருஷங்களில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் தீவிர மாறுதல்களை எவரும் புறக்கணித்துவிட முடியாது. சட்ட மறுப்பு இயக்கம் சாமான்யமானதல்ல வென்பதையும், அது அதிக பலம் பொருந்திய தென்பதையும் வற்புறுத்துகிறேன். சாம்பிராஜ்யத்தைச் சேர்ந்த மற்ற நாடுகளுக்கிருப்பதைப் போன்ற சம அந்தஸ்தைப் பெற்றே தீருவதென்று இந்தியா துணிந்துவிட்டது. இவ்விதம் இந்தியாவில் ஏற்படும் சர்க்கார், பரஸ்பரமானதா யிருப்பதோடு, பொது ஜனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாயு மிருக்க வேண்டுமென இந்தியர் முடிவு செய்துகொண் டிருக்கின்றனர்.

#### ஆள்வார் மகாராஜா

ஐக்கிய ஆட்சி முறை குடியேற்ற நாட்டுச் சுயாட்சிக்குக் குறுக்கு வழியாகும். இந்தியாவின் விஷயங்களை நிறைவேற்றி வைப்பதற்குச் சுதேச மன்னர்களும் சேர்ந்து கொள்வதற்கு அவர்களுக்கு எத்தகைய கஷ்டமு மில்லாது போகும். இதனால் வைசிராய் மூலம் சக்கரவர்த்தியுடன் சம்பந்த மேற்படும். மேலும் இங்கிலாந்தோடு வர்த்தக விஷயங்களில் நெருங்கிய சம்பந்த முடையதாகவும் ஏற்படும். இதில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் மற்ற சமஸ்தானங்கள் முதலியவைகள் கலந்திருப்பதால் வகுப்பு வாதங்கள் கிளப்புவதற்கிடமிராது. ஒவ்வொருவருக்கும் மதவுரிமையும் அளிக்கப்படும். சென்ற மகா யுத்தத்தின்போது இந்தியா இங்கிலாந்திற்குச் செய்த உதவியை இங்கு ஞாபக மூட்டுகிறேன். அதற்குப் பதிலாக இங்கிலாந்து இந்தியாவிற்கு உதவி செய்ய வேண்டிய சமயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் மற்ற நாடுகளுடன் சமமாக வருவதற்கு இந்தியா விரும்புவதால் அதை அடையப் பிரிட்டன் இந்தியாவிற்கு உதவி புரிய வேண்டும். இந்த நிலைமையைவிட இன்னும் அதிக தூரஞ்செல்ல இந்தியா விரும்பவில்லை.

#### டாக்டர் மூஞ்சே

தேசீக இயக்கத்திற்கு நாடெங்கும் ஆதரவேற்பட்டு அவ்வியக்கம் எங்கும் பரவியிருக்கின்றது. அவ்வியக்கத்தில் அனைவரும் சந்தோஷத்துடன் பல துன்பங்களுக்குள்ளாகி அவற்றைச் சகித்துக்கொண்டிருக்கின்றனர் பலாத்காரத்தினால் இந்திய மக்களை அடக்கி ஒடுக்கிவிடும் காலம் மலையேறிவிட்டது. சந்தேகத்தாலும் பயத்தாலும் பிரிட்டன் இந்தியாவுக்குத் தானாகக் குடியேற்ற நாட்டுச் சுயராஜ்யம் கொடுக்க முன் வருவருவதற்குத் தயங்குமாயின், நாங்கள் பூர்ண பொறுப்பாட்சிக்குக் குறைந்தது எதையும் ஒப்புக் கொண்டு திருப்தி யடைய முடியாதென்பது நிச்சயம்.

#### முகமது அலி

நான் வயோதிகனான ஒத்துழையாமைக் காரனாயினும் இன்னும் என் இருதயம் இளமையாகப் போராடும் ஊக்கமும் உறுதியும் பாலியமுமுள்ளதாகவுந்தானிருக்கின்றது. லார்டு ரீடிங் என்!

யும் என் சகோதரரையும் தான் முதலில் ஜெயிலுக்கு அனுப்பினார். அதற்காக எனக்குத் துவேஷமொன்றுமில்லை. ஆனால் லார்டு ரீடிங் பிசகு செய்யும்போது அவரை ஜெயிலுக்கு அனுப்பும் அதிகாரம் எனக்கு வேண்டுமென்று தான் விரும்புகின்றேன். குடியேற்ற நாட்டுச் சுயராஜ்யம் பெறுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. நான் பூர்ண சுயேச்சை பெறவேண்டுமென்ற உறுதியுடையவன். புதிய குடியேற்ற நாடொன்ற ஜனனமாகும் வழி தேடாமல், நாங்கள் தாய் நாடு திரும்புவோமாயின், நீங்கள் இழந்து விட்டதான நாட்டுக்குத்தான் திரும்புவோம். அப்போது நீங்கள், பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்தில் சம்பந்தப்படாமல் அதனை ஒழித்து, அதற்கு வெளிப்பட்டதான சுதந்தர ஐக்கிய இந்தியாவும், அதனைவிட மேலாக ஐக்கிய சமயங்களும் தோன்றியிருப்பதைக் காண்பீர்கள். இங்கிலாந்தில் மற்றெல்லோரையும் விட ஒரு மனிதனிடம் மட்டும், அதாவது மகாராணி விக்டோரியாவின் பேரனிடம், எனக்கு நம்பிக்கையுண்டு. அவர் காலத்துச் சரித்திரத்தில்தான், "மூன்றாம் ஜார்ஜ் அமெரிக்காவை இழந்தார்; ஐந்தாம் ஜார்ஜ் இந்தியாவைச் சேர்த்தார்", என்றெழுதிவைக்கப்படும்.

### வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார்

ஐக்கிய சர்க்கார் திட்டத்தைக் குறித்த கருத்துப் புதியதுதான். அதற்கு விரோதமாய்க் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்த நானும் அதனை ஆதரிப்பவனாய்த் திரும்பி விட்டேன் (கரகோஷம்). இம் மகாநாட்டின் மூலமாய் ஏற்படக் கூடிய அரசியல் அமைப்பு, தற்போது இந்தியாவில் மிக ஆபத்தான நிலைமை ஏற்படச் செய்திருக்கும் காங்கிரஸ்காரர்கள் கையில் சிக்கிக்கொள்ளக் கூடுமென்ற பயம் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு இருப்பதாய்த் தெரிகின்றது. கலக மேற்படுத்தக் கூடியவர்கள் என்று பயப்படுபவர்களைச் சமாதானப்படுத்தும் பொருட்டுத்தான் இம் மகாநாடு கூட்டப்பட்டதல்லவா? அவர்கள் பரம்பரைக் குற்றவாளிகளோ அல்லது காட்டுமிராண்டிக் கூட்டமோ அல்லது பிரிட்டிஷ் ஸ்தாபனங்களுக்கு ஜன்ம விரோதிகளோ அல்லர். அவர்களும் கல்வியும், கௌரமும், தன்மையும் உடையவர்களாயிருப்பதோடு, இரத்தக் கலப்பினும் ஊக்கத்திலும் எங்கள் பந்துக்களாகத்தானிருக்கின்றனர். அரசியல் குறைகளின் சம்பந்தமான உணர்ச்சிதான் அவர்களை அத்தகைய நிலைமையில் கொண்டுபோய்விட்டது. அதைத்தான் நாம் இத்தகைய அவநம்பிக்கையுடன் ஆக்ஷேபிக்கின்றோம். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை ஒழியுங்கள். அப்போது நாம் இங்கு ஏற்படுத்தும் புதிய அரசியல் திட்டத்தில் உங்களுடன் சேர்த்து ஒத்துழைப்பவர்களாயிருக்கக் காண்பீர்கள்.

### பிரதம மந்திரி பேச்சு

லண்டன் மகாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தின் பொது விவாதத்தின் முடிவில் பேசிய பிரதம மந்திரி ராம்சே மெக்டோனல்டு கூறியதாவது:—இந்தியப் பிரதிநிதிகள் பேச்சினால் இங்குப் பொதுஜன அபிப்பிராயம் பெரிதும் மாறியிருக்கின்றது. அவர்கள் பேசும் ஒவ்வொரு தடவையிலும் நற்பலனேற்பட்டு வருகிறது. 1917-ம் வருடத்திலிருந்து இந்நிமிஷம் வரை சர்க்கார் அளித்த வாக்குறுதிகளை மறக்காமல் ஒப்புக்கொள்ளுகின்றது. அவற்றை அங்கீகரித்ததன் பலனாகத்தான் இம் மகாநாட்டைக் கூட்டினதினாலேயே அவர்கள் அவற்றை நிறைவேற்றுவதற்கு விரும்பியதையும் நன்கு நிரூபிக்கக் கூடும். 'ஏதோ கஷ்டமிருக்கத்தானிருக்கும்; சரி, வாருங்கள். அதைச் சரிபடுத்திக் கொள்ளலாம்' என்று சொல்லிக்கொண்டுழைக்க முன்வரும் அனுபவமும் நுண்ணறிவுமுள்ள மனிதன்தான் இந்தியாவுக்கும் இந் நாட்டுக்கும் வெற்றியையும் கௌரவத்தையும் அளிக்கக் கூடும். அத்தகைய உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் தான் நாம் இப்பிரச்னைகளை முடிவு செய்வதற்கு முன்வந்திருக்கின்றோம். சுதேச மன்னர்கள் பேச்சு நிலைமையையே அடியோடு புரட்டி விட்டது. அவர்கள் வாஸ்தவமான ஐக்கிய இந்தியா ஏற்படுவதற்கு வழி தேடுவதில் ஒப்பற்ற உதவி புரிந்து வழி காட்டியிருக்கின்றனர் (கரகோஷம்). அனுபவப் பூர்வகமாய் ஆலோசித்து முடிவு செய்ய வேண்டியதன் பல முக்கிய கேள்விகளையும் நான் குறித்து வைத்திருக்கிறேன். ஐக்கிய சர்க்கார் திட்டத்தில் அமைக்கப்பட வேண்டிய அம்சங்களென்ன? அதனுடன் சேர்ந்து வேலை செய்யும் தலைமைச் சர்க்காரின் அமைப்பு எவ்வாறிருக்க வேண்டும்? அதற்கும் சுதேச சமஸ்தானங்களுக்குமுள்ள சம்பந்தமென்ன? சிறுபான்மை முதலிய அம்சங்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு எத்தகைய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்? தலைமைச் சர்க்கார் எந்தெந்த விஷயங்களை நிர்வகிக்க வேண்டும்? அதன் அதிகாரம், வேலைகள், பொறுப்பு முதலியவை எவ்வாறிருக்க வேண்டும்? உங்கள் பிரச்னைகளும் என் பிரச்னைகளும் ஓரிடத்தில் உட்கார்ந்து பார்லிமெண்டு சட்டத்தில் சேர்க்கப்படும் பொருட்டு இக்கேள்விகளுக்கு அனுபவமான பதிலளிக்கவேண்டும் (கரகோஷம்). மகா நாட்டில் பேசிய ஒவ்வொருவரும் தற்போது முடிவு செய்ய வேண்டிய பிரச்னை இன்றைக்கிருக்கும் நிலைமைக்குப் பொருத்தமானவாறு விஷயங்களை எவ்வாறு சரிப்படுத்துவது என்பதைப்பற்றித் தான் எடுத்துக் காட்டிப் பேசினார்கள். ஆனால் அனுபவசாலிகளான நாம், நமக்குள் ஒரு ஒப்பந்தமேற்பட்டு ஆறு நாட்களுக்குளேயே அவற்றிற்காக உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருப்பதையும் உணர்ந்திருக்கின்றோம். நீங்கள் இந்தியாவின் பொதுஜன அபிப்பிராயத்துக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாயிருக்கின்றீர்கள். அன்றியும் நீங்கள் இந்தியாவில் பல கிளர்ச்சிகளிடையே வேலை செய்யவும் வேண்டும். நீங்கள் மகா நாட்டுக்குப் புறப்பட்டபோது, கருப்புக்கொடி உபசாரத்துடன் அனுப்பியது போலவே, நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பும்



போது உங்களைக் கருப்புக் கொடிகளுடன் வரவேற்கவும் கூடும். அதுதான் எங்களுக்கும் கிடைக்கும்; இந்நாட்டுக்கும் அத்தகைய வரவேற்புத்தான் ஏற்படும் அதனால் நான் சொல்வதென்னவெனில், அனுபவமுள்ள நாம் அவ்விஷயங்களையும் கவனித்து அவற்றிற்கும் நமது ஒப்பந்தத்தில் ஓரிடத்தை ஒதுக்கி வைக்க வேண்டியதுதான். அது இந்தியாவிலிருக்கும் நிலைமைகளையும், இங்குள்ள பொது ஜன அபிப்பிராயத்தையும் உள்ளதுள்ளவாறு அறிந்து நடக்க வேண்டியதே யாகும். கமிட்டி வேலைகளில் உங்களுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் நல்லுணர்ச்சி மட்டுமின்றி, பிரிட்டிஷ் பார்லிமெண்டைச் சேர்ந்த இரு சபைகளின் நல்லுணர்ச்சியும் ஆதரவும் கிடைக்குமென்றுதான் சொல்லுவேன். அக்கமிட்டிகளின் வேலைகளின் பலனாக முடிவான கூட்டங்களில் உங்களை இந்தியாவுக்குச் சந்தோஷமும் அதிகாரமுமுள்ளவர்களாய்த் திரும்பிப் போகச் செய்யத்தக்க ஒப்பந்தமேற்படக் கூடுமென்னும் நம்பிக்கையுடன் காத்திருப்போமாக. அதனால் இங்கு நாங்களும் சந்தோஷத்துடன் வெளிப்படுவதற்குச் சந்தர்ப்பமளிப்பதோடு தற்போதிருப்பதை விட பின்னும் அதிகமான நட்பும் ஒத்துழைக்கும் உணர்ச்சியு மேற்பட்டு நாமனைவரும் அவரவர்கள் வழியைப் பார்த்துக்கொண்டு போக உதவியாயிருக்கக் கூடுமென்றும் நம்புவோமாக.

## சென்னையில் சூராவளி

(தமிழரசில் கண்டது.)

(28-11-30) வெள்ளிக்கிழமை இரவு சென்னையிற் சூறைக்காற்று அடிக்கத் தலைப்பட்டுப் பன்னிரண்டு மணிநேரம் மிக உக்கிரமாகவும் விரைவாகவும் பேரோசையுடனும் மக்கள் திகிலடையும்படி வீசிக்கொண்டிருந்தது. சென்ற அறுபது ஆண்டுகளாக இதனைப்போன்ற கடும்புயற் காற்றுத் தென் இந்தியாவிலே அடித்ததில்லை. 1916 ஆம் ஆண்டு அடித்த சூறைக்காற்று இதற்கு அரைவாசிதான் இருக்கும். ஆயிரக் கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. ஆறுகளில் வெள்ளம் அபரிமிதமாக ஓடிக்கொண்டிருக்கிறது. சில ஏரிகள் உடைத்துக்கொண்டு பயிர் பச்சைகளை அழித்துச் சென்றன. அக்கம் பக்கத்திலே உள்ள கிராமவாசிகள் அல்லோல கல்லோலப்பட்டு மக்கள் ஒக்கலுடன் வீடு வாசல்களை அப்படி அப்படியே போட்டது போல விட்டு விட்டு வெளியேறினர். இருப்புப் பாதைகள் எல்லாம் நிலை பெயர்ந்தன. புகை வண்டிகள் அங்கங்கே அப்படி அப்படியே நின்று விட்டன. தந்திக் கம்பங்கள் வீழ்ந்தன; கம்பிகள் அறுபட்டன. தென்னாட்டுச் செய்தி யாதொன்றும் சென்னைக்கு எட்டவில்லை. சென்னையில் கொண்டித்தோப்பிலும் பிற இடங்களிலும் வியாசர்பாடி ஏரி உடைப்பால் வெள்ளம் புரண்டு விட்டது. அங்கே குடியிருந்த மக்கள் வெளியேறினர்.

இரங்கோனில் பூகம்பம் உண்டாயிற்று; பின் இத்தாலியில் அது தோன்றிற்று; அதன்பின் ஜப்பானில் பூகம்பம்; தென்னாட்டில் வெள்ளம். இப்போது சென்னையிற் பிரசண்டமாருதம். இச்சூறைக்காற்று நானூறு மைல் தூரம் அடித்திருக்கிறது. வெள்ளத்தாலும் புயற்காற்றாலும் நேர்ந்த சேதம் இதுவரை பலகோடி என்று கணக்கிடப்பட்டுளது. இவ்வாண்டிலே தென் இந்தியாவிலே மிக்க பஞ்சம் ஏற்படலாமென்று தோன்றுகிறது. ஆ! இயற்கையின் ஆற்றல் என்னே! ஒவ்வொரு நிமிஷமும் மனிதன் இயற்கையை வெல்லப் பல சூழ்ச்சிகளைத் தன் அறிவு நுட்பத்தால் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறான். கடலிலே கலத்தைச் செலுத்தி அதனைக் கடக்கின்றான். வானத்தில் இறகின்றிப் பறக்க முயல்கிறான். கிரக மண்டலங்கட்குச் சென்று திரும்பக் கருதுகின்றான். மரணத்தினின்றும் தப்பி வாழ முயல்கின்றான். ஆனால் இவையனைத்தும் ஒரு நொடிப்போதில் இவன் இன்னதெனக் கண்டறியாதவாறு எல்லாம் கவிழ்ந்து விடுகின்றன. பேர்போன டிடானியா கப்பலின் கதி யாதாயிற்று? இந்தியாவுக்குப் புறப்பட்ட ஆகாய விமானம் ஆர் 101 என்னாயிற்று? அரை நிமிஷம் இருந்த பூகம்பத்தை மக்கள் தாங்க முடியாமற் போயிற்றே. வீசும் காற்றுச் சிறிது உரனுடன் வீசியதால் விளைந்த கேடு எத்துணை? சிறிது அதிகம் பெய்த மழையால் நேர்ந்த நஷ்டம் எவ்வளவு? இவற்றை எல்லாம் நேரே கண்முன் கண்டு வைத்தும் ஆணவம் கொண்டு தனக் கெல்லாந் தெரிந்ததாக மயங்கிக் கிடக்கும் மனிதன் அறிவு என்னே! என்னே! 'என்னால் ஒரு துரும்பசைக்க முடியாதே' என்ற ஆன்றோர் உரை பொருளுரையன்றோ? எல்லாம் வல்ல கடவுள் இயற்கையாகிய தனது சக்தியை வைத்துக்கொண்டு செய்யும் அதியற்புதங்களை யார் உணரவல்லார்? உண்மைத் தத்துவ ஞானிகளும் உண்மை விஞ்ஞான சாத்திரிகளும் தமது அளவுபட்ட ஆற்றலையும் கருவி ஞானத்தையும் உணர்ந்து ஒடுங்குகின்றனர். மேலும் மேலும் அறிய அறிய ஒருவன் தனது அறியாமையின் அகலத்தை அறிகின்றான். ஒரு சிறிது அறிந்தவனே தான் எல்லாம் அறிந்ததாகத் துள்ளி அழிகின்றான். மக்களாகிய நாம் எத்துணை அறிவிற் சிறந்தவர்களானாலும் அண்டப்பரப்பையும் பகிரண்டங்களையும் இயற்கை அற்புதத் தோற்றங்களையும் செயல்களையும் சிறிது உற்று நோக்கும்பொழுது ஒரு சிறு புழுவினும் சிறியராகக் காணப்படுகின்றோம். 'மலத்திடையே புழுத்த சிறு புழுக்களிலும் கடையேன்' என்றார் அருட் பிரகாச வள்ளலார். இவ்வரிய உண்மையை மறந்து சிற்றறிவும் சிறு தொழிலும் குறுகிய வாழ்நாளும் உடைய மகன் இறுமாந்து தன்னையும் மறந்து தலை தடுமாறிக் குழறி வழிகின்றான். எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உண்டென்றும் அவனுடைய அருள் நெறியே எம்மதத்தும் சம்மதமாகக் கொள்ளப்படும் உண்மைச் சமரச நெறி என்றும், உணர்ந்து தான் செய்யும் தொழிலனைத்தும் பிறர்க்கென்றே அமைத்துத் தன்னலம் விடுத்துக் கடவுள் திருவருளையே முன்னிட்டுச் செய்வதே உயரிய திருப்பணி

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள்,

(ஆரம்ப முதல் 31—10—30 வரை)

**வரவு**

| சங்கம் | வரவு | |
|---|---|---|
| நன்கொடை | 3192—12—11 | |
| உண்டியல் | 4854—14— 1 | |
| கிளைச்சங்கங்கள் கட்டணம் : | 412— 0— 0 | |
| விற்பனை மூலம்: | | |
| குறள் | 65— 2—6 | |
| படம் | 40—15—0 | |
| மகாநாட்டு மலர் | 10— 4—0 | |
| தபால் தலைகள் | 17—14—0 | |
| | 134— 3— 6 | |
| வட்டி | 284—12— 8 | |
| | | 8878—11—2 |
| பத்திரிகை மித்திரன் சந்தா : | 8861—4—0 | |
| விளம்பரக் கட்டணம் | 122—4—0 | |
| | | 8983— 8—0 |
| சீட்டு | | |
| கல்விநிதிச் சீட்டின் விற்பனை | | 18850—10—6 |
| | | 36712—13—8 |

**செலவு**

| சங்கம் | செலவு | |
|---|---|---|
| சிப்பந்திகள் சம்பளம் முதலியன | 1611— 5—6 | |
| பிரசாரம் | 1146—13—0 | |
| காகிதம், கணக்குப் புஸ்தகம் முதலியன | 328— 8—0 | |
| மேஜை, நாற்காலி பீரோ முதலியன | 170— 3—3 | |
| தபால் செலவு | 136— 1—0 | |
| வண்டிக்கூலி முதலிய சில்லரைச் செலவுகள் | 205—14—3 | |
| உபகாரச் சம்பளம் | 1710— 3—3 | |
| | | 5309— 0—3 |
| பத்திரிகை | | |
| அச்சுக் கூலி | 4882— 0—9 | |
| காகிதம் | 2778—14—8 | |
| பைண்டிங் கூலி | 829— 0—0 | |
| தபாற் செலவு | 1977—10—9 | |
| பிளாக்குகள் | 283— 0—9 | |
| சில்லரைச் செலவுகள் | 78—13—3 | |
| | | 10829— 8—2 |
| சீட்டு | | |
| அச்சுக் கூலி | 1025— 5—3 | |
| தபாற் செலவு | 364—13—0 | |
| பிரசாரம் | 803— 9—9 | |
| சிப்பந்திகள் சம்பளம் முதலியன | 1793—13—3 | |
| குடிக்கூலி | 338— 1—0 | |
| காகிதம், கணக்குப் புஸ்தகம் முதலியன | 78— 0—0 | |
| சில்லரைச் செலவுகள் | 53— 0—9 | |
| பரிசுகள் | 3674— 8—6 | |
| | | 8131— 3—6 |

**இருப்பு**

| | |
|---|---|
| பிரசாரகர் முதலியவர்களுக்குக் கடனாகக் கொடுத்துள்ளது | 715— 0—2 |
| கவர்ன்மெண்ட் 6% பாண்டுகள் | 2500— 0—0 |
| இந்தியன் பாங்கில் பிக்ஸட் டெபாசிட்டில் உள்ளது | 9000— 0—0 |
| இந்தியன் பாங்கில் கரண்ட் அகவுண்டில் உள்ளது | 202—14—0 |
| கையிருப்பு | 25— 3—7 |
| | 36712—13—8 |

[449-வது பக்கத் தொடர்ச்சி]

யாகும். பெரியோர் வரலாறுகளை ஊன்றிப் பார்த்தால் இவ்வுண்மையே வெளிப்படும். 'வெந்நீர் பொருதென் உடல். காவில் முள் தைக்கவும் பொருமல் வருந்துவேன்' என்றவாறு நமது உடம்பு நிலைமையும் மாறி மாறி மறந்து மறந்து குறைந்து போகும் நமது சிற்றறிவும், இவ்வறிவைக் கொண்டு அறியும் கலை ஞானமும் ஒருவனுக்கு எத்துணைத் தாரம் துணை செய்யும்? மிகச் சிறந்த பெரும் புலவனும் கல்விக் கடலிலே ஒரு துறையிலே ஒரு மூலையைச் சிறிது கண்டவனே அன்றி வேறல்லன். ஆனல் கல்விக் கடலின் ஆழத்தையே அறிய முடியாதே. அதன் மேல் கல்விக்கு மேலும் செல்லும் அறிவும் சிறியதே. கல்வி அறிவாற்றல்களால் உலகத்தின் இயல்பில் எந்த மூலையைக் கண்டறிய இயலும். இயற்கையின் மாறுதல்களால் உண்டாகும் நன்மை தீமைகளை அளந்தறிய எங்ஙனம் இயலும் இயற்கையை யெல்லாம் தன் உள்ளங்கையிலே பம்பரம் போல எடுத்து விளையாடும் இறைவன் திருவுளப் பான்மையை நாம் உணர முடியுமா?



# செங்குந்தர் கிளர்ச்சி

## சென்னை ஜில்லா

### திருமயிலை செங்குந்த வாலிபர்ச் சங்கம்

19-10-30 காலை 8½-மணிக்கு டை சங்கவாசகசாலையில் திரு சு. குழந்தைவேலு முதலியார் அவர்கள் (மானேஜர், F. P. B.) அவைத்தலைமையில் டை சங்கத்தின் மூன்றும் ஆண்டு நிறைவு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

அவ்வமயம் வண்டி மிருந்த சங்க அங்கத்தினர் அனைவர்களுக்கும் தேத்தண்ணீர் சிற்றுண்டி வழங்கப்பட்டதும், திரு. மு. சுந்தர வடிவேலு அவர்கள் "குலப்பணி" எனும் விஷயத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்ற அதைத் தழுவி திரு. ச. காளத்தி முதலியார் அவர்கள் பேசினதும் கீழ்க்கண்டவாறு பிரேரபனைகள் ஏகமனதாக நிறைவேற நிர்வாக சபை உறுப்பினர் தேர்தல் நடைபெற்றதும் வந்தனோபசாரம் வழங்கப்பட்டு பகல் 11 மணிக்குக் கூட்ட மினிது கலைந்தது.

#### நிறைவேறிய தீர்மானங்கள்

1. செங்குந்த வகுப்பினரின் பிரதிநிதியாகச் சென்னை சட்ட சபைக்கு நியமனஞ் செய்ய இவ்வகுப்பினருள் கல்வி கேள்விகளிற் சிறந்தோரும், அறிவு ஆற்றல்களில் மிகுந்தோரும், குலாபிமானம் நிறைந்தோருமாகிய திரு. வீ. இரத்தின முதலியார் அவர்களை (B. A., B. L. Advocate, Madras) இச்சங்கம் சென்னைத் துரைத்தனத்தாருக்குச் சிபார்சு செய்கிறது.

2. திருமயிலை ஸ்ரீ சண்முகனடியார் சங்கத்தின் நிதியைத் திருமயிலை செங்குந்த வாலிபா சங்கத்தின் நிதியாகச் சேர்த்து, அதை அசையாப் பொருளாக வைத்து அதன் வருமானத்தை டை வாலிபர் சங்கத்தின் நடை செலவாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென இக்கூட்டம் ஸ்ரீ சண்முகனடியார் சங்கத்தை ஏகமனதாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

#### புதுவருஷத்திய நிருவாக சபை அங்கத்தினர்

**தலைவர்.**

1. திரு. சு. குழந்தைவேலு முதலியார் அவர்கள் Manager. F. P. B.

**உபதலைவர்கள்.**

1. ,, மு. சரவண முதலியார் அவர்கள்.
2. ,, பொ. சி. பாலசுப்பிரமணியஜு ,,

**காரியதரிசிகள்.**

1. ,, ம. கு. பாலசுந்தர முதலியார் ,,
2. ,, ஏ. இராமசாமி முதலியார் ,,

**பொக்கிஷதாரர்கள்.**

1. ,, ம. சம்பந்த முதலியார் ,,
2. ,, பொ. அ. கதிர்வேலுமுதலியார் ,,

**அங்கத்தினர்கள்.**

1. ,, எஸ். இரத்தினவேலு முதலியார் ,,
2. ,, ச. காளத்தி முதலியார் ,,
3. ,, த. கணேச முதலியார் ,,

ம. கு. பாலசுந்தரம்.
ஏ. இராமசாமி.
காரியதரிசிகள்.

---

## செங்கற்பட்டு ஜில்லா

### நாயக்கன் பேட்டை உபசுப்பிரமணியர் சங்கம்

22-10-30ல் மாலை 4-15 மணிக்கு போர்டு பாடசாலையில் திரு. N. C. இராஜமாணிக்கம் அவர்கள் தலைமையில் கூட்டம் கூடிற்று. ஸ்ரீலஸ்ரீ தணிகாசல சுவாமிகள் கடவுள் வணக்கம் கூறிய பிறகு திருவாளர்கள் N. K. கிருஷ்ணன், N. K. வேல் முருகன், N. S. தணிகைமலை, N. S. துரைசாமி, N. S. முருகசாமி, N. C. ராஜமாணிக்கம் என்பவர்களால் முறையே 'முயற்சி', 'குல முன்னேற்றம்', 'மது விலக்கு', 'ஜீவகாருண்யம்', 'ஔவையார் செய் நன்றி', 'கல்வி' முதலியவை குறித்தும் தணிகாசல சுவாமிகள் 'முக்குணம்' என்பது பற்றியும் உபந்யசித்தார்கள். 7-45 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### ஐயன் பேட்டை செங்குந்தர் வளர் நிலைச் சங்கம்.

28-9-30ல் தலைவர் திரு. கை. காமக்கோட்டி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் சென்னை சட்ட சபையில் நம்மவர்க்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டு மென்றும், டை சட்டசபைக்கு நம்மவர் பிரதிநிதியாக திரு. V. இரத்தின முதலியார் B. A., B. L. அட்வகேட் அவர்களை நியமிக்க வேண்டு மென்றும் துரைத்தனத்தாரை வேண்டிக் கொள்வதாக தீர்மானங்கள் நிறை வேற்றப்பெற்று உரிய அதிகாரிகளுக்கும் பத்திரிகைகளுக்கும் தெரிவிக்கப் பெற்றது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

---

## வடஆற்காடு ஜில்லா

### செங்கம் தாலுக்கா காஞ்சி செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

**திரு. R. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் தேதி 1-11-30 கூடிய கூட்டங்கள்**

திரு. A. கோவிந்தசாமி முதலியார் அவர்களால் கடவுள் வாழ்த்து கூறப்பட்டது. மெம்பர்கள் திரு. K. T. மாணிக்க முதலியார் அவர்கள் குடியால் விளையும் கேடுகளைப்பற்றியும் திரு. K. V. தனுஷ்கோடி முதலியார் அவர்கள் தெய்வம் இகழேல என்னும் பழமொழியைப்பற்றியும். திரு.

K. C. நடேச முதலியார் அவர்கள் சுகாதாரத்தைப்பற்றியும். திரு. V. அழகேச முதலியார் அவர்கள் பெண்கள் கற்புக் விஷயத்தைப்பற்றியும். திரு. K. G. நடேச முதலியார் அவர்கள் இச்சங்கம் முன்னேற்றமடையவும். திரு. K. S. தக்ஷிணமூர்த்தி முதலியார் அவர்களால் நமது குல முன்னேற்றத்தைப்பற்றியும். திரு. K. R. ராமலிங்க முதலியார் அவர்கள் நமது கைத்தொழில் விஷயமாகவும். திரு. V. கோபால் முதலியார் அவர்கள் கல்வியைப்பற்றியும் உபந்நியாசித்தனர் பின்பு தலைவர் பிரேரேபிக்க யாவரும் எழுந்து நிற்கத் தலைவரால் கடவுள் வாழ்த்து கூறிய பின்பு மாலை 5-மணிக்கு ஸ்ரீ செல்வ விநாயகருக்கு அபிஷேக ஆராதனையுடன் சந்தன தாம்பூலம் வழங்கி மணி 6½-க்கு இனிது கூட்டம் கலைவுற்றது.

### கலவை ஸ்ரீ சுந்தர விநாயகர் சங்கம்

20-10-30-வது மாலை 3 மணிக்கு ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் செங்குந்தர் பொது மடத்தில் திரு தி. க. நடேச முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் திருவாளர்கள் N. வடிவேலு முதலியார், T. பரசுராம முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் ஓதப்பெற்று பின் திரு. T. பரசுராம முதலியார் கக்ஷியை ஒழிக்க உரத்த குரலினால் ஆத்திரத்துடன் பேசியதும், திரு. N. வடிவேலு முதலியா விபூதியின் மகிமையைப்பற்றியும், திரு. D. பாலசுந்தர முதலியார் கற்புச் என்பதைப்பற்றியும் மிக விரிவாகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசியால் வந்தனோபசாரத்துடனும் ஜே கோஷ்டத்துடனும் இரவு 9-மணிக் கூட்டம் இனிது முடிவுற்றது

S. Arunagiri A. Munisawmy
Secretaries.

---

## சேலம் ஜில்லா

### மோகனூர் கரந்தமலை ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி சஷ்டி மஹோத்ஸவம்

மோகனூர்க் கரந்த மலையில் ஸ்ரீ முருகப் பெருமான் சூரனைச் சம்மரித்தருளிய திருநாளாகிய சூரசம்மார விழா 22-10-30 முதல் 27-10-30-வது வரையில் வெகு விமரிசையாக வழக்கப்படி நடைபெற்றது.

---

## கோவை ஜில்லா

### பொள்ளாச்சி தாலுக்கா வடசித்தூர் செங்குந்தர் சங்கம்.

16-11 30-ல் திரு. கப்பல்குப்பண அவர்கள் கட்டடத்தில்மாலை 3-மணிக்குக்கோவை ஜில்லா செங்குந்த வாலிபர் சங்கத் தலைவரும் கோவை முனிசிபல் கௌன்சிலருமான திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் தலைமையில் இச்சங்கத்தின் 10-வது கூட்டம் கூடிற்று. அச்சமயம் கோதாவாடி, பனப்பட்டி முதலிய கிராமங்களிலிருந்து செங்குந்த சமூகத்தினரும், மற்ற சமூகத்தினரும் பெருந்திரளாக வந்திருந்தனர். கடவுள் வணக்கம் முடிந்ததும், தலைவரவர்கள் தமது முன்னுரையில் 'நமது சீர்திருத்தம்' என்பது பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். பின்னர் இச்சங்கத்தை ஆதியில் திறந்து வைத்தவரும் கோவை சங்கத்துக் காரியதரிசியுமாகிய திரு. ஈ. வே. சிங்காரவேலு முதலியார் அவர்கள் B.A., திரு A. S. சுப்பைய முதலியார் அவர்கள், திரு. டி. மயிலானந்தம் பிள்ளை, திரு. குருசாமி உபாத்தியாயர் ஆகியவர்கள் முறையே 'சென்ற கூட்டத்தின் குறிப்பு, செங்குந்தர் முன்னேற்றம், நமது முயற்சிகள், கல்வி' என்பனபற்றி உபந்யாசம் செய்தார்கள். தலைவர் முடிபுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் பஞ்சாக்ஷரம் வழங்கப் பெற்றுச் சபை இனிது கலைந்தது.

உபாத்தியாயர். நே. இ. கா. பழனியப்ப
முதலியார், காரியதரிசி.

---

## தஞ்சை ஜில்லா

### சுந்தரப்பெருமாள் கோவில்

### சைவ சமரச சன்மார்க்க செங்குந்தர் சங்கம் முதலாவதாண்டு மகோற்சவக் கொண்டாட்டம்

7-9-30-வது இச்சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவிழா இவ்வூர் மேல வீதி செங்குந்தர் பொது மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. அவ்வமயம் மாஜிம்பதி திரு. சு. திருநாவுக்கரசு முதலியார் அவர்களும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். அன்று மாலை 6-மணிக்கு 300 செங்குந்த மக்கட்கு மேல் மண்டபத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். கனம் நாட்டாண்மை திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் கூட்டம் கூடப்பெற்றது. பிறகு கடவுள் ஸ்துதி நடந்தவுடன் திரு. ச. ராமய்ய முதலியார் (Vth form student) பொது விஷயமாகச் சில வார்த்தைகள் பேசிய பிறகு மாஜிம்பதி திரு. சு. திருநாவுக்கரசு முதலியார் 'நமது சமூகம்' என்பது பற்றிக் கேட்போர் மனதைத் தட்டி எழுப்புமாறு விரிவாக உபந்நியாசித்தார். பிறகு சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று, ஊர் தலைவர்கட்கும் உபந்நியாசர்கட்கும் மலர் மாலை சூட்டப்பெற்றது இரவு 11-மணிக்கு ஜே கோஷ்டத்துடன் நமது சங்கம் நிறைவெய்தியது.

---

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கரநாயனார் கோவில்

### செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம்

23-4-30உ கூடிய அவசரக் கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் அக்கிராசனம் வகித்தார். கடவுள் வாழ்த்துக்குப் பின் சென்ற மாத மித்திரனில்



சந்தா விஷயமாக எழுதியிருப்பதைக் குறித்துக் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

சங்கரநயினார் கோவில் கஸ்பாவிலுள்ள சந்தாதார்களின் பாக்கி லிஸ்டு ஒன்று விபரமாய்த் தயார் செய்தனுப்புமாறு மித்திரன் ஆபீஸ்மேனேஜரைக் கேட்டுக்கொள்வதோடு, சந்தா பாக்கியினை அவரவரிடமிருந்து கூடிய சீக்கிரம் வசூல் செய்து அனுப்புமாறு இச்சங்கத்தின் வைஸ் பிரசிடெண்டு திரு. M. திருவுடையார் முதலியார் அவர்களை இக் கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

A. முத்யமை முதலியார், பிரசிடெண்டு.

---

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம், மதுரை.

எமது சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று எழு கடல் தெருவிலுள்ள மகிமை 15/16 நெ. கடையில் திரு. N. P. பழனிக்குமாரு முதலியா அவர்கள் தலைமையில் கூடியது.

1. புது வருஷத்துக்குக் கீழ்வருபவர்கள் சங்க உத்தியோகஸ்தர்களாக நியமிக்கபட்டனர்.

தலைவர்.

திரு. N. P. பழனிக்குமாரு முதலியார்

உப தலைவர்கள்.

K. V. கேத்திரபால முதலியார்
S. செண்பக முதலியார்

காரியதரிசிகள்.

V. வீரபத்திர முதலியார்
S. V. கனக சபாபதி முதலியார்

பொக்கிஷதார்.

K. மயிலைப்பன் முதலியார்

நிர்வாக கமிட்டிகள்.

திருவாளர் சி. பொன்னம்பல முதலியார், தலைவர்
2. P. V. முத்துக்கருப்ப முதலியார்
3. P. M. இருளாண்டி முதலியார்
4. M. ராமசாமி முதலியார்
5. K. V. ராமசாமி முதலியார்
6. S. சாது முதலியார்
7. கே. எஸ். முதலியார்
8. M அங்குசாமி முதலியார்
9. S. P. சண்முக சுந்தர முதலியார்

இக் கமிட்டிக்கு சி. பொன்னம்பல முதலியார் தலைவர், பி. வி. முத்துக்கருப்ப முதலியார் உப தலைவர்,

மந்திரிகளான ஜஸ்டிஸ் கட்சி தலைவர் திவான் பகதூர் B. முனிசாமி நாயுடுகாரு அவர்களையும் திருவாளர் பி. டி. ராஜன் பார் அட்லா அவர்களையும் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்களையும் இச்சங்கம் முழுமனத்துடன் வாழ்த்துகிறது,

மேல்காணும் தீர்மானம் தலைவர் அவர்களால் பிரேரேபிக்கபட்டு யாவராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கபட்டது.

1. சென்ற 17-2-30 தேதியில் நிறைவேறிய தீர்மானத்தின் பிரகாரம் மதுரை சர்க்கில் தேவஸ்தானக் கமிட்டிக்கு இச்சங்கத்தின் தலைவரான திருவாளர் N. P. பழனிக்குமாரு முதலியார் அவர்களைப்போலுர் அங்கத்தினர் ஆக நியமனஞ் செய்யுமாறு கனம் முதன் மந்திரி அவர்களையே மறுமுறையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. இம்மதுரை நகர் கவுன்சிலில் தற்சமயம் காலியாயிருக்கும் அங்கத்தினர் ஸ்தானங்களிலொன்றுக்குத் தேர்தலில் வர முடியாத வகுப்பினரைச் சார்ந்த இச் சங்கம் செங்குந்த சமூகத்தினர் ஒருவரை நியமனம் செய்யுமாறு கனம் முதன் மந்திரியாரவர்களை மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

இவ்விரு தீர்மானங்களையும் திருவாளர். பி. வி. முத்துக்கருப்ப முதலியார் பிரேரேபிக்கத் திருவாளர் S. மாணிக்க முதலியார் ஆமோதிக்க ஏகமனதாய் நிறைவேறின.

பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

இப்படிக்கு,
S. Manicka Mudaliar,
5—11—30. Library Manager.

---

## இராமநாதபுரம் ஜில்லா

### தேவகோட்டை செங்குந்தர் அபிவிருத்தி வாசகசாலை

நெடுநாளாக இங்கு சங்கம் ஒன்று ஸ்தாபிக்க முயன்றும் சில அசந்தர்ப்பங்களால் தடைபெற்று வருகிறது. இக்கிளர்ச்சி 23-10-30-வது ஷை வாசகசாலை நிறுவப்பெற்றுத்திரு.K. கோவிந்த நாயர் உபாத்தியாயராக நியமிக்கப் பெற்றனர். அச்சமயம் செந்தமிழ்ச்செல்வ சைவ சித்தாந்தியும், ஸ்ரீமுருகாநந்த வைத்தியசாலை டாக்டருமாகிய உயர் S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியார் அவர்கள் நமது முன்னேற்றம் காருண்யம் முதலிய பல விஷயங்களைப்பற்றி உபந்யசித்தார். பின்னர் கூடிய சீக்கிரம் சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென ஏகமனதாய்த் தீர்மானிக்கப் பெற்றது. ஷை முதலியார் அவர்கள் இவ்விஷயத்தில் செய்யும் முயற்சி மறக்கற்பாலதன்று. அறுமுகப் பெருமான் அருள் புரிவாஞக.

### செங்குந்தர் வாலிபர் சங்கம். ஸ்ரீ வில்லி புதூர்.

14-11-30 வெள்ளிக் கிழமை மாலை 7-30- மணிக்கு ஸ்ரீ ஆனந்த விநாயகர் ஆலயத்தில் திரு. ச. சோமசுந்தர முதலியாரவர் அவர்கள் தலைமையில் ஷை சங்க கூட்டம் கூடியது அது சமயம் தலைவர் அவர்கள் முன்னுரையாக சங்கத்தின் அவசியமும்

வாசக சாலையும் என்னும் பொருள் பற்றி பேசினார். திரு. ஆ. ராமசாமி முதலியார் அவர்கள் பொது விஷயம் என்பதுபற்றி பேசினார்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) நடந்த தைமீ காஞ்சிபுரத்தில் கூட வேண்டிய இரண்டாவது மகாநாடு இதுகாறும் கூடாததை முன்னிட்டு இச்சங்கம் மிக வருந்துவதுடன் அதை அதி விரைவால் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யும்படி தலைச் சங்கத்தை மிக்க மன்றாடி கேட்டுக் கொள்கின்றது.

(2) நமது முதலாவது வர்த்தக மகா நாட்டு வரவேற்பு தலைவரும் பிரபல மிராசு தாரும் ஜில்லா போர்டு தாலுகா போர்டு மெம்பருமாகிய திருச்செங்கோடு உயர் திரு T. R. கந்தப்ப முதலியாரவர்கள் அகால மரணத்தை முன்னிட்டு இச்சங்கம் மிக்க வருந்துவதோடு திரு முதலியாரவர்களின் குடும்பத்தாருக்குஷை அனுதாபத்தை தெரிவித்தும் கொள்கின்றது.

(3) நமது செங்குந்த தலைவர்களில் ஒருவராகிய திரு. V. ரத்தின முதலியார் அவர்கள் விஷயமாக இதற்கு முன் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றி கவர்ன்மெண்டாரவர்களுக்கு சமர்ப்பித்திருந்தும் ஷை தீர்மானங்களைப் புறக்கணித்து விட்டமையை அறிந்து இச் சங்கம் மிக்க வருந்துகின்றது. மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியதும் திரு. சி. கு. சங்கரசுப்பு முதலியாரவர்கள் சபைக் கினிய கீதங்கள் பாடினார். கடைசியாக தலைவர் முடிவுரையுடன் வந்தனோபசாரம் கூற பெற்று இரவு 10-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

Somasundaramudaliar, Secratary.

---

## மலையாளம் ஜில்லா

### செங்குந்த வாலிபர் சங்கம், கோல்லங்கோடு

14-10-30-வது இரவு 9-மணிக்குத் தெற்குப் பாவடி பஜனை மடத்தில் திரு. S. சொக்க முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் அறிவாற்றல் குலாபிமான மாகியவை பொருந்திய திரு. V. இரத்தின முதலியார் B. A., B. L. அட்வொகேட் அவர்களை நமது வகுப்பினரின் பிரதிநிதியாகச் சென்னை சட்ட சபையில் நியமிக்க வேண்டுமென அரசாங்கத்தாருக்குக் சிபார்சு செய்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப் பெற்றது என திரு. S. சொக்கலிங்க முதலியார் எழுதுகிறார்.

---

## இலங்கை

### கொளும்பு செங்குந்த வர்த்தகர் சங்கம்

நமது செங்குந்த குலம் முன்னேற்றமடைய உழைத்து வருபவரும் தென் இந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சருமான திருவாளர். R. N. சபாபதி முதலியார் அவர்கள், இக் கொளும்பு மாநகருக்கு இம்முறை விஜயம் செய்த சமயம், ஷை சங்கத்தின் சார்பாக வரவேற்பு பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுக்க எவ்வளவோ ஏற்பாடுகள் செய்திருந்தும் சில சந்தர்ப்பக் குறைவினால் முடியாமல் போய் விட்டது. இப்போது ஷை யார்கள் இன்னம் இரண்டு மூன்று நாட்களில், தங்களின் ஜெனன பூமியாகிய திருவாரூருக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாகத் தெரிந்த படியால், 12-10-30 ஞாயிற்று கிழமை மாலை 7 மணிக்கு ஷை சங்க காரியாலயத்தில் திரு. தி. பழனியாண்டி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் பொதுக் கூட்டம் ஒன்று கூடி, அப்போது ஷை வரவேற்புப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்துள்ளோம். அச் சமயம் ஷை யார்களும் "நமது குல முன்னேற்றம்" என்பதுபற்றிச் சுமார் இரண்டு மணி நேரம் வரையில் சொற் பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவர் அவர்கள் முடிவுரை கூறியபின், சந்தன தாம்பூலங்கள் வழங்கப் பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

செங்குந்த வர்த்தக சங்கத்தார்,
கொளும்பு.

## ஒட்டக்கூத்தர் திருநாள்

### இளைஞர் கலாவிருத்திச் சங்கம்

நல்லூர் யாழ்ப்பாணம் இலங்கை

(கூத்தர் பெருமான் விண்ணுல கெய்தியபோது பாடியவை)

நாட்டிற் சிறந்தவரெல்லா நடுங்க நராதிபர்முன்
பூட்டு சிம்மாதனத் தாயிரத் தெண்மர்க்கும் [போனவுயிர்
மீட்ட கவிச்சக்கரவர்த்திக் கிங்கோர் சங்க [மேசனுக்குக்
கூட்டுவதோ வரிதையா குமார குலோத்துங்கனே.
(ஔவைமார்)

இன்றல்லோ ராசசபைக் கென்கவிதை யேற்குநா
ளென்ற வொன்றை வைத்தானியல் பெளிதோ [வன்றே
யிறவா நின்றேற் குயிரீவிக் கூத்தன் கீர்த்தி
மறவா நின் றுய்வனேமன்.
(கம்பர்)

ஒன்றை யுரைப்பனுயர் பாணினி புலகோகை [விட்ட
வன்றே யொழிந்த நல்லாரியச் செம்மை [யருளுருவக்
குன்றே யனையவிக் கூத்தனென் றேடுகுலாவல் [விட்ட
வின்றே யொழிந்த வியற்றமிழ்ச் செம்மை [யிருநிலத்தே
(இரண்டாங் குலோத்துங்கன்)




[ஜே. த. எழுதியது]

## தமிழ்க்கடல் வெளியீடுகள்.

தமிழ் வாரிதியின்கீழ் எழு மென்னுரையும் விழுமிய பொருளும் பொதிந்து விளங்கும் அரிய நூற்களாகிய மணிதாளங்கள் எண்ணற்றனவாய்க் குவிந்து கிடக்கின்றன வாயினும், அவை ஆழ அமிழ்ந்திருத்தலே அவற்றின் பெருமையை நாம் செவ்வனே உணராமைக் கொரு முக்கிய காரணமாகும், ஒவ்வொரு காலத் தெழும் ஒவ்வொரு அலையான் அத் திவ்விய பொருள்களின் பேரொளி விளக்கப்படுகிறதாயினும், அவை யனைத்தினது உண்மையையும் நாம் ஒருங்கே அறிந்து அனுபவித்தற்கேது கிடைத்திலது. அப்பெருங் குறை தீர்ப்பான் "தமிழ்க்கடல்" காரியாலயத்தார் மேற் கொண்ட பணியால் தமிழகத்துக்கு விளையும் பயன் சிறிதேயோ? அதுவே தமிழாரணங்கின் பழம் பணி புதுக்கும் பெருந் தொண்டாகும். ஒரு ஷில்லிங் பதிப்புக்களாகவும் இரண்டு ஷில்லிங் பதிப்புக்களாகவும் சிறந்த ஆங்கில நூல்களும் வெளிவருவதால் ஆங்கிலம் பயில்வோர் அடையும் நன்மையைக் கூற வேண்டா. அம்முறையைத் தழுவித் திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்களை ஆசிரியராகக் கொண்டு ஒற்றைப் ரூபாய்ப் பதிப்புக்களாக ஆத்திசூடி முதல் சங்கச் செய்யுட்கள் ஈறாகத் தமிழ்நூல்களை வரிசையாக வெளியிட முன் வந்த பெரியோர்களது தமிழபிமானம் மிகவும் போற்றத் தக்கதே. இவ்வரிசையில் இப்போது 'ஆத்திசூடி கொன்றை வேந்தன்' முதல் மலராக வந்துள்ளது. உயர்ந்த பெதர்வெயிட் காகிதத்தில் தெளிவாக அச்சிடப்பட்டு அழகாகக் கட்டடம் (Bind) செய்யப்பட்டுக் கண்கவர் வனப்புடன் விளங்கும். இதனைப் தமிழ் போன்ற நூற் பதிப்புக்கள் இதுவரை வெளி வந்ததில்லை யெனலாம்.

இவ்வரிசையில் மாதந்தோறும் ஒரு நூல் வெளிவரும். அதற்குக் கையொப்பமிடுவோர் ஒரு ரூபாய் முற்பணமாகச் செலுத்தவேண்டும். அங்ஙனம் செலுத்துவோர் ஒவ்வொரு புத்தகத்தையும் முக்கால் விலைக்குப் பெறலாம். அதுகிடைக்குமிடம்,

"தமிழ்க்கடல் ஆபீஸ்",
சாந்தோம், சென்னை.

---

மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்கள் பரிசோதித்து நூதனக் குறிப்புரை முதலியவற்றுடன் வெளியிட்டுள்ள "மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது" திருவாளர் இராமையர் இயற்றிய "திருமயிலைத்திரிபந்தாதி" ஆகிய இரண்டு நூற்களும் எமது மதிப்புரைக்குக் கிடைத்தன. தமிழ் மொழியின் பெருமையை விளக்குமுகத்தான் அம்மொழியிலுள்ள அரும் பெரும் நூல்களைப் பழைய உரைகளுடனும் புதிதாக எழுதப்பட்ட சிறந்த குறிப்புகளுடனும் வெளியிடுவதைத் தாம் தமிழ்த் தாய்க் காற்றும் முதற் கடமையாகக் கொண்ட திருவாளர் ஐயரவர்களது ஆதரவு பெற்று இவ்விரு நூற்களும் வெளிவந்தமை மிகவும் பாராட்டத் தக்கதே.

இவ்விரண்டும் அவ்வைந்து அணா விலையுள்ளவை. இவற்றை ஷை பதிப்பாசிரியரிடமே,

சென்னை திருவேட்டீசுவரன் பேட்டை
தியாகராஜவிலாசத்திற் பெறலாம்.

[452-வது பக்கத் தொடர்ச்சி]

ஒட்டக்கூத்தப் பெருமானின் திருநாளாகிய 4-9-30-வது பகல் செங்குந்தர் வீதிக் கொடித்தேர் மடாலயத்தில் (திருநெல்வேலி கிழக்கு) எழுந்தருளி யிருக்கும் முருகப் பெருமானுக்கும், ஒட்டக்கூத்தப் பெருமானின் திரு உருவப்படத்திற்கும் பூமாலைகள் சாற்றித் தூபதீப நைவேத்தியங்கள் செய்யப்பட்டது. பிற்பாதி அன்னதானம் வழங்கி மேளவாத்தியத்துடனும், செங்குந்தர் தசாங்கங்களாகிய ஈட்டி, குடை, கொடி முதலிய விருதுகளுடனும் எம்பெருமானின் திருவுருவப் படத்தை யாளிகள் பூட்டி அலங்கரிக்கப்பட்ட பவழக்காற்தேரில் வைத்துச் வீதி யுலம் வந்து பூசையானவுடன் குலகுரு இ. சி. விநாயக தேசிகர் அவர்களின் தலைமையின்கீழ்த் திரு. வீ. செல்லையா உபாத்தியாயரும், திரு. பி. க. கணேச முதலியாரும் நம் ஒட்டக்கூத்தப் பெருமானின் சரித்திரத்தை யொட்டிப் பெருஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதன் பின்னர் இரவு பத்து மணி யளவில் கூட்டம் குதூகலத்துடன் இனிது முடிந்தது.

இவ்விழாவிற்குப் பல வகையிலும் பேருதவி செய்த திருவாளர்கள் வ. சுந்தர முதலியார் திரு கந்தையா, நல்லூர் சந்தையடி வியாபாரிகள், வடஇலங்கைச் செங்குந்த சங்கத்தார், இராமலிங்க முதலியார் முதலிய ஏனைய செங்குந்தர்களுக்கும் இச்சங்கப் பாலியர்கள் தங்கள் தாழ்மையுள்ள நன்றி யறிதலைச் செலுத்துகிறார்கள்.

வி. சீ. செல்வதுரை முதலியார்

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

பிரமோதூதஞு மார்கழிமீ (1930ஞு டிசம்பர்மீ-ஜனவரிமீ (தக்ஷிணாயனம், சரத்ருது

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய சிரார்த்த திதி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டிசம்பர்மீ 16 | மார்கழிமீ 1 | செ | ஏகா 4-58 | சு 37-23 | அ 37-23 ம | 1 | ½ | துவா | மேற்கு | |
| 17 | 2 | புத | துவா 2-48 | விசா 37-10 | சி 60 | 0 | ½ | திர | வடமே | |
| 18 | 3 | வியா | திர 1-15 | அனு 37-43 | சி 37-43 பி | 0 | ½ | சது | வடகிழ | |
| 19 | 4 | வெ | சது 0-43 | கே 39-10 | ம 39-10 அ | 0 | 0 | அமா | ஆகாச | அமாவாசை |
| 20 | 5 | சனி | அ● 1-3 | மூ 4..45 | சி 60 | 0 | 0 | பிர | பூமி | |
| 21 | 6 | ஞா | பிர 2-40 | பூர 44-5 | சி 44-5 அ | 0 | 0 | துதி | கிழக்கு | |
| 22 | 7 | திங் | துதி 5-33 | உத் 50-15 | ம 50-15 அ | 0 | ½ | திரி | வடக்கு | |
| 23 | 8 | செ | திரி 9-33 | தி 56-23 | சி 60 | 0 | ½ | சது | தென்கி | |
| 24 | 9 | புத | சது 14-45 | அவி 60... | பி 60 | 1 | ½ | பஞ் | தெமே | |
| 25 | 10 | வியா | பஞ் 20-58 | அவி 3-25 | சி 3-25 ம | 1 | ½ | சஷ் | தெற்கு | |
| 26 | 11 | வெ | சஷ் 27-40 | ச 11-0 | சி 60 | 1 | ½ | ... | மேற்கு | |
| 27 | 12 | சனி | சப் 34-15 | பூர 18-45 | ம 18-45 சி | 1 | ½ | சப் | வடமே | |
| 28 | 13 | ஞா | அஷ் 40-0 | உத் 25-53 | அ 60 | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 29 | 14 | திங் | நவ 44-20 | ரேவ 31-48 | சி 60 | 1 | ½ | நவ | ஆகாசம் | |
| 30 | 15 | செ | தச 46-53 | அ 36-0 | சி 60 | 2 | ½ | தச | பூமி | |
| 31 | 16 | புத | ஏகா 47-20 | பர 38-13 | சி 38-13 அ | 2 | 0 | ஏகா | கிழக்கு | வைகுண்ட ஏகாத[சி] |
| ஜனவரிமீ 1 | 17 | வியா | துவா 45-50 | ※கி 37-58 | ம 60 | 2 | 1 | துவா | வடக்கு | கிருத்திகை |
| 2 | 18 | வெ | திர 42-5 | ரோ 36-35 | ம 36-35 சி | 2 | 1 | திர | தெகிழ | |
| 3 | 19 | சனி | சது 36-48 | மிரு 33-10 | சி 60 | 2 | 1 | சது | தெமே | |
| 4 | 20 | ஞா | ◯பௌ 30-13 | திரு 28-20 | சி 60 | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 5 | 21 | திங் | பிர 22-50 | புன 22-38 | அ 22-38 சி | 2 | 1 | பிர | மேற்கு | ஆருத்திரா தரிசன[ம்] |
| 6 | 22 | செ | துதி 15-0 | பூச 16-35 | சி 60 | 2 | 1 | துவி | வடமே | |
| 7 | 23 | புத | திரி 7-8<br>சது 59-33 | ஆ 10-30 | சி 60 | 2 | 1 | திரி<br>சது | வடகிழ | |
| 8 | 24 | வியா | பஞ் 52-40 | ம 4-45<br>பூர 59-48 | அ 4-45 சி | 2 | 1 | பஞ் | பூமி | |
| 9 | 25 | வெ | சஷ் 46-50 | உத் 55-48 | சி 55-48 அ | 2 | ½ | சஷ் | கிழக்கு | |
| 10 | 26 | சனி | சப் 42-8 | அஸ் 52-58 | ம 60 | 1 | ½ | சப் | வடக்கு | |
| 11 | 27 | ஞா | அஷ் 38-33 | சித் 51-20 | சி 60 | 1 | ½ | அஷ் | தென்கி | |
| 12 | 28 | திங் | நவ 36-15 | சுவா 50-43 | அ 50-43 சி | 1 | ½ | நவ | தெமே | |
| 13 | 29 | செ | தச 34-55 | விசா 51-15 | ம 51-15 சி | 1 | ½ | தச | தெற்கு | போகி பண்டிகை |

158854




12-?-29 — சேர்மனுப்பட்டி.

ஐயா, ** மின்சார ரசத்தை எருமை வெண்ணையில் கலந்து சாப்பிட்டதில் வெள்ளை, வெட்டை சவுரியமாய் விட்டது. தயவு செய்து 3-புட்டி அனுப்புங்கள்.

தொரீத் செட்டியார், வாடிபட்டி போஸ்டு.

# மின்சார ரசம்

சகல ரோகங்களுக்கும் தேவர்மிர்தம் போன்றதென ஜகப்பிரசித்திப் பெற்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:— கேட்லாக் இனம்.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்

ஆரணி 21-5-29

ஐயா,

** 6-வேளை மின்சார ரசம் மருந்தில் கால் விழுந்து கிடந்த நோய் தீர்ந்தது இன்னும் 2-பாட்டல் அனுப்புங்கள்

M. A. அனவர்தார் பாகவதர், பிந்சல் தெரு.

ஐயா, — ராசிப்பாளையம் கிராமம்

மின்சார ரசம் வாங்கி 4½-வருஷமாக இருந்த விப்புருதி 10-நாட்களுக்குள் புண் ஆறிப் போனபடியால் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி அனுப்புங்கள்.

க. அ. அங்கப்ப தேவர், சூலூர் போஸ்டு.

ஐயா — Champion Reefs, 27-1-30

என் மனைவிக்கு 7 வருஷ காலமாக என்னால் இயன்ற வரை ஏராளமான பணத்தைச் செலவு செய்து தீராமலிருந்த வியாதி தங்கள் மின்சார ரசத்தினால் சௌக்கியமாய் விட்டது இன்னும் ஒரு பாட்டல் அனுப்புங்கள்.

R. V. Kattamar', G. Block, 53rd Line

## மதன சுந்தரி மாத்திரைகள்

இம்மாத்திரையை உட்கொண்டவர்களுக்கு சிற்றின்பம் இன்னதெனப் பூர்த்தியாய் விளங்கும். இந்திரபோகத்தைத் தரும். ஆண்தன்மை குன்றியவர்களுக்கும் சக்தி இல்லாதவர்களுக்கும் இது சஞ்சீவிபோன்றது. தேகவலிமை நரம்புகளுக்குச் சக்தியும் உண்டாக்குவதன்றி இருபாலார்க்கும் இன்பத்தை யுண்டாக்கும். ஒரு தடவை இம்மாத்திரைகளை உண்டு அனுபவித்தவர்களுக்கு நாங்கள் மறுபடியும் சொல்ல வேண்டுவது இல்லை. வே தேவாமிர்தம்.

இதன் விலை டப்பி 1-க்கு ரூ. 1—0—0

தபால் செலவு பிரத்தியேகம்

ரூபிஸ் பெஸிபிக் ஔஷதாலயம்,

நெ. 30, நம்மாழ்வார் தெரு, மதராஸ்.

## நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 4 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத்தெருவு, சென்னை.

Registered No. M. 1514


உயிரெழுத்து

# மூலிகைமர்மம் 4-பாகம்

முன்னோர்களால் கையாண்டுவந்த பூர்விக சாஸ்திரம்

1 மூலிகை மர்மம் முதலாம் பாகத்தில் பிரம சிருஷ்டியால் உலகத்திலுண்டாயிருக்கும் 600-வித மூலிகையின் தலையெழுத்துக்களை அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஒ-ஓ ஆகிய உயிர் மெய்யெழுத்துக்களின் வரிசைக் கிரமம்போல் பிரித்து ஒவ்வொரு மூலிகையால் நிவர்த்தியாகக் கூடிய வியாதிகளையும் வியாதிகளுக்கு இன்னின்ன விதமாய் உபயோகிக்க வேண்டுமென்ற செய்முறையும் ஆயுர்வேத விதிப்படி அச்சிட்டிருக்கின்றது.

2, இரண்டாம் பாகத்தில் அளவிறந்த ரோக பாகங்களை அங்கன்சனியா விதிப்படி சிரரோகம், நேத்திரரோகம் தந்தரோகம், நாசிரோகம் செவிரோகம், சுரரோகம், கண்டமாலை, அறையாப்பு, பிரமியங், மூலம், பவுத்திரம், நீரடைப்பு, நீர்க்கட்டு, தாருட்டிய விருத்தி முதலான ரோக பாகங்களை பாதாதிகேசம் வரையில் அங்கம் பிரித்து கைபாகம் செய்பாகத்தோடு அச்சிட்டிருக்கின்றது.

3. மூன்றாவது பாகத்தில் அஷ்டகர்மமென்னும் வசிய மூலிகை, மோகன மூலிகை, தம்பன மூலிகை, உச்சாடான மூலிகை, (எட்டெட்டு) 64 மூலிகையும் இன்னின்ன பாகத்திற்குபயோகமாகுமென்பதையும் அவைகளை யெடுப்பதற்கு அதர்வண வேதப்படி காலம் வாரம் ஒரே பூசைமந்திரம் யிவற்றுடன் அநேக மோகசாந்தி மூலிகையும் செய்பாகமும் அச்சிட்டிருக்கின்றது.

4 நான்காம் பாகத்தில் பெண்பாலுக்குரிய வியாதி கூட்டங்களை, அங்கம் பிரித்து பிள்ளையில்லாதவர்க்கு, பாலில்லாதவர்க்கு, பால் அதிகப்பட்டவர்களுக்கு, ருதுவில்லாதவர்க்கு மாத முழுக்கில்லாதவர்க்கு, சூதகக்கட்டுக்கு, பெரும்பாட்டுக்கு, ஜன்னிகளுக்குஇன்னும் அநேக வியாதிகளுக்கு இம்மாதிரி ரோகபாகங்களைப் பிரித்து அனேக அரிய பெரியமூலிகையின் உபயோகம் கைபாகம்செய்பாகத்துடன் அச்சிட்டிருக்கின்றது.

நான்கு பாகமும் ஒரே கட்டடம் புக்காலிக்கோ பயிண்டு விலை ரூபா **3**.

**சவுத் இந்தியன் புக் டிபோ,**
2/17, பவழக்காரத் தெரு, சென்னை

# நாவல்கள்! கதைப் புத்தகங்கள்!

தற்கால நாகரீகத்துக் கேற்றவாறு, உயர்தரம் நாவல்களும், துப்பறியும் நாவல்களும், படிக்கப் படிக்கத் திகட்டாத இன்பத்தைத் தரும் அற்புத நவீன கதைகளும், மற்றும், வைத்தியம், மாந்திரீகம், ஜோசியம் முதலிய எல்லாவித புத்தகங்களும் சப்ளை செய்யப்படும்.

செங்குந்த மித்திரன் புத்தகசாலை,
செங்குந்த மித்திரன் ஆபீஸ்
கீழ்ப்பாக்கம் சென்னை.


This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |